रामो रामो राम इति
प्रजानां अभवन् कथा:

ராமோ ராமோ ராம இதி
ப்ரஜாநாம் அபவன் கதா:

பொருளடக்கம்

1) ஸீதாதேவி ஸ்ரீராமரோடு மகிழ்ச்சியாக இருந்த பொழுதுகள்.................. 2
2) முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ 12
3) குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் 17
4) ராமனே என் தெய்வம்; ஏக பக்திர் விஷிஷ்யதே 25
5) யஸ்ய ஸ்ரீ ஹனுமான் அனுக்ரஹ பலாத்... 32
6) ஜகன்மாதா ஸீதாதேவியின் அளவற்ற கருணை..................................... 40
7) லக்ஷ்மணனுடைய உண்மையான ப்ராத்ருபக்தி 46
8) ராமாயணம் காட்டும் இல்லற இலக்கணம்... 54
9) ஹனுமத் பிரபாவம் 65
10) சம்பாதி கழுகுக்கு நிஷாகர மகரிஷி செய்த அனுக்ரஹம் 73
11) பூயோ விநயம் ஆஸ்தாய பவ நித்யம் ஜிதேந்த்ரிய:............................... 82
12) ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவன் கதா: 88

ஸீதாதேவி ஸ்ரீராமரோடு மகிழ்ச்சியாக இருந்த பொழுதுகள்

अर्थसिद्ध्यै हरिश्रेष्ठ गच्छ सौम्य यथासुखम्। समानयस्व वैदेहीं राघवेण महात्मना।।

அர்த்தஸித்யை ஹரிஸ்ரேஷ்ட கச்ச ஸௌம்ய யதாஸுகம் |

ஸமானயஸ்வ வைதேஹீம் ராகவேன மஹாத்மனா ||

மைனாக மலைகிட்ட விடை பெற்றுக்கொண்டு, ஹனுமார் ஆகாசத்துல போகும் போது, ஸுரசா, அப்டீங்கிற ஒரு நாக மாதாவை பார்த்து தேவர்கள், "நீ போயி இந்த ஹனுமாருக்கு, எதாவது ஒரு தடை உண்டு பண்ணு. அவர் அதை, புத்தியினால ஜெயிச்சுண்டு போறாரா, இல்லை மனம் தளர்ந்து போறாரா அப்படீன்னு பாக்கணும்"னு சொல்றா. அந்த நாக மாதா தக்ஷனோட பொண்ணு. "தாக்ஷாயிணி நமோஸ்து தே" அப்படீன்னு ஹனுமார் சொல்லி, நமஸ்காரம் பண்ணி, "எனக்கு வழி விடு. நான் ராம காரியமா போயிண்டு இருக்கேன்" அப்படீன்னு சொல்றார். அப்போ அந்த ஸுரசா சொல்றா, "இல்லை. தேவர்கள் எனக்கு வரம் கொடுத்துருக்கா. நான் இன்னிக்கு உன்னை சாப்பிடப் போறேன். நீ என் வாய்க்குள்ள நுழைஞ்சுட்டு தான் போகணும்" அப்படீன்னு சொல்றா.

அப்போ ஹனுமார், ராம கதையை சொல்றார். எப்பவுமே ராமர் கதைய சொன்னா அவருக்கு ஜயம்தான். ருக்ஷ பிலம்னு ஒரு குகைக்குள்ள மாட்டிண்டுடறா அவா வானரா எல்லாம். வழியே தெரியலை. அப்போ அங்க ஸ்வயம்பிரபான்னு ஒரு தபஸ்வி இருக்கா. அவகிட்ட, ஹனுமார் அப்போ ராம கதையை சொன்ன உடனே, அவள் தன் தபோபலத்துனால வெளியில கொண்டு வந்து விடறா. அப்புறம் சம்பாதி கிட்டயும் ராம கதையை சொல்றா. அவர் வழி காண்பிக்கறார். எங்க இருக்கா சீதை அப்டீன்ன உடனே, இலங்கையில இருக்கான்னு சொல்லி கொடுக்கறார்.

இங்க ஸுரசை கிட்டயும் ராம கதையை சொல்றார். ஸீதாதேவி கிட்டயும் மரத்துமேல உட்கார்ந்து ராம கதையை சொல்லி, அவ மனசை சமாதானம் பண்ணி, அவ உயிரை காப்பாத்தறார். இப்படி ராம கதை சொன்னா நமக்கு எங்கும் வெற்றிதானே அப்டீங்கிறதுனால, இந்த ஸுரசைகிட்டையும் ராம கதையை சொல்றார். அவ ஆனாலும் "நீ என் வாய்க்குள்ள போகணும்", அப்டீன்னு சொன்ன உடனே, ஹனுமார் பாக்கறார். என்னடா இது, அப்டீன்னுட்டு, பெரிய உருவம் எடுத்து, "நான் இவ்வளோ பெரிய உருவமா இருக்கேன், எப்படி உன்னோட வாய்க்குள்ள போவேன்"னு கேட்கறார். அப்போ அவ இன்னும் பெருசா உருவம் எடுக்கறா, இவரும் பெருசா உருவம் எடுக்கறார். அப்படி ஆகாசத்துக்கும் கடலுக்கும் நடுவுல வாயை ஓன்னு அவ திறந்துண்டு இருக்கும்போது, ஹனுமார் ஒரு கட்டைவிரல் அளவுக்கு ஆகி, அவ

வாய்க்குள்ள போயிட்டு வெளியில வந்துடறார். "அம்மா, உன் வாய்க்குள்ள போகணும்னு சொன்ன, போயிட்டு வந்துட்டேன், நீ வழிவிடு" அப்டீன்னு சொல்றார். உடனே, அவளும், "சரிப்பா, நீ சொன்ன வார்த்தையை பண்ணிட்ட. இனிமே நான் உன்னை தடுக்க மாட்டேன்"

அர்த்தஸித்யை ஹரிஸ்ரேஷ்ட கச்ச ஸௌம்ய யதாஸுகம் |

ஸமானயஸ்வ வைதேஹீம் ராகவேன மஹாத்மனா ||

அர்த்தஸித்யை ஹரிஸ்ரேஷ்ட - உன் கார்யம் வெற்றி அடையும் பொருட்டு, கச்ச ஸௌம்ய யதாஸுகம் - நீ நல்லபடியாக போயிட்டு வா. ஹரிஸ்ரேஷ்ட - வானரர்களில் ஸ்ரேஷ்டமானவனே, ஸௌம்யமானவனே, கச்ச யதாஸுகம் - உன்னிஷ்டபடி போ, ஸமானயஸ்வ வைதேஹீம் ராகவேன மஹாத்மனா - ராமரையும் ஸீதாதேவியையும் சேர்த்துவை அப்டீன்னு சொல்றா. இந்த ஸ்லோகத்தை, தம்பதிகள் மனஸ்தாபமா இருந்தாலோ, பிரிஞ்சு இருந்தாலோ, இந்த ஸ்லோகத்தை சொல்லி, ஸுந்தரகாண்ட ஆவர்த்தியின் போது, ஸ்வாமிகள் வேண்டிப்பார். அவா சேர்ந்துடுவா. அப்டீன்னு ஒரு மஹா மந்த்ரமாக இந்த ஸ்லோகம் எவ்வளோவோ பேரை சேர்த்து வெச்சிருக்கு. நான் பாத்துருக்கேன். இந்த மாதிரி தம்பதிகளுக்குள்ள ஒற்றுமைக்காகவும், பிரிந்த தம்பதிகள் சேருவதற்காக, ஹனுமாரைத் தானே நாம வேண்டிக்க முடியும். அவர்தான், ராமரையும் சீதையையும் பிரிஞ்சு இருந்தவாளை சேர்த்து வெச்சார், அதுனால அந்த ஹனுமாரிடம் பிரார்த்தனை பண்ணிண்டு ஸ்வாமிகள், ஸுந்தரகாண்டத்தை படிக்கும்போது, இந்த ஸ்லோகத்தை சொல்லுவார்.

இந்த ஸ்லோகத்தை படிக்கும் போது, ஸீதாதேவி, முதலில் எவ்ளோ சந்தோஷமா இருந்தா என்பதையும் நினைக்கணும் என்று தோன்றுகிறது. ஸீதா கல்யாணத்தும் போது, ஜனக மஹாராஜா, சீதையோட கைகளை எடுத்து, ராமரோட கைகள்ல வெச்சு,

इयं सीता मम सुता सहधर्मचरी तव ।

प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृह्णीष्व पाणिना ।।

पतिव्रता महाभागा छायेवानुगता सदा ।

इत्युक्त्वा प्राक्षिपद्राजा मन्त्रपूतं जलं तदा ।।

இயம் ஸீதா மம ஸுதா ஸஹ தர்ம சரீதவ |

ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிம் க்ருஷ்ணீஷ்வ பாணிநா ||

பதிவ்ரதா மஹாபாகா சாயேவானு கதா ஸதா|

இத்யுக்த்வா ப்ராக்ஷிபத் ராஜா மந்த்ரபூதம் ஜலம் ததா ||

அப்டீன்னு "இந்த சீதை, என் மகள், பதிவ்ரதை, இவள் நிழல் போல உன்னை எங்கும் பின் தொடர்வாள், இவள் ரொம்ப பாக்யவதி, இவளை ஏற்றுக் கொள்" அப்டீன்னு, சொல்றார். அப்படி சொல்லிட்டு, கையில ஜலத்தை விட்டு, தாரை வார்த்துக் கொடுக்கறார். மந்திர பூதமான அந்த ஜலத்தை விட்டு சீதையை கன்னிகா தானம் பண்ணிக் கொடுக்கறார் ஜனகர். இந்த ஸ்லோகங்களே ஒரு மந்த்ரம்.

அப்புறம் ஊர்மிளையை, லக்ஷ்மணனுக்கு கல்யாணம் பண்ணி கொடுக்கறார், மாண்டவியை பரதனுக்கும், சத்ருக்னனுக்கு, ஸ்ருதகீர்த்தியையும் கன்யாதானம் பண்ணி கொடுக்கறார். நாலு பேருக்கும் ஒரே முஹூர்த்ததுல, உத்திர நக்ஷத்ரத்துல, கல்யாணம் பண்ணி கொடுக்கறார். அப்புறம் பன்னிரெண்டு வருஷங்கள் சீதை ராமரோட, அயோத்தில சௌக்யமா இருக்கா, அப்டீன்னு, அந்த இடத்துல சில ஸ்லோகங்கள் இருக்கு, அதெல்லாம் அவ்ளோ அழகா இருக்கு.

रामस्तु सीतया सार्धं विजहार बहूनृतून् । ராமஸ்து சீதையா ஸார்த்தம் விஜஹார பஹூன் ருதூன் - பல ருதுக்கள், ராமர் சீதையோடு, பன்னிரண்டு வருஷங்கள், ஒவ்வொரு வருஷத்துக்கும் ஆறு ஆறு ருதுக்கள், ராமர் சீதையோட சந்தோஷமா இருந்தார். ஒவ்வொரு ருதுவுலேயும் சீதையோடு சந்தோஷமா இருந்தான்னா, அந்தந்த ருதுவுல, வெயில் காலம்னா இளநீர், குளிர் காலம்னா, ஒரு சூடான கஞ்சி அந்த மாதிரி, அந்தந்த ருதுக்களோட போகங்கள் என்னவோ, அதெல்லாம், அனுபவிச்சுண்டு ரொம்ப சந்தோஷமா இருந்தா.

मनस्वी तद्गतस्तस्याः नित्यं हृदि समर्पित:।। மனஸ்வீ தத்கதமனா: நித்யம் ஹ்ருதி ஸமர்பித: - சீதை தன்னோட மனசை முழுக்க ராமருக்கு ஸமர்ப்பணம் பண்ணிட்டா प्रिया तु सीता रामस्य दारा: पितृकृता इति। ப்ரியா து ராமஸ்ய தாரா பித்ருகிருதா இதி - இந்த சீதை ராமனுக்கு, தன்னுடைய அப்பா பார்த்து வெச்ச

பெண் என்பதனால் ரொம்ப பிரியமானவளாக இருந்தாள், அப்டீன்னு, சொல்றார். அந்த மாதிரி arranged marriage உடைய, சந்தோஷம் அது, அதை அனுபவிச்சவாளுக்கு, தெரியும்.

गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत।। குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீத்திர் பூயோப்யவர்த்தத: - சீதையோட குணத்துனாலயும், அவளோட அன்புக்கு கட்டுப்பட்டு அதுல சந்தோஷம் அடைந்தார். அவளுடைய அழகுனாலயும் அவள்கிட்ட பிரியமா இருந்தார். இந்த ரெண்டுனாலேயும் प्रीतिर्भूयोऽभ्यवर्धत ப்ரீத்திர் பூயோப்யவர்த்தத: - ராமருடைய ப்ரீத்தி சீதைகிட்ட மேலும் மேலும் வளர்ந்துண்டே போச்சு तस्याश्च भर्ता द्विगुणं हृदये परिवर्तते। தஸ்யாஸ்ச பார்த்தா த்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே - சீதைக்கு அதுபோல ரெண்டு மடங்கு அன்பு, ராமர் மேல நிரம்பி இருந்தாள். अन्तर्जातमपि व्यक्तमाख्याति हृदयं हृदा அந்தர்ஜாதமபி வ்யக்தம் ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா - இவா ரெண்டு பேரும் பேசிக்கவே இல்லையாம். மனசும் மனசும், பேசிக் கொண்டது, அப்டீன்னு சொல்றார்.

அந்த மாதிரி, எங்க அப்பா அம்மா ஐம்பது வருஷம், ரொம்ப அன்யோன்ய தம்பதிகள். எத்தனையோ ஜென்மங்கள் அவா கணவன் மனைவியா இருந்திருப்பா. எங்க அப்பா அம்மா அதிகம் பேசியே நான் பார்த்தது கிடையாது. கார்த்தால எழுந்துண்டார்னா, எங்க அப்பா ரெண்டு மணிநேரம் சிவபூஜை பண்ணிட்டு, சாப்டுட்டு office கிளம்பி போவார். சாயங்காலம் வந்தா திருப்புகழ், பஜனை, இப்படி போகும். அவா எப்ப தான் பேசிப்பான்னு எனக்கு ஆச்சர்யமா இருக்கும். ஆனா அவா கிட்ட டிமிக்கியே கொடுக்க முடியாது. அப்பாகிட்ட ஒண்ணு சொல்லிட்டு, அம்மாகிட்ட ஒண்ணு சொல்ல முடியாது. ரெண்டு பேரும் ஒரே மாதிரி, எண்ணமா இருப்பா.

அந்த மாதிரி மனசும், மனசும் பேசிக்கறதுங்கிறது, இந்த காலத்துலேயே நாம பார்த்துருக்கோம்னா, ராமரும் சீதையும் கேட்கணுமா. देवताभि स्समा रूपे सीता श्रीरिव रूपिणी தேவதாபி: ஸமா ரூபே ஸீதா ஶ்ரீரிவ ரூபிணி - ஸீதா தேவி லக்ஷ்மி தேவி போல விளங்கினாள்.

तया स राजर्षिसुतोऽभिरामया समेयिवानुत्तमराजकन्यया ।

अतीव राम श्शुशुभेऽतिकामया विभु श्श्रिया विष्णुरिवामरेश्वर:।।

தயா ஸ ராஜர்ஷி ஸூதோபிராமயா சமேயிவாநுத்தமராஜ கன்யயா |

அதீவ ராம: ஷுஷுபேதிகாமயா விபு: ஶ்ரீயா விஷ்ணுரிவாமரேச்வர ||

அந்த ராஜரிஷியின் பெண்ணான, அழகான சீதை, உத்தமமான ராஜ கன்னிகை, ராமரோடு சேர்ந்து, சுகங்களை அனுபவித்துக் கொண்டு, லக்ஷ்மி தேவி விஷ்ணுவோடு இருப்பது போல, சௌக்யமாக இருந்தாள், அப்டீன்னு இந்த ஒரு ஸ்லோகம்.

இப்படி இவா ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தது பாலகாண்டத்துல வரது.

கல்யாண நாள், கல்யாணம்கிறது, பெண்களுக்கு, அதை பத்தி நினைக்கறதே ஒரு சந்தோஷம், அப்டீங்கிற மாதிரி, இந்த அனுசுயா தேவி, அத்ரி முனிவருடைய மனைவி, அவளை போயி ராமரும், சீதையும், லக்ஷ்மணனுமா, அத்ரி அனுசுயா தேவியை நமஸ்காரம் பண்றா. அப்போ அனுசுயா தேவி சீதைகிட்ட "நீ இந்த மாதிரி பேச்சு துணைக்கு ஆளில்லாத காட்டுக்கு, கணவன் தான் முக்யம்னு வந்துருக்க", அப்டீன்னு சொல்றா. அந்த மாதிரி பெண்கள், எது இல்லாமலும் இருந்துடுவா, ஆனா பேச்சு துணை இல்லேன்னா ரொம்ப கஷ்டப் படுவா. ஆனா, அது கூட வேண்டாம் அப்டீன்னு, சுகங்களை விடறது எல்லாம் கூட ஆச்சர்யம் இல்லை. friends எல்லாம் விட்டுட்டு வந்து இந்த காட்டுல, ராமரோட, கணவரோட இருக்கணும்னு வந்தியே, அது தாம்மா தர்மம்" அப்டீன்னு அந்த அனுசுயா தேவி கொண்டாடறா. "நல்லவனோ, கெட்டவனோ, ஏழையோ, பணக்காரனோ, கணவன்தான் ஒரு பெண்ணுக்கு தெய்வம். அவனுக்கு சிஸ்ருஷை பண்றதுதான் ஒரு பெண்ணுக்கு, எல்லாத்துக்கும் மேலான கடமை" அப்படீன்னு சொல்றா.

அதுக்கு சீதை சொல்றா. "ஆமாம் அம்மா, அக்னி முன்னாடி எங்கம்மாவும் இதை சொல்லி கொடுத்தா, கல்யாண காலத்துல, காட்டுக்கு கிளம்பும் போது, என்னுடைய மாமியாரும் அதை சொன்னா, இப்ப நீங்களும் இதை சொல்றேள். எனக்கு இன்னொரு தடவை அதை ஞாபகப் படுத்தற, மாதிரி, புதுப்பிச்ச மாதிரி ஆயிடுத்து". எல்லாரும் இதையே சொல்றேளே அப்டீன்னு சொல்லலை, இப்படி கௌரவப் படுத்தி சொல்றா. குழந்தை எவ்வளவு அழகா பேசறாளே,

அப்டீன்னு, அந்த அனுசுயை சந்தோஷப் படறா. இன்னொன்னு சொல்றா, சீதை, "ரொம்ப, கணவன் தூர்த்தனா ,பொல்லாதவனா இருந்தாக் கூட அவன்கிட்ட அன்பா இருக்கணும்னு, சொல்வா. என் கணவன் 'மாத்ரு வத் பித்ரு வத் ப்ரிய:' என்னுடைய அம்மா போலயும், அப்பா போலயும் என்கிட்ட இந்த ராமர், அவ்வளவு அன்பா இருக்கார். அவர் குணமே வடிவானவர், எல்லா நற்குணங்களும் பொருந்தியவர், அதனால அவரை விட்டுட்டு நான் எப்படி இருப்பேன், அதனால நான் அவர் கூட வந்துட்டேன்" அப்டீன்னு சொல்றா.

அப்போ அனுசுயை ரொம்ப சந்தோஷப் பட்டு, "உனக்கு, என்ன வேணுமோ கேளு, எனக்கு தபஸ் இருக்கு, என் சந்தோஷத்துக்காக நீ எதையாவது கேளு, நான் தரேன்", அப்டீன்னா, எனக்கு எல்லாமே இருக்கே, அப்டீன்னு சொல்றா சீதை. அதாவது, "எனக்கு ஒண்ணும் கஷ்டமே இல்லை", அப்டீன்ன உடனே, இன்னும் சந்தோஷம் அனுசுயைக்கு. அப்போ வாடாத மாலைகள், காயாத சந்தனம், கருகாத நகைகள் எல்லாத்தையும் தபஸ் மூலமாக வர வெச்சு, பூச்சுகள் எல்லாம் போட்டு, சீதையை அலங்காரம் பண்ணி ராமரோட சேர்த்து பாக்கறா.

அப்புறம் ஸீதா தேவிகிட்ட அனுசுயா தேவி, "சுயம்வரம் மூலமா ராமர் உன்னை அடைஞ்சார்னு கேள்வி பட்டிருக்கேன், அந்த கதையை சொல்லேன்", அப்டீன்னு கேட்கறா, சீதை, ரொம்ப சந்தோஷமா சொல்ல ஆரம்பிக்கறா. "நான், ஜனக மஹாராஜா கலப்பையை உழும்போது, பூமியில இருந்து, நான் கிடைச்சேன். அவர், ஆஹா, இவ என்னோட குழந்தை, என் பெண் குழந்தை, நான் வளர்க்கப் போறேன்" அப்டீன்னு சொன்ன உடனே, ஆகாசத்துல அசரீரீ கேட்டது, "ஆமா, இவள் உன்னுடைய பெண்தான், இவளை வளர்த்துண்டு வா" அப்டீன்னு சொன்ன உடனே, ரொம்ப சந்தோஷமா எடுத்து உச்சி முகர்ந்து, அவர் எடுத்துண்டு வந்து, தன்னுடைய மனைவி கிட்ட கொடுத்தார், அவாளும் என்னை, தன்னுடைய அம்மா போல வளர்த்தா.

அப்புறம் தக்க வயசு வந்த உடனே, எனக்கு நல்ல மாப்பிள்ளையா வரணுமேன்னு ஜனக மஹாராஜா கவலைப் பட்டார். அவர் கிட்ட, ஒரு சிவ தனுசு இருந்தது, "யாரு இதை வளைச்சு நாண் பூட்டராளோ அவாளுக்கு நான்

என் பெண் சீதையை கொடுப்பேன்" அப்டீன்னு சொன்னார். "இந்த சிவ தனுசை வளைச்சு நான் ஏற்றது அப்டீங்கிறது, யாரும் கனவுல கூட நினைச்சு பாக்க முடியாது", அப்பபடீன்னு சொல்றா. சீதை பேசும்போது, எப்பவும் ரொம்ப ருசிகரமா இருக்கும், இந்த பேச்சு. ரொம்ப enthusiastic ஆ ரொம்ப bubbling ஆ இருக்கும், அவ பேசறது. "அப்புறம் சில பேர் வந்தா. வந்து அதை முயற்சி பண்ணிண்டு, வில்லுக்கு நமஸ்காரம் பண்ணிட்டு ஓடியே போயிட்டா. ரொம்ப நாள் கழிச்சு ராமர் வந்தார்" அப்டீங்கறா ஸீதா தேவி. வைகுண்டத்துல இருந்து வந்து காத்துண்டு இருக்கா ஸீதா தேவி, அதனால ராமர் வரதுக்கு இவ்வளவு வருஷம் கூட பொறுக்க முடியல, அவளுக்கு. கல்யாணத்தும் போது சீதைக்கு ஆறு வயசு, ராமருக்கு, பன்னிரண்டு வயசுன்னு கணக்கு.

ஸீதாதேவி சொல்றா "விஸ்வாமித்ரர் ராம லக்ஷ்மணாளை அழைச்சுண்டு வந்தார். ராமர், அனாயசமா அந்த வில்லை எடுத்து வளைச்சு, நாண் பூட்டினார். அப்போ அந்த வில்லை அவர் வளைச்ச போது, அந்த வில் ஓடிஞ்சே விழுந்துடுத்து. எல்லாரும் ஆச்சர்யபட்டா. என்னுடைய அப்பா ஜலப் பாத்திரத்தை எடுத்துண்டு, என்னை, கன்னிகாதானம் பண்ணி கொடுக்க கிளம்பினார். ராமர், இந்த வில்லை வளைக்க சொல்லி விஸ்வாமித்ரர் சொன்னார், நான் பண்ணினேன், கல்யாணம் பண்ணிக்கணும்னா எங்கப்பாவை கேட்கணும், அப்டீன்னு சொன்னார். அதே மாதிரி ஜனக மஹாராஜா, என் மாமனாரான தசரதரை வரவழைத்து, அவர் கிட்ட உத்தரவு வாங்கிண்டு, என்னை ராமருக்கு, கன்னிகாதானம் பண்ணி கொடுத்தார்", அப்டீன்னு சொல்றா.

இதுல நிறைய, அழகு இருக்கு. இந்த ராமர், சரி பொண்ணு கொடுக்கறா, அப்டீன்னு வாங்கிக்கலை. எங்கப்பா பேச்சை கேட்டுதான் நான் பண்ணுவேன் அப்டீன்னு சொல்றார். சீதை சொல்லும் போது, எங்கப்பா வில்லை வளைச்சு நாண் ஏற்றவனுக்குதான் என் பெண்ணை கொடுப்பேன்னு சொல்லிட்டார், என் மாமனாரான தசரதர் அப்டீன்னு சொல்றா அவ. அவளை பொறுத்த வரைக்கும், ராமன் தன் கணவன்னு அன்னிக்கே அவ மனசுல ஏத்துண்டுட்டா அவ. அப்புறம் அமோகமா அந்த கல்யாணம் நடக்கறது. அந்த காட்சிகளை எல்லாம் நினைச்சுண்டு, இங்க சீதைக்கு அலங்காரம் எல்லாம் பண்ணி, ராமரோட

சேர்த்துப் பார்த்து, அந்த அத்ரி அனுசுயா அந்த திவ்ய தம்பதிகளை தரிசனம் பண்ணி, ரொம்ப பரம ஆனந்தப் படறா. இந்த சீதை சந்தோஷமா இருந்த நாளெல்லாம் நாம நினைக்கணும்.

பின்னால, காட்டுக்கு வந்த போது, ராமர் சீதையை கூட்டிண்டு, வனத்துல சஞ்சாரம் பண்றார். இந்த சித்ரகூட மலையோட அழகையும் அந்த மந்தாகினி, நதியோட அழகையும் காமிச்சு, ஒரு ஐம்பது, நூறு ஸ்லோகம். இவ்வளவு பொறுமையா, ஒரு nature ஐ வர்ணிக்க றது, அவர் மனைவி அதை, ரசிச்சுக் கேட்கறது, அப்டீங்கிறதே, இதுவும் ராமாயணத்தில், ராமர் சீதை மட்டும் தான் பண்ணுவா நினைக்கறேன். அவ்வளவு அழகா இருக்கும் அந்த ஸ்லோகங்கள். ராமர் சொல்றார், "நீ என் பக்கத்துல இருக்கும் போது, இந்த வனவாசம் எனக்கு அவ்வளவு ஆனந்தமா இருக்கு. எனக்கு தேவலோகத்து ராஜ்யத்தை கொடுத்தாலும் நான் ஆசைப் பட மாட்டேன். இந்த காட்டுக்கு வந்ததுல இந்த சந்தோஷத்தை எல்லாம் நான் அனுபவிக்கறேன். எனக்கு கூட நீயும் இருக்க, லக்ஷ்மணனும் இருக்கான். இன்னொரு லாபமும் ஆச்சு. எனக்குப் பிரியமான பரதனுக்கு, அந்த ராஜ்யத்தை எங்கப்பா கொடுத்தார்" அப்படீனெல்லாம் அழகா பேசிண்டு இருக்கார்.

"அங்க பாரு, இந்த மந்தாகினி நதி தீரத்துல ரிஷிகள் எல்லாம், சந்தியாவந்தனம் பண்ணிண்டு இருக்கா. நாமளும் போயி ஸ்நானம் பண்ணுவோம், சந்தியாவந்தனம் பண்ணுவோம்" அப்டீன்னு சொல்றார். அதாவது, சந்தியாவந்தனம் பண்றவாளை, பகவானே, லக்ஷ்மி தேவியே நீ கண்ணெடுத்து பாரு அப்படீன்னு சொல்வாராம். அப்படி சந்தியாவந்தனம் பண்றவாளுக்கு, பகவதனுக்ரஹத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும், சந்தியாவந்தனம் ஒழுங்கா பண்ணினா, அப்டீன்னு ஸ்வாமிகள் சொல்வார். "அப்புறம் இந்த மந்தாகினியையே நீ சரயு வா நினைச்சுக்கோ, இங்க இருக்கிற மிருகங்களையே நாம அயோத்தி வாசிகளா, நினைச்சுப்போம், சித்ர கூட மலையையே அயோத்தின்னு நினைச்சுப்போம். இங்க சந்தோஷமா நூறு வருஷம் கூட நான் இங்க இருப்பேன், பதினாலு வருஷம்கிறது இதோ ஓடி போயிடும்" அப்டீன்னு, ராமர் சொல்றார். இப்படி ராமரும் சீதையும், நிறைய சல்லாபம் பண்ணி

சந்தோஷப் பட்டுருக்கா. இதெல்லாம் நினைச்சாதான் இவா பிரிஞ்ச போது ஏன் துக்கப் படறா. அப்படீன்னுபுரியும்.

ராமாயணத்துல என்னன்னா, தசரதர் பிள்ளையை பிரிஞ்சு அழுதார்னா நமக்கு, பிள்ளையை பிரிஞ்சு துக்கப் படற கஷ்டம் வராது. ஸீதா தேவி ராமரை பிரிஞ்சு வருத்தப் பட்டு அழுதா அப்டீங்கிறதை படிச்சா, கணவன் மனைவிக்குள்ள பிரிவே வராது, அப்டீன்னு ஸ்வாமிகள் சொல்வார். இந்த சோகமான கட்டத்தை ராமாயணத்துல படிச்சா, நமக்கும் அந்த கஷ்டம் வரும்னு, சில பேர் அசட்டுத் தனமா சொல்லுவா. ராமாயணத்துல இருக்கிற எல்லாமே மந்திரம், எல்லாமே மங்களம். அதுல இருக்கிற எதை படிச்சாலுமே, நமக்கு க்ஷேமமே ஏற்படும் அப்படி, ஸ்வாமிகள் சொல்லுவார். அந்த மாதிரி பிரிஞ்சு இருக்கிற தம்பதிகளுக்காக ஒரு ஸ்லோகம்னு ஆரம்பிச்சேன், அந்த ராமரும் சீதையும் பிரிஞ்சு இருக்கா, ஹனுமார் அவாளை சேர்த்து வைக்கறார், அப்டீங்கிறதை படிச்சாலே நமக்கு, தம்பதிகளுக்குள்ள ஒத்துமை இருக்கும், சந்தோஷம் ஜாஸ்தி ஆகும். அப்டீன்னு ஸ்வாமிகள் சொல்வார்.

அர்த்தஸித்யை ஹரிஸ்ரேஷ்ட கச்ச ஸௌம்ய யதாஸுகம் |

ஸமானயஸ்வ வைதேஹீம் ராகவேன மஹாத்மனா ||

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ



सर्वान् लोकान् सुसंहृत्य सभूतान् सचराचरान्।

पुनरेव तथा स्रष्टुं शक्तो रामो महायशाः।।

ஸர்வான் லோகான் ஸுஸம்ஹ்ருத்ய ஸபூதான் ஸசாரசரான் |

புனரேவ ததா ஸ்ரஷ்டும் ஷக்தோ ராமோ மஹாயஷா: ||

என்று ஸுந்தரகாண்டம் 51 வது சர்கத்துல ஒரு ஸ்லோகம். பதினாலு உலகங்களையும், நாம் இருக்கற பூமி, மேல இருக்கக் கூடிய உலகங்கள், நக்ஷத்ரம், சந்திர, சூர்யர்கள், அப்புறம், நமக்குக் கீழே இருக்கக் கூடிய, ரசாதளம், தலாதளம், பாதாளம், அதல, பாதாளம் வரைக்கும், மேல இருக்கக் கூடிய, சுவர்லோகம், முதல், பிரம்மலோகம் பர்யந்தம்,எல்லா உலகங்களையும், இதுல இருக்கின்ற, சர, அசர, மரங்கள், மலைகள், கடல்கள், முதற்கொண்டு, எல்லா, உயிருள்ள, உயிரில்லாதது, எல்லா பொருள்களையும்

ஸர்வான் லோகான் ஸுஸம்ஹ்ருத்ய - எல்லாத்தையும், ஸம்ஹாரம் பண்ணி, அழித்து, புனரேவ ததா ஸ்ரஷ்டும் ஷக்தோ ராமோ மஹாயஷா: - மீண்டும் அதே மாதிரி, ஸ்ருஷ்டி பண்ணக் கூடிய சக்தி, ராமருக்கு இருக்கு அப்படீன்னு,

ராமருடைய பராக்ரமத்தை ப்ரபாவத்தைப் பத்தி ஒருத்தர் சொல்றார். யாருன்னு சொல்லுங்கோ பார்க்கலாம்? ஹனுமார் தான் சொல்றார். ஹனுமார், ராவணனுடைய சபையில இதைச் சொல்றார்.

இந்திரஜித், பிரம்மாஸ்திரம் போடறான். ஹனுமார், "பிரம்மாவுக்கு,கௌரவம் கொடுப்போம், பிரம்மாஸ்த்ரத்துக்குக் கூட கட்டுப்படலை", அப்படீன்னு, ஒரு பேச்சு இருக்க வேண்டாம், அப்படீன்னு, பிரம்மாஸ்திரம், அவரை ஒண்ணும் பண்ணாது. இருந்தாலும், பிரம்மாஸ்த்திரதுக்கு கட்டுப் பட்டு கீழே விழறார். ராவணன் சபைக்கு தான் போகணும், பகல் வந்துடுத்து. இந்த லங்கையோட, தெருக்களையும், இதோட அமைப்பையும் பாத்துக்கணும். யுத்தத்தும் போது, உபயோகமா இருக்கும். ராவணனை பாக்கணும்ங்கிற போது இவா, ராவணன் கிட்ட கூட்டிண்டு போறா அப்படின்னு போறார். போற வழியில, அவாள்லாம், ஓன்னு கத்திண்டு, ஒற்றன், திருடன்னு, அடிங்கோ இவனை, அப்படீன்னு, எல்லாம் சொல்றா. ஹனுமார் ராமருக்காக எல்லாத்தையும் பொறுத்துக்கறார். ராவணன் சபைக்குப் போறார்.

ராவணன், இவரைப் பார்த்த உடனே, “ஆஹா, முன்ன நந்தி பகவான், என்னை சபிச்சாரே, அவரே தான் இந்த உருவத்துல வந்துருக்காரோ” என்று நினைக்கிறான். அதாவது, ஒரு தடவை, ராவண, திக்விஜயம் பண்ணிண்டு இருக்கும் போது, கைலாச மலைக் கிட்ட வரான். கைலாச மலைக் கிட்ட வரும்போது, நந்தி பகவான் “இது பரமேஸ்வரனுடைய இடம், நீ இங்க வம்பு பண்ணாதே, பேசாம, ப்ரதக்ஷிணம் பண்ணிண்டு போயிடு” அப்படீன்னு, சொல்றார். ராவணன் “அவன், போடா குரங்கு மூஞ்சி, யாரா இருந்தா எனக்கென்ன?” அப்படீன்னு சொல்லி, நந்தி பகவானை பார்த்து, அவர் காளை முகம். அப்படி கேலி பண்றான். அந்த மாதிரி சொன்ன உடனே, “உனக்கு, குரங்குகளாலயே அழிவு ஏற்படும்”, அப்படீன்னு, நந்தி பகவான், சாபம் கொடுக்கறார்.

அப்புறம் “இந்த மலையை, நான் தூக்கி போட்டுட்டுப் போயிடுவேன்”, அப்படீன்னு சொல்லி, அந்த கைலாச மலையை தூக்கப் பாக்கறான். மேரு, மந்திர மலைகளை எல்லாம் கூட அவனால் தூக்க முடியும், அவனால. ஆனா,

கைலாசம்ங்கிறது, பகவானோட இடம், பரமேஸ்வரனுடைய இடம். பகவான் தன்னோட கால் விரலை வெச்சு லேசா அழுத்தறார். ராவணன் மலைக்கடியில் நசுங்கி, ஓ ன்னு அழறான். அப்போ, நாரதர் வரார். நீ ஸாம கானம் பாடு. பரமேஸ்வரனுக்கு திருப்தி ஆகும்னு, சொல்றார். அவனும் பாடறான். சிவபெருமான் அவனை விடுவிச்சுடறார். இந்த மாதிரி, "வந்துருக்கிறது, நந்தி பகவானோ", அப்டீங்கறான், அந்த ஹனுமாரோட தேஜஸைப் பார்த்து ராவணன் வியக்கறான்.

ஹனுமாரும் அந்த சபையை பார்த்து, "இவன் எவ்வளோ பெரிய வீரனா இருக்கான். இவ்ளோ பெரிய, சபையில அலங்காரமா உட்கார்ந்து இருக்கான்". சுத்தி அவனுடைய, மந்திரிகள் இருக்கா. சேனாதிபதிகள் இருக்கா. எல்லாத்தையும் அவர் கவனிக்கறார். "இவன் மட்டும் நல்லவனா இருந்தா, இவனும் ஒரு நல்ல ராஜாவா இருந்துட்டுப் போலாம், எல்லாரையும் ஹிம்ஸை பண்ணிண்டு இருக்கான் இவன். அதனால இவனுக்கு முடிவு வரப் போறது. இவன் பண்ணின தப்புனால, இவன் குலத்துக்கே ஆபத்து வரப் போறது", அப்படி எல்லாம் நினைச்சுண்டே வறார்.

ராவணன் seat ஆசனம் கொடுக்கலை. அதனால, ஹனுமார், வந்து தன்னுடைய வாலாலேயே தனக்கு ஒரு seat பண்ணிண்டு, அது மேல ஏறி, ராவணனை விட உயரத்துல உட்கார்ந்துண்டார், அப்டீன்னு ஒண்ணு. நன்னா இருக்கு. இது, வால்மீகி ராமாயணத்துல இல்லை. கம்ப ராமாயணத்துல இருக்கு போல இருக்கு. ஹனுமாரை, நிமிர்ந்து பார்த்து பேசினான் இராவணன், அப்படீன்னு வால்மீகி ராமாயணத்துல வர்றது. மேல பார்த்து பேசறான்னா, தன்னை விட உயரத்துல இருக்கறதா தானே அர்த்தம்.

“யாரு இவன் வந்துருக்கறது. கேளு அவனை, அவன் ஏன் இங்க வந்துருக்கான்? இவனை பார்த்தா, வெறும் வானரம் போல தெரியல”, அப்படீன்னு, இராவணன் சொல்றான். அப்ப ப்ரஹஸ்தன் கேட்கறான். “நீ யாரு? உண்மையை சொன்னா, உயிரோட விடுவோம்” அப்படீன்னு சொல்றான். ஹனுமார் சொல்றார். “நான் வானரம் தான். நான் ராம தூதன். சுக்ரீவனுடைய மந்திரி. நான் சுக்ரீவனனுடைய ஒரு செய்தியை ராவணனுக்கு சொல்ல வந்துருக்கேன். உன் தம்பி போல, சுக்ரீவன் சொல்ற நல்ல வார்த்தையை கேட்டுண்டு உயிர்

பிழைச்சுப் போ", அப்படீன்னு சொல்றார். அந்த மாதிரி, foreign land ல போயி, brothers and sisters of America ன்னு, ஒருத்தர் சொன்னாரே, விவேகானந்தர், அதுக்கு முன்னாடியே, ஹனுமார் சொல்லி இருக்கார். "தம்பி சொன்ன செய்தியை உனக்கு சொல்றேன்". அப்டீன்னு சொல்லி, "நீ இவ்வளவு நாள், தபஸ் பண்ணி இருக்கலாம், அது, உன்னை காப்பாத்தித்தா இருக்கும். இப்ப நீ பெரிய தப்பு பண்ணி இருக்க. ராமருடைய பத்னியை அபகரிச்சு சிறை வெச்சு இருக்க. நான் அவளை இங்க பார்த்தேன். நான் திரும்பி போயி, ராமர் கிட்ட சொல்ற காலம்தான் நீ உயிரோடிருக்கப் போற. அதனால மரியாதையா சீதையை ஒப்படைச்சு உயிர் பிழைச்சு, போ" அப்படீன்னு சொல்லும்போது,

सत्यं राक्षसराजेन्द्र शृणुष्व वचनं मम।

रामदासस्य दूतस्य वानरस्य विशेषतः।।

சத்யம் ராக்ஷஸ ராஜேந்தர ஷ்ருணுஷ்வ வசனம் மம |

ராமதாஸஸ்ய தூதஸ்ய வானரஸ்ய விசேஷத: ||

ராமதாசனான நான் இப்ப ஒண்ணு சொல்றேன், அப்டீன்னு ஒரு பீடிகை போட்டு சொல்றார். நான் சொல்ற வார்த்தை ரொம்ப சத்யமானது, நான் ராம தூதன். சொல்றேன் கேட்டுக்கோ

ஸர்வான் லோகான் ஸுஸம்ஹ்ருத்ய ஸபூதான் ஸசாரசரான் |

புனரேவ ததா ஸ்ரஷ்டும் ஷக்தோ ராமோ மஹாயஷா: ||

அப்பேற்பட்ட ராமர், பதினாலு லோகங்களையும் ஸம்ஹாரம் பண்ணக் கூடியவர், அவர் பதினாலு லோகங்களையும் சிருஷ்டியும் பண்ணக் கூடியவர். பிரம்மா, விஷ்ணு, சிவனுக்கு எல்லாம் மேலான தெய்வம். அவர்கிட்ட நீ தப்பு பண்ணி இருக்க. இனிமே நீ யார் கால்ல விழுந்தாலும், யாரும் உன்னை காப்பாத்த முடியாது, அதுனால நீ போயி ராமர் காலில் விழு, அப்டீன்னு சொல்றார். இந்த

ஸர்வான் லோகான் ஸுஸம்ஹ்ருத்ய ஸபூதான் ஸசாரசரான் |

புனரேவ ததா ஸ்ரஷ்டும் ஷக்தோ ராமோ மஹாயஷா: ||

அப்டீங்கிற ஸ்லோகம், ஸுந்தர காண்டத்துல ஒவ்வொரு ஸ்லோகமுமே மந்திரம்னு சொல்லுவா. ஸ்வாமிகள் இதை ஒரு மஹா மந்திரமா நினைப்பார். நடக்க முடியாத காரியமும் நடக்கும்.

அஸாத்ய ஸாதக ஸ்வாமின்னு அஸாத்ய தவ கிம் வத |

ராம தூத கிருபா ஸிந்தோ மத் கார்யம் ஸாதய பிரபோ ||

அந்த மாதிரி ஒரு ஸ்லோகம் இருக்கு. அது ஹனுமார்கிட்ட, நீ, அசாத்யமான கார்யங்களை பண்ணக் கூடியவன். நீ என் கார்யத்தை நடத்திக் கொடுன்னு பிரார்த்தனை. இங்க அந்த ஹனுமார் ராமரோட பெருமையை சொல்றார். அதனால, யாருமே நடக்காதுன்னு, நினைக்கிற கார்யம் ராமரோட தயவு இருந்தா நடக்கும்.

ஒரு வாட்டி ஸ்வாமிகள் கிட்ட, சிதம்பரம் ஐயர்னு ஒருத்தர் வருவார். அவரோட பையன் ரோடுல அடிபட்டு, மண்டை உடைஞ்சு, மூளையே வெளியில வந்துடுத்து. பையன் hospital ல இருக்கான்னு போன் பண்றா. சிதம்பரம் ஐயர் hospital போகலை. அவர் நேரா ஸ்வாமிகள் கிட்ட வந்தார். ஸ்வாமிகள் கவலைப் படாதேங்கோனு, உடனே இந்த ஸ்லோகத்தை சொல்லிண்டு, hospital போயி ஆசுவாசப் படுத்திட்டு, ஸ்வாமிகளும், குழந்தையை பார்த்துட்டு வந்தார். அந்த குழந்தைக்கு இன்னிக்கு அறுவது வயசு ஆறது. அவருக்கு அப்புறம் operation பண்ணி அது சரியாகி, அவர் உயிர் பிழைச்சு வந்து, ரெண்டு மாசம் கோமாவுல இருந்தார். ஆறு மாசம் hospital ல இருந்தார். இன்னிக்கு அவரோட பையன் IITல professor ஆ இருக்கார். அப்படி இந்த

ஸர்வான் லோகான் ஸுஸம்ஹ்ருத்ய ஸபூதான் ஸசாரசரான் |

புனரேவ ததா ஸ்ரஷ்டும் ஷக்தோ ராமோ மஹாயஷா: ||

ஒரு மஹா மந்திரம். ராமருடைய கிருபை இருந்தால் எதுவும் நடக்கும்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம்

முதல் முதல்ல நான் ஸ்வாமிகள் கிட்ட போயிருந்த போது, அவர் எனக்கு மூகபஞ்ச சதி சொல்லித் தர ஆரமிச்சார். அந்த பாடம் regularஆ போயிண்டு இருந்தது. ஒரு நாள் கார்த்தால அவர் பாராயணம் பண்ணும் போது போனேன். அப்போ அவர் ஸுந்தரகாண்டம் பாராயணம் பண்ணிண்டு இருந்தார். எனக்கு அது தெரியலை. நான் உள்ள போன போது ஒரு ஸ்லோகம், முப்பத்தியேழாவது சர்க்கத்துல கடைசி ஸ்லோகம். இதை அவர் கொஞ்சம் உரக்க சொன்னார்.

स मे हरिश्रेष्ठ सलक्ष्मणं पतिं सयूथपं क्षिप्रमिहोपपादय।

चिराय रामं प्रति शोककर्शितां कुरुष्व मां वानरमुख्य हर्षिताम्।।5.37.66।।

எனக்கு அப்படியே காதுல தேனை கொட்டற மாதிரி இருந்துது. இது என்ன ஸ்லோகம்? அப்படினு கேட்டேன்

ஸ மே ஹரிஸ்ரேஷ்ட ஸ லக்ஷ்மணம் பதிம்

ஸயூதபம் க்ஷிப்ரம் இஹோபபாதய |

சிராய ராமம் பிரதி சோக கர்ஷிதாம்

குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் ||

இதை அவர் சொன்ன போது எனக்கு ரொம்ப ஆனந்தமா இருந்தது. அவர் சொல்லி கேட்டு அப்படியே மனப்பாடம் ஆயிடுத்து. அப்போ "ஸுந்தரகாண்ட ஸ்லோகம்" அப்படின்னார் . அப்படியா அப்போ நான் ராமாயணம் படிக்கிறேன் அப்படினு சொன்ன உடனே "படி. இந்தா படி. எழுத்து கூட்டி படி. ராமாயணமே உனக்கு சம்ஸ்க்ருதம் சொல்லி குடுத்துரும்" அப்படின்னு encourage பண்ணி, literalஆ எழுத்து கூட்டி ராமாயணம் படிச்சு, இன்னக்கி பிரவசனம் பண்ணிண்டு உட்கார்ந்துண்டு இருக்கேன். So நான் not eligible to do this. முழுக்க அவரோட graceதான்.

இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம்னா "ஹே ஹரிஸ்ரேஷ்ட, வானர ஸ்ரேஷ்டரான ஹே ஹனுமான்!" ஸீதா தேவி ஹனுமனை பார்த்து சொல்றா. "ஸலக்ஷ்மணம், லக்ஷ்மணனோடு கூட, மே பதிம், என்னுடைய கணவரான ராமரை, ஸயூதபம், ஸுக்ரீவன் முதலான எல்லா வானரர்ரகளோடு, க்ஷிப்ரம், மிக விரைவில், இஹ உபபாதய, இங்கே அழைத்து வா, சிராய, ரொம்ப காலமா, ராமம் ப்ரதி, ராமரைக் குறித்து, ஷோககர்ஷிதாம், வருத்தத்தினால, அவரை பிரிந்த துக்கம் என்ன பிழிஞ்சு எடுக்கறது, அவ்ளோ கஷ்டத்துல இருக்கேன், வானரமுக்ய, வானரகளில் முக்கியமானவனே குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் என்னை சந்தோஷம் அடைந்தவளாக செய்".

"ராமரை சீக்கிரமா அழைச்சுண்டு வந்து, என்னை இந்த கஷ்டத்துலேர்ந்து விடுவிச்சு, எனக்கு சந்தோஷத்தை கொடு" அப்படினு கேக்கறா. ஹனுமார் குரு. அந்த குரு கிட்ட ஒரு ஜீவன் கேட்கறாப் போல. இப்போ நான் ஸ்வாமிகளை பார்த்தேன். அவர் பேரானந்தத்துல திளைச்சுயிருந்தார். ஒரு க்ஷணம் அதோட ஒரு திவிலை என் மேல் விழுந்த போது, என்னால புரிஞ்சிக்க முடிஞ்சுது. அவர் கிட்ட அப்படி அந்த ராமாயணம்ங்கிற தேன் நிரம்பி இருந்துது. அவர்கிட்ட இருந்து ததும்பி விழும்போது, ஒரு க்ஷணம் அந்த வாக்கை கேட்டபோது அப்படிய புல்லரிச்சுது.

அப்படி மஹான்கள் பேரானந்தத்துல திளைச்சு இருக்கறதை நாம பார்க்கிறோம். நம்மால பார்க்கத்தான் முடியறது. அடுத்த க்ஷணம் நாம் நம்ம உலகத்துக்கு வந்துடறோம். அப்போ அவா எப்படி எப்போதும் அது மாதிரி இருக்கான்னா,

பாகவனோட touch அவாளுக்கு விடாம அதுலையே இருக்கறதுனால தான். இப்போ ஸீதாதேவி ஜீவன். ராமர் பகவான். ஹனுமார் குரு. இந்த குரு கிட்ட, எனக்கும் இதுமாதிரி பகவானுடைய அனுக்கிரஹம் கிடைக்கிறதுக்கு என்ன வழி சொல்லுங்கோ, அப்படின்னு நம்ம கேட்கிறோம் இல்லையா? அப்படி கேக்கற மாதிரி, எனக்கும் பகவானை காண்பிச்சு கொடுங்கோ. அவரை கூட்டிண்டு வாங்கோ. அவருடைய சம்பந்தம் எனக்கும் ஏற்படும்படி அனுக்கிரஹம் பண்ணுங்கோ என்று கேட்கறோம். இவாளா பார்த்தா தான் நமக்கு தெரியறது. நிஜமான ஒரு மஹானை பார்த்தாலொழிய பகவான்னா நமக்கு என்ன என்கிறதே புரியாது. உலக விஷயங்கள் அவாளுக்கு புளிச்சு போய்டுத்து. தெய்வத்துல அப்படி மூழ்கியிருக்கா.

திருவண்ணாமலைல ரமண பகவான் உட்கார்ந்து இருந்தார், அந்த மலை அவரை ஈர்த்து ஆட்கொண்டு விட்டது. ஒரு மலைமீது காதலோடு உட்கார்ந்து இருக்கார் னா அவருக்கு அதுக்குமேல என்ன வேணும்? ஒரு வேளை சாப்பாடு பிசைக்ஷ எடுத்து சாப்ட்டுண்டு, இந்த திருவண்ணாமலை மேல காதலோட அதை ப்ரதக்ஷிணம் பண்ணிண்டேயிருந்தார், அவர் உடம்பு முடிஞ்ச வரைக்கும். அப்பேற்பட்ட மஹான்கள் இருக்கா. அவாளுக்கு இந்த உலகத்துல எதுவுமே வேண்டான்னு இருக்கும் போது அது எவ்வளவு பெரிய விடுதலை! அந்த மாதிரி அவா இருக்கறதை பார்க்கணும்.

அந்த மாதிரி ஸ்வாமிகளுக்கு வந்து இந்த புஸ்தகங்கள். இந்த புஸ்தகங்களுக்குள்ள மூழ்கியிருப்பார். ஒரு நாளைக்கு புஸ்தகத்தை இப்படி வச்சிண்டு அப்படியே கண்ண மூடிண்டு இருந்தார். கண் ஜலம் வர்ரது. நான் என்னன்னு கேட்கறேன், என்ன என்னவோ ஆயிடுத்தா னு பயந்துண்டு. அவர் ஜடாயு மோக்ஷம் படிச்சுண்டு இருக்கார். ராமரோட மடியில ஜடாயு உயிர் பிரிஞ்சிருக்கு. அப்ப ராமர் புலம்பும் போது சொல்றார் "மம ஹேதோ: அயம் ப்ரணான் முமோச பதகேஸ்வர" "இந்த கழுகரசன் எனக்காக உயிரையே கொடுத்துடனே" அப்படினு சொல்றார். ஸ்வாமிகளுக்கு அதை படிச்சபோது, ஸ்வாமிகளுக்கு நிறைய கஷ்டங்கள் இருந்துது. நமக்கு இருக்கறது எல்லாம் ஒரு கஷ்டமா, உயிரையே பகவானுக்காக கொடுத்திருக்கனே இந்த கழுகரசன்! அப்படினு சொல்லி அந்த மாதிரி பகவானுக்காக உயிரையும் கொடுக்கலாம் அப்படிங்கற எண்ணத்துனால அவர் அப்படியா சமாதியில போய்ட்டார். அந்த ஒரு lineஐ படிச்சிட்டு "மம ஹேதோ: அயம் ப்ரணான் முமோச பதகேஸ்வர" அப்படினு அப்படியே லயிச்சு இருந்தார் அவர். ஒரு பதினைந்து நிமிஷம்

ஒண்ணுமே ஓடலே அவருக்கு. அப்படி அவாளுக்கு இந்த புஸ்தகமே அவ்வளவு பேரானந்தத்தை கொடுக்க முடியும் அப்படிங்கறத பார்க்க பார்க்கத் தான் நமக்கு பக்தி வரும். திருப்பியும் எழுந்து வெளியல வந்தவுடனே ஓட்டல்ல போய் ஏதாவது சாப்பிடறோமா இருக்கும், ஆனாலும் இப்படி ஒரு நிலைமை இருக்கிறதை கண்கூடா பார்த்தவுடனே, நமக்கு அதைப் பற்றி ஒரு ஆசை வருது.

இந்த ஸ்லோகம் வந்து அந்த மாதிரி பகவானை என்கிட்ட அழைச்சிண்டுவா அப்டின்னு பிரார்த்தனை பண்ற ஸ்லோகம். "ஸ மே ஹரிஸ்ரேஷ்ட ஸ லக்ஷ்மணம் பதிம் ஸ யூதபம் க்ஷிப்ரம் இஹோபபாதய | சிராய ராமம் பிரதி சோக கர்ஷிதாம் குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் ||" அப்படினு ரொம்ப அழகான ஸ்லோகம்.

இது எங்க வரதுன்னா, சீதை முதலில் ஹனுமாரை பார்த்த பொழுது, ராவணனோன்னு ஸந்தேஹபடறா, ஹனுமார் நமஸ்காரம் பண்ணிண்டே இருக்கார். நமஸ்காரம் பண்ணிணா ஆசிர்வாதம் பண்ணனும். அதனால சீதை "நீ ராமதூதனா இருந்தா க்ஷேமமா இரு" அப்படினு சொல்றா. ஹனுமான் "பொழச்சேன்" ன்னார். அவர் ராமதூதன் தானே. இருபத்திநாலு காரெட் தங்கத்தை கையில வச்சிண்டு இருக்கும்போது நம்ம கவலைப்பட வேண்டாமே. அந்த மாதிரி அவர் உண்மையான ராமபக்தனா இருக்கறதுனால, அந்த ஆசீர்வாதம் கிடைச்சிடுத்து அவருக்கு. அப்பறம் "நீங்க நினைக்கிற மாதிரி இல்லம்மா. நான் ராமதூதன் தான்" அப்படின்னு சொன்னவுடனே, ராமருடைய பெருமையை சொல்லு அப்டின்னு சொல்றா. ஒரு பக்தனால் தான் பகவானோட பெருமையைச் சொல்ல முடியும். ராவணனா இருந்தா ராமரோட பெருமையை வாயால பேசுவானா? ஒரு இருபது இருவத்தஞ்சு ஸ்லோகங்கள் ராமருடைய பெருமைய ஹனுமார் சொல்றார். இதுவே ஹனுமத்க்ருத ராம ஸ்தோத்ரம்னு தனியா எடுத்து பாராயணம் பண்ணுவா, அவ்வளோ அழகா இருக்கும். உடனே சீதைக்கு நம்பிக்கை வரது.

அதுக்கப்புறம் "ராம லக்ஷ்மணாளோட அங்க அடையாளங்களை சொல்லு" அப்படினு கேட்ட உடனே "ராம: கமல பத்ராக்ஷக:, சர்வ சத்வ மனோஹர: ரூபதாக்ஷிண்ய சம்பன்ன: ப்ரஸூதோ ஜனகாத்மஜே" என்று ஆரம்பிச்சு, ராம லக்ஷ்மாணாளோட அங்க அடையாளங்களை சொல்லி, அப்பறம் அவாளை எப்படி தான் சுக்ரீவனுக்காக போய் பார்த்து அவளை அழைச்சுண்டு வந்து

சுக்ரீவனோட ஸக்யம் பண்ணி வெச்சு, இப்படி விஸ்தாரமா நடந்ததை எல்லாம் சொல்லி இன்னைக்கு வரைக்கும், இப்போ நான் கடல் தாண்டி வந்தேன். உங்களை பார்த்தேன்ங்கிறது வரைக்கும் சொல்லி முடிக்கறார். சீதைக்கு இந்த ஹனுமாரோட இனிமையான வாக்கை கேட்க கேட்க அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்றது. அதுக்கப்பறம் அந்த ராமருடைய மோதிரத்தை "ராம நாமாங்கிதம் சேதம் பஷ்ய தேவி அங்குலீயகம்" அப்டினு குடுத்தவுடனே, "ஆஹா! ஹே ஹனுமான்! விக்ராந்தஸ்த்வம், சமர்த்தஸ்த்வம், பிராஞஸ்த்வம் வானரோத்தமா! எவ்வளவு பெரிய காரியம் நீ பண்ணியிருக்கே, இந்த ராக்ஷர்களின் கோட்டை காவலை மீறி வந்து என்ன பார்த்து, என்னுயிரை காப்பாத்தி, ராமருடைய மோதிரத்தை காண்பிச்சியே! ராமரையே பார்க்கற மாதிரி எனக்கு சந்தோஷமா இருக்குனு" சொல்றா.

அப்புறம் "ஏன் இன்னும் ராமர் வரலை? ஏன் என்னை இப்படி கைவிட்டுட்டார்?" அப்படினு கஷ்டபட்டு கேட்கும் போது "இல்லை அம்மா. நீங்க எங்கேயிருக்கேள் னு தெரியலை. அதனால் தான் வரலை, நான் திரும்பிப் போய் சொல்றது தான் delay. ராமர் வானரப் படையை இழுத்துண்டு வந்து இந்த லங்கையை முற்றுகை இட்டு ராக்ஷசர்களை எல்லாம் வதம் பண்ணி ஒங்களை மீட்டுண்டு போயிடுவார். கஜேந்த்ரன் "ஆதிமூலமே" னு கதறின போது, கருடனை இழுத்துண்டு விஷ்ணு பகவான் வந்தார். அப்படி பக்தனை காப்பாற்றுவதில் அத்தனை அவசரம். அப்படி வானரப் படையை இழுத்துண்டு வந்துடுவார் ராமர். நீங்கள் கவலைப் பட வேண்டாம். நீங்கள் அழும் வேளை முடிஞ்சு போயிடுத்து. நீங்கள் இனி அழ வேண்டாம்" அப்படின்னு சமாதானப் படுத்துகிறார்.

"இல்லைன்னா ஒண்ணு பண்ணுவோம். இப்பவே உங்களுடைய இந்த கஷ்டத்தை நாம் போக்கி விடுகிறேன். எப்படி அக்னியானது ஹவிஸ்ஸை இந்திரன் கிட்ட சேர்க்குமோ, அப்படி உங்களைக் கொண்டு போய் ராமர் கிட்ட சேர்த்துடறேன்" அப்படின்னு சொல்றார். இது எவ்வளவு அழகாக இருக்கு இந்த உவமை. அக்னி ரொம்ப தூய்மையானது. ஹவிஸ் பண்ணும்போது, ஆத்துல ஒரு ஹோமத்துக்கு பண்ணும் போது கூட ரொம்ப மடியாக பண்ணுவா. யாகத்தில் ஹவிஸ்ங்கறது தான் ரொம்ப தூய்மையான பொருள். அப்படி சீதை ரொம்ப தூய்மையானவள். ஹனுமாரும் நெருப்பு போல ரொம்ப தூய்மையானவர். ராமர் இந்திரன் மாதிரி பராக்கிரமம் படைத்தவர். ராமர் கிட்ட

கொண்டு போய் உங்களை சேர்த்து விடுகிறேன் னு சொல்றார். சொல்லும் போதே intention ரொம்ப clear ஆக புரியற மாதிரி அழகாகச் சொல்றார்.

ஹனுமார் சின்னதா ஒரு மூணு அடி வானரமாக இருக்கார். அவர் "உங்களை தூக்கிண்டு போய் கடல் கடந்து ராமர்கிட்ட சேர்த்துடறேன்" என்றவுடன் சீதை "ஒரு குழந்தை ஆர்வத்தில் சொல்ற மாதிரி இவர் சொல்றார் போல இருக்கு" னு நினைச்சு கேட்கறா "என்னப்பா, நீ எப்படி என்னைத் தூக்கிண்டு போய் ராமர் கிட்ட சேர்ப்பாய்?" னு சொன்ன போது ஹனுமார் "ஆஹா! உங்களுக்கு என்னுடைய பலம் தெரியவில்லை" னு சொல்லி விஸ்வரூபத்தை காண்பிக்கிறார். சீதை உடனே "ஆமாம். நீ இவ்வளவு பெரிய கடலைத் தாண்டி வந்து இருக்கியே! புரியாம பேசிட்டேன். உன்னால் முடியும். ஆனால் நான் ஒரு பெண்ணாக இருப்பதால் உன் முதுகில் ஏறி போகும் போது எங்கேயாவது கடலில் விழுந்து விடுவேன். இல்லை ராக்ஷஸா துரத்திண்டு வருவா" அப்படியெல்லாம் சொல்லிட்டு கடைசியில் அவ மனசுல இருக்கற உண்மையான எண்ணத்தை சொல்றா. "நான் ராமரைத் தவிர இன்னொரு ஆண்மகனை வலிய போய் எப்படி தொட முடியும்? ராவணன் என்னை பலவந்தமாக தூக்கிண்டு வந்துட்டான். அப்போ எனக்கு வேற வழி இல்லை. இன்னிக்கு என்னால உன் முதுகில் ஏறமுடியாமல் இருக்கிறேன்" என்று சொன்னவுடன் ஹனுமார் "ஆஹா! உங்களுக்கு பொருத்தமான வார்த்தைகளை நீங்கள் சொன்னேள். எனக்கு நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சு இருக்கறதை பார்க்க முடியலை. அங்கே அவர் படற கஷ்டத்தையும் பார்த்தேன். இங்கே நீங்க படற கஷ்டத்தையும் பார்த்தேன். உங்களை உடனே சேர்த்து வைக்கற எண்ணதுனால ஒரு வார்த்தை சொல்லிட்டேன்" என்கிறார். நான் போய் ராமரை அழைச்சுண்டு வரேன்னு சொன்னபோது இந்த ஸ்லோகத்தை சீதை சொல்றா. "ஸ மே ஹரிஸ்ரேஷ்ட ஸ லக்ஷ்மணம் பதிம் ஸ யூதபம் க்ஷிப்ரம் இஹோபபாதய | சிராய ராமம் பிரதி சோக கர்ஷிதாம் குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் ||"

நமக்கெல்லாம் ராமர் மஹாபெரியவா. எனக்கு கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் குருநாதர். அவர் கிட்ட எனக்கும் மஹாபெரியவா அனுக்ரகம் கிடைக்கும்படி தயவு பண்ணுங்கோ அப்படின்னு வேண்டிக்கறதுக்கு இந்த ஸ்லோகம் அழகா அமைஞ்சு இருக்கு. ஸ்வாமிகளுக்கு பாக்கியம். பெரியவா பக்கத்துலேயே இருந்தார். அந்த மாதிரி ஞானிகளுடைய சந்நிதியில் mental ஆக நாமும் பெரியவா சந்நிதியில் எப்பவும் இருக்க, பெரியவா நம்ம கூட இருக்க, இந்த ஸ்லோகத்தை சொல்லி வேண்டிப்போம்.

இப்படி ஸீதா தேவி ஹனுமார் கிட்ட "ஹனுமான், என் ராமரை சீக்கிரமாக அழைச்சுண்டு வந்து என் கஷ்டத்தை போக்கு" னு வேண்டிக்கறா. அந்த சீதையோட பக்தி எப்படிப் பட்டதுன்னு ஹனுமார் சீதையை பார்த்த உடனே புரிஞ்சுண்டுடறார். அவர் சொல்றார் "நைஷா பஷ்யதி ராக்ஷஸ்ய: நேமான் புஷ்ப பல த்ருமான் | எக்ஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவ அனுபஷ்யதி || ந ஏஷா பஷ்யதி ராக்ஷஸ்ய: - இந்த ராக்ஷசிகள் கோரமாக இருக்கா, பயமுறுத்தறா அப்படிங்கறதயும் அவ கவனிக்கவில்லை. ந இமான் புஷ்ப பல த்ருமான் - இந்த அசோக வனத்துல ரொம்ப அழகான, வாசனையோட உள்ள புஷ்பங்கள், பழங்கள் இருக்கு. அருவிகள், ஓடைகள் இருக்கு, ரொம்ப ரம்யமாக இருக்கு என்பதையும் அவள் மனசுல வாங்கி கொள்ளவில்லை. எக்ஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவ அனுபஷ்யதி - ஒரே மனசோட அவ ராமரையே நினைச்சுண்டு இருக்கா அப்படின்னு சொல்றார். ஹனுமார் ஸீதாதேவியை தர்சனம் பண்ணின உடனே இதைச் சொல்றார்.

அப்பறம் ராவணன் வந்து பயமுறுத்தி விட்டு போகிறான். ராக்ஷசிகள் பயமுறுத்தறா. அவா மேலும் மேலும் "இனிமே எங்க ராமன் வரப்போறான்? அவன் எங்கேயோ இருக்கான். பத்து மாசம் ஆச்சு. கடலைத் தாண்டி வர முடியுமா? அப்படி சொல்ல சொல்ல ஸீதாதேவிக்கு துக்கம் ஜாஸ்தி ஆகி ஒரு நிமிஷம் அவளோட நம்பிக்கை போயிடறது. அதுனால, "இனிமே என்ன இருக்கு? நான் உயிரை விடப்போறேன்" அபப்டின்னு முடிவு பண்ணி தன்னுடைய பின்னலிலேயே தூக்கு போட்டுக்க போறா. அப்போ ஒரு ஸ்லோகம் வரது. துக்கத்தோட எல்லையில் இருக்கும் போது "தஸ்யாஸ்து ராமம் பிரவிசிந்தயன்த்யா:" அப்படின்னு ராமரை மீண்டும்மீண்டும் நினைக்கறா. "இதீவ தேவி பஹுதா விலப்ய சர்வாத்மனா ராமம் அனுஸ்மரந்தி" - இப்படி ஸீதாதேவி அழும்போதும் முழு மனதோடு ராமனை நினைத்தாள் அப்படின்னு வரது.

அப்போ அவளுக்கு சுப சகுனங்கள் ஏற்படறது. என்னடா இதுன்னு வியக்கறா. அப்போ மரத்து மேலே இருந்து ஹனுமாரும் இவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று யோசிச்சு. அவர் புத்திமதாம் வரிஷ்டம் - புத்திமான்களுக்குள் சிறந்தவர். அதுனால ராம கதையைச் சொன்னால் இவளுடைய மனம் சமாதானம் ஆகும் என்று தீர்மானம் செய்து, மெதுவாக அவள் காதுக்கு கேட்கும்படியாக, ராஜரிஷிகளும் போற்றும் இனிமையான ராம கதையை சொல்ல ஆரம்பிக்கிறார். அப்படி ராம கதையை அவர் சொல்லச் சொல்லச் சொல்ல சீதைக்கு மனசுல துக்கம் எல்லாம் போய் சந்தோஷம்

ஏற்படறது. அப்போ அவர் நிமிர்ந்து பார்த்து மரத்து மேல் ஹனுமாரை தர்சனம் பண்றா. மஞ்சள் பட்டாடை உடுத்திக் கொண்டு ஹனுமார் மரத்துமேல் சூர்யனைப் போல ஒளி விடுகிறார். சீதைக்கு விடிந்தது, என்பார் ஸ்வாமிகள். அவளுக்கு கஷ்டம் எல்லாம் விடிந்தது. அங்கே ஒரு ஸ்லோகம் வருகிறது. "ஸ்வயம் ப்ரஹர்ஷம் பரமம் ஜகாம சர்வாத்மனா ராமம் அனுஸ்மரந்தி" துக்கத்தின் எல்லையிலும் ராமனையே நினைத்தாள். இப்போ சுகத்தின் எல்லையிலும் ராமனையே முழு மனதாக நினைத்தாள். இது தான் பக்தி. இப்பேற்பட்ட பக்தி இருந்தால் குரு வருவார். குரு கிட்ட நாம பணிவோடு, உருக்கத்தோடு வேண்டிண்டா பகவானை அழைச்சுண்டு வருவார்.

அந்த மாதிரி பக்தி ஏற்படறதுக்கு என்ன பண்ணனும்னு கேட்டா, அதுக்கும் மஹான்கள் வழி காண்பிச்சு இருக்கா. ஒழுக்கம் என்ற வேலி போட்டு, மனமாகிய வயலில், விவேகம் என்ற கலப்பையால் உழுது, காம க்ரோதாதி களைகளை பிடுங்கி எறிந்து, குருவுடைய அனுக்ரகம் என்ற வாய்க்கால் கட்டி, இடையறாத பஜனம், பகவானுடைய நாம ஸ்மரணம் என்ற விதையை விதைச்சுண்டே இருந்தா, பகவானுடைய அனுக்ரகம் என்ற மழை பொழிஞ்சு, ஞானப் பயிர் விளையும் என்று ஒரு மஹான் சொல்லி இருக்கார். இதுல, அவர் கூடவே சொல்றார். என்னிக்காவது மழை பொய்க்கறது உண்டே, அது மாதிரி அனுக்ரஹ மழை பெய்யாமல் இருந்துடுமோ? அப்படின்னு கேள்வி கேட்டுண்டு அவரே சொல்றார். பகவானுடைய நாமம். பஜனம் என்ற விதை பகவானுடைய அனுக்ரகம் என்ற மழையை ஆகர்ஷணம் பண்ணக் கூடிய காந்தம் போன்ற ஒரு விசேஷ விதை. அதுனால மழை தவறாமல் பெய்யும். பகவதனுக்ரகம் கட்டாயம் கிடைக்கும் என்று சொல்கிறார். நாமும் ராம நாமத்தை சொல்லி பக்தி வளர்ந்து குரு அனுக்ரஹத்தால் பகவானை அடையவோம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

ராமனே என் தெய்வம்;ஏக பக்திர் விஷிஷ்யதே

ஸுந்தர காண்டத்துல, இருபத்தி நாலாவது சர்க்கத்துல, ஒரு ஸ்லோகம்

दीनो वा राज्यहीनो वा यो मे भर्ता स मे गुरुः। तं नित्यमनुरक्तास्मि यथा सूर्यं सुवर्चला ।।

தீனோ வா ராஜ்ய ஹீனோ வா யோ மே பர்த்தா ஸ மே குரு: |

தம் நித்யம் அனுரக்தாஸ்மி யதா சூர்யம் சுவர்ச்சலா ||

ஸீதா தேவியை ராவணன் வந்து பார்த்து, ஏதேதோ ஆசை வார்த்தைகள் பேசறான். அவ நிமிர்ந்து கூட பார்க்கலை. அப்புறம் பயமுறுத்தறான். அவ ஒரு துரும்ப போட்டு, "அற்ப பதரே, உனக்கு பெரிய ஆபத்து இருக்கு. நீ திருடனாட்டம், பேடியாட்டம், ராம லக்ஷ்மணாளை அப்புறப் படுத்திட்டு, அவா இல்லாத போது, என்னைத் தூக்கிண்டு வந்திருக்கே. அவா இருக்கறப்போ, நீ என்னை தூக்கிண்டு வந்துருந்தா, என்னிக்கோ, நீ, கர, தூஷணாளை பார்க்க எமலோகத்துக்குப் போயிருப்ப. நீ இவ்வளவு பேச்சு பேசாதே. நான் ஒரு நாளும்

உன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன். எனக்கு, ராமன்தான் தெய்வம். உனக்கு உயிர் மேல ஆசை இருந்தா, ராமர் கிட்ட என்னை ஒப்படைச்சு மன்னிப்பு கேட்டுக்கோ" அப்படீன்னு தைரியமா சொல்றா. அப்போ ராவணன் கோபத்தோடு அவளை கொல்ல வரான். அப்போ மற்ற ராக்ஷசிகள் எல்லாம், "நீ ஏன் இவளோட மன்றாடற. நீ வா போகலாம்னு" அவனை தள்ளிண்டு போயிடறா. அவன் சிரிச்சுண்டே போயிடறான். போகும்போது அந்த ராக்ஷசிகள்கிட்ட, "இவளை எப்படியாவது, வழிக்கு கொண்டு வாங்கோ. மிரட்டியோ, உருட்டியோ, இல்ல ஆசை வார்த்தை பேசியோ எப்படியாவது, வழிக்கு கொண்டு வாங்கோ" அப்படீன்னு சொல்லிட்டு போறான்.

அவன் போன உடனே, ராக்ஷசிகள் எல்லாம் ஸீதாதேவிகிட்ட, "ராவண மஹாராஜாவுக்கு என்ன குறைச்சல். அவருக்கு ஆயிரக் கணக்கான பத்னிகள் இருக்கா. இருந்தாலும் உன்கிட்ட வரார். இவாளுக்கு எல்லாம் தலைவியா, பட்ட மஹிஷியா இருக்கலாம். உனக்கு என்ன கசக்கறதா, உனக்கு இவ்வளவு கர்வமா" அப்படீன்னு பேசிண்டே வரா. இதை எல்லாம் சீதை காதுலயே வாங்கலை. "அந்த ராமன் என்ன சாதாரண மனுஷன், அல்ப ஆயுசு, என்னமோ பெண் பேச்சை கேட்டுண்டு காட்டுக்கு வந்துருக்கான். அவன் இவ்வளவு பெரிய கடலை தாண்டி, இவ்வளவு நாளுக்கு அப்புறம் வரப் போறான்னு நினைச்சுண்டு இருக்கியா" அப்படீன்னு சொல்றா. "அவனுக்கு ராஜ்ஜியம் இல்ல, ஒண்ணும் இல்லை. ஆனா ராவணனை பாரு. அவன்கிட்ட எவ்வளவு சொத்து சுகம், ரத்தினங்களும், எவ்வளவு பெரிய மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், புஷ்பக விமானமும் எல்லாம் இருக்கு. இதெல்லாம் enjoy பண்றதை விட்டுட்டு, என்னமோ உளறிண்டு இருக்க. இளமைங்கிறது, சீக்கிரம் போயிடும், அதனால enjoy பண்ணனும்", அப்படீன்னு ராக்ஷசிகள் சொல்றா.

ஸ்வாமிகள் சொல்வார், "மகான்கள், இளமைங்கிறது சீக்ரம் போயிடும், அதனால பகவான சீக்கிரமா சின்ன வயசுல இருந்தே பகவானை பஜிக்கணும்னு சொல்வா. இந்த மாதிரி அசத்துகள், மாத்தி சொல்றா", அப்படீன்னு சொல்வார். அப்படி அந்த ராக்ஷசிகள் மத்தது சொன்ன போது சீதை காதுல வாங்கலை. அந்த ராக்ஷசிகள் ராமனை பத்தி சொன்ன போது சீதைக்கு பொறுக்கலை. அப்போ, சீதை சொல்றா. தீனோ வா ராஜ்ய ஹீனோ

வா யோ மே பர்த்தா ஸ மே குரு: | தம் நித்யம் அனுரக்தாஸ்மி யதா சூர்யம் சுவர்ச்சலா || என் கணவன் ஏழையா இருந்தாலும் சரி, அவன் நாட்டை இழந்தவனாக இருந்தாலும் சரி, எனக்கு யார் கணவனோ அவர்தான் எனக்கு தெய்வம். அவரைதான் நான் பின் தொடர்வேன், சூரியனை ஸ்வர்ச்சலா தேவி பின் தொடர்வது போலவும் அருந்ததி, வசிஷ்ட பகவானை பின்தொடர்வது போலவும், ரோகிணி சந்திரனை பின் தொடர்வதுபோலவும், தமயந்தி நளனிடம் இருந்தது போலவும், மதயந்தி, கல்மாஷ பாத சௌதாஸனிடம் இருந்தது போலவும், நான் என் கணவரைத் தான் தெய்வமா வெச்சிருப்பேன், இன்னொருத்தரை நான் பார்க்கவே போறது இல்லை. நீங்க இந்த பேச்சையே பேச வேண்டியது இல்ல" அப்படீன்னு சொல்றா.

அந்த சௌதாஸன், மதயந்தி அப்படீன்னு சீதை சொல்றாளே. அவா யாரு? இது அதிகம் பேருக்கு தெரிஞ்சிருக்காது. அந்த மதயந்திங்கிறவ கற்புக்கரசி, மஹா உத்தமி, அவளோட கதையை நான் உங்களுக்கு சொல்றேன். அந்த கதை என்னன்னா, அந்த சௌதாஸங்கிறது, இக்ஷ்வாகு வம்சத்துல ராமருக்கு முன்னாடி, ஒரு பத்து தலைமுறை முன்னாடி இருந்த ஒரு ராஜா. இக்ஷ்வாகு குலத்து மன்னர்கள் எல்லாருமே ஜயசாலிகள், வெற்றி வீரர்கள். அந்த மாதிரி இந்த சௌதாசனும் எல்லாரையும் ஜெயிச்சு, சக்ரவர்த்தியா ஆண்டுண்டு இருந்தான். ஒரு எதிரி அவனுக்கு. எப்படியோ அவனை தோற்கடிக்க முயற்சி பண்ணி பாக்கறான். இந்த சௌதாசனை தோற்கக்கடிக்க முடியல அவானால. அதனால அவன் என்ன பண்றான். சமையற்காரனாட்டம் வேஷம் போட்டுண்டு வந்து, இந்த சௌதாசனோட சமையற்கட்டுல, சமையல் காரனா இருக்கான். அப்போ வசிஷ்டர் ஒரு நாளைக்கு சாப்பிட வரும்போது, நர மாமிசம் சமைச்சு அவன் வசிஷ்டருக்கு பரிமாறிடறான். உடனே வசிஷ்டர் கோச்சுண்டு, ராஜா இருக்கார், அங்க. "என்னது இது?", அப்படீன்னு கேட்கறார். ராஜா, "ஐயையோ எனக்குத் தெரியலையே", அப்படீன்னு சொல்றான். "நான் யாருன்னு பார்த்து தண்டிக்கறேன்", அப்படீன்னு சொன்ன போது, வசிஷ்டர் சொல்றார். "அவனை என்ன தண்டிக்கறது, நீதான் பொறுப்பு, நீ பிரம்மராக்ஷஸா போ" அப்படீன்னு சபிச்சுடறார்.

உடனே ராஜாவுக்கு கோபம் வந்துடறது. “ஒரு தப்பும் அறியாதவன் நான். யாரோ பண்ணின சூழ்ச்சியினால நான் மாட்டிண்டுட்டேன்”. இப்படிதான் அவனை ஜெயிக்க முடியும்னு அந்த எதிரி தெரிஞ்சுண்டு இப்படி பண்றான். “பகவான், நீங்க எல்லாம் தெரிஞ்சவர், நீங்க என்னை சபிக்கலாமா” அப்படின்னு, அந்த ராஜா, “நான் உங்களை சபிக்கிறேன்” என்று வசிஷ்டரை சபிக்க கையில ஜலம் எடுத்துடறார். அப்போ அந்த மதயந்திங்கிற சௌதாசனோட மனைவி வந்து “நான் உங்ககிட்ட ப்ரார்த்தனை பண்ணிக்கறேன் , நம்ம குலத்துல குருவை ஒருத்தர் சபிச்சார், அப்படீங்கிற வார்த்தை வரவேண்டாம், நீங்க பொறுத்துக்கோங்கோ”, அப்படீன்னு சொன்ன உடனே, “வாஸ்தவம்தான்” அப்டீன்னு சொல்லி கோபத்தை பொறுத்துக்கறான். ஆனா அந்த கோபத்துனால அவன் கையில இருக்கிற ஜலம் கொதிக்கறது. அப்போ இந்த ஜலத்தை எங்க விடறதுன்னு பாக்கறான். ஆகாசத்துல விடலாம்னு பாத்தா, ஆகாகசத்துல பறவைகள், எல்லாம் இருக்கு, ஜலத்துல விடலாம்னு நினைச்சா, ஜலத்துல, மகரங்கள், மீன்கள் எல்லாம் இருக்கு, அதெல்லாம் கஷ்டப் படும். தரையில விட்டா, இருக்கிற உயிரினங்கள் எல்லாம், கோபத்துனால எரிஞ்சிடும், அதனால தன்னோட கால் மேலேயே அந்த ஜலத்தை விட்டுக்கறான். அதனால அவன் கால் எரிஞ்சு போயிடறது. கரிகாலன் ஆயிடறான். அதுக்கு கல்மாஷ பாதன்னு சமஸ்க்ருதத்துல பேரு. அதனால கல்மாஷபாத சௌதாசன்னு பேரு. வசிஷ்ட முனிவர், “நீ பன்னிரெண்டு வருஷம் இந்த மாதிரி ப்ரம்மராக்ஷஸா இருப்ப. அப்புறம் சுய ரூபம் வந்துடும்”னு சொல்றார். அப்படி பன்னிரெண்டு வருஷம், ப்ரும்மராக்ஷஸா இருந்த அவனிடம், அவனுடைய மனைவி, அனுசரணையா இருந்துண்டு, விடாம அவன்கிட்ட அன்பு பாராட்டிண்டு, அப்புறம் அவன் உடம்பு சரியான உடனே சௌக்யமா இருக்கா. அப்படி ஒரு வ்ருத்தாந்தம்.

அப்படி ஸீதா தேவி இவாளை எல்லாம் நினைச்சு, தமயந்தி, மதயந்தி, ரோகிணி, வசிஷ்டேரோட மனைவி அருந்ததி, சூரியனுடைய மனைவி, சுவர்ச்சலா, இது போல நான் ஏக பக்தியா என் கணவன்கிட்ட நான், தெய்வமா நினைச்சு நான் இருப்பேன், வேறு யாரையும் நான் ஏறெடுத்துக் கூட பாக்கப் போறது இல்ல”, அப்படீன்னு சொல்றா.

நேத்திக்குப் பேசிண்டு இருக்கும் போது, நமக்கெல்லாம், மஹாபெரியவா தான் ராமர் அப்படீன்னு சொன்னேன். அந்த மாதிரி, நாம எல்லாரும், மஹாபெரியவா கிட்ட ஏக பக்தியா இருக்கணும், மஹா பெரியவா தெய்வம், அப்படீன்னு புரிஞ்சுண்டு, அவரை நாம அடையணும்னு, நினைச்சா அடிக்கடி நாம ஒவ்வொரு சாமியாரா போயி பாத்துண்டு இருக்கக் கூடாது, பெரியவா, நூறு வருஷம் இருந்து, ஜகத்குருவா இருந்து, நமக்கு வழி காண்பிச்சிருக்கா. அவா என்ன, கருணை பண்றாளோ, அது போறும். அதுக்கு, நமக்கு, சிவன் சார், ஸ்வாமிகள் மாதிரி, பெரியவாக் கிட்ட கூட்டிண்டு போறதுக்கு, யாரு சொல்லியிருக்காளோ அதை கேட்கலாம், ஆனா, மஹாபெரியவாளை தவிர, வேற ஒருத்தரையும் தெய்வமா நினைக்கக் கூடாது. திருவாசகத்துல ஒரு ஸ்லோகம் இருக்கு.

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்

மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்

துற்றிருமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்

பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

அப்படீன்னு ஒரு பாட்டு. கற்றறியேன் கலைஞானம், எனக்கு ஒரு சாஸ்திரமும் தெரியாது, எனக்கு கசிந்து உருகவும் தெரியல, பக்தி பண்ணவும் தெரியலை. ஆனா ஒண்ணு தெரியும் – வேற ஒரு தெய்வம் எனக்கு தெரியாது, வாக்கியலால், என்னுடைய வாக்காலயும், என்னுடைய கைகால்கள், அவயங்களை வெச்சுண்டு, வார் கழல்கள், உன்னுடைய பாதத்திற்கு, வந்து உற்று நெருங்கி இருந்து, இறுமார்ந்திருந்தேன். பெரியவா இருக்கா, அப்படீன்னு, அதுதான் என்னுடைய ஒரே பற்றுகோடாக நம்பிக்கையா இருக்கேன், இப்படி இருக்கிற எனக்கு, நீ பண்ண, உன்னுடைய அனுக்ரஹம் எப்படி இருக்குன்னா, பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் – சில பேர் செல்லப் பிராணியா நாயை வளர்ப்பா. அந்த நாயை பொன்னால ஒரு சிம்மாசனம் பண்ணி அதுல அதை உட்கார வைப்பாளாம். அந்த மாதிரி உன்னுடைய அனுக்ரஹம் எப்படி இருக்குன்னா, ஒரு நாய்க்கு சிம்மாசனம் போட்டு உட்கார வெச்சா மாதிரி இருக்கு. நாய்னு சொல்றதும் ரொம்ப பொருத்தம், நாய் ரொம்ப கீழான ஒரு

பிராணி. மனுஷப் பிறவி மாதிரி, உயர்ந்த பிறவி கிடையாது, ஆனா நாய்க்கு இருக்கற நன்றி மனுஷனுக்கு இல்லை. அந்த மாதிரி நமக்கு பகவான் பண்ற நன்மையை நினைச்சு, பகவான்கிட்ட நாம நன்றியோட இருக்கணும். அந்த மாதிரி ஒரு, sense of gratitude இருந்தா அந்த தெய்வத்தோட பெருமை புரியும், loyalty இல்லாம ஒவ்வொரு இடமா, மாத்தி மாத்தி போயிண்டு இருக்க மாட்டோம். அந்த ஆனந்தா வராரா, இந்த யோகி வராரா அப்படின்னு போயிண்டு இருக்க மாட்டோம். அதே வார்த்தையை அபிராமி அந்தாதில ஒரு பாட்டுலயும் சொல்றார்.

பதத்தே உருகி நின் பாதத்திலே மன பற்றி உன்றன்

இத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனி யான் ஒருவர்

மதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்

முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

அப்படீன்னு உன்னுடைய பாதத்துல எனக்கு மனசு வெக்கறதுக்கும், உன்னை வழி படறதுக்கு, வழி என்னன்னு காமிச்சுக் கொடுத்த. என்னை அடிமையா நீ ஏத்துண்டுட்ட. இனிமே இன்னொருத்தர் மதத்துல நான் மயங்க மாட்டேன், இந்த வழி, அந்த வழின்னா எனக்கு வேண்டாம். நான் அந்த வழில போகவும் மாட்டேன், மூவருக்கும் தேவருக்கும், எல்லாருக்கும் மேலானவள் நீ. உன்னுடைய முகிழ்நகையே, அப்டீங்கறார். நகைன்னா, மந்தஹாசம். அந்த மந்தஹாசம் மலருகிதாம். அந்த மலரும் மந்தஹாசத்தை, தேவர்களும் மூவர்களும் போற்றுகிறார்கள். அப்பேற்பட்ட, உன்னுடைய பாதத்துல நான் அடிமையா இருக்கக் கத்துண்டுட்டேன், இன்னொருத்தர் கிட்ட போக மாட்டேன் அப்படீன்னு சொல்றார். இது நான் ஸ்வாமிகள்கிட்ட பாத்துருக்கேன். மஹாபெரியவா தான் தெய்வம், இன்னொர்த்தரை, அவர் அந்த இடத்துல வைக்க மாட்டார். இதுனாலதான் பெரியவா கூப்பிட்டு, அவருக்கு அனுக்ருஹம் பண்ணினார். அந்த மாதிரி நமக்கும், பெரியவா மேல பக்தி வரதுக்கு, ஸ்வாமிகள் அனுக்ருஹம் பண்ணனும், ஸீதா தேவியினுடைய, ராம பக்திதான் அதுக்கு, ஒரு உதாரணமா, அடையாளமா வெச்சுக்கணும்.

ஸ்வாமிகள் இன்னொண்ணு சொல்வார், வால்மீகி ராமாயணம் பாராயணம் பண்ணிண்டு, ராமர் கைகேயிகிட்ட சொல்ற வார்த்தைகள்

अहं हि वचनाद्राज्ञः पतेयमपि पावके। भक्षयेयं विषं तीक्ष्णं मज्जेयमपि चार्णवे।।

நான் அப்பாவுடைய வார்த்தைக்காக, நெருப்புலயும் குதிப்பேன், விஷத்தையும் சாப்பிடுவேன், கடல்ல போயி, விழுவேன், அதனால நீ, அப்பா பேச்சை நான் கேட்பேனான்னு, நினைக்காதே, நான் இதோ இப்பவே கிளம்பறேன், காட்டுக்கு. அப்படீன்னு, சொல்றார். அந்த மாதிரி ஸ்லோகங்கள். இன்னிக்கு, ஸீதா தேவி சொன்னான்னு, படிச்சோமே, தீனோ வா ராஜ்ய ஹீனோ வா யோ மே பர்த்தா ஸ மே குரு: | தம் நித்யம் அனுரக்தாஸ்மி யதா சூர்யம் சுவர்ச்சலா || அப்படீன்னு, என் கணவன் ஏழையா போனாலும், நான், அவனையே, என் தெய்வமாகக் கொள்வேன், அப்படீன்னு, ஸீதா தேவி சொன்ன இந்த மாதிரி ஸ்லோகங்கள் எல்லாம் படிச்சுண்டு இருந்தா, நமக்கும் சொன்ன பேச்சைக் கேட்கக் கூடிய பிள்ளைகளும், நம்மகிட்ட, கஷ்டத்துலயோ, நஷ்டத்துலயோ, எப்படி இருந்தாலும் அன்பு காட்டற மனைவியும், அமைவா. அதுக்கு ஸ்வாமிகள் சொல்வார், "அறுவது வயசு ஆன பின்னக் கூட, கணவருக்கு heart attack எல்லாம் வந்து ரொம்ப கஷ்டப் பட்டுண்டு இருப்பார். இருந்தாலும், "மாத்திரை எடுத்து வெச்சிருக்கேன், கொஞ்சம் வேலைக்குப் போயிட்டு வந்துடுங்கோ", அப்டீன்னு, அவ்வளோ பணத்துல ஆசை பட்டுண்டு, சில பெண்கள் இருப்பா. அப்படி இல்லாம, ஐம்பது வயசுலயே, "போறும்னா! நீங்க ராமாயணம் படிச்சுண்டு இருங்கோ, உங்களுக்கு ஸுந்தர காண்டம் தான் ரொம்ப பிடிச்சது, ராமர் காப்பாத்துவார்". அப்படீன்னு மனைவி சொல்வா. பையனும், "ஆமாம்பா, நானும் இன்னும் ரெண்டு வருஷத்துல வேலைக்குப் போயிடுவேன், எல்லாம் பாத்துக்கலாம்ப்பா, நீ ராமாயணம் படி" அப்படீன்னு சொல்வான், அப்படீன்னு ஸ்வாமிகள் சொல்வார். இந்த ராமாயண ஸ்லோகங்களுக்கு, அவ்வளவு ஒரு அனுக்ரஹ சக்தி உண்டு அப்படீன்னு, ஸ்வாமிகள் சொல்வார்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம

<u>யஸ்ய ஸ்ரீ ஹனுமான் அனுக்ரஹ பலாத்</u>

ஸுந்தரகாண்டத்தோட முதல் ஸர்கத்துல ஹனுமான் ஆகாசத்துல பறக்க போறார். அப்போ ஒரு ஸ்லோகம் சொல்றார்.

यथा राघवनिर्मुक्तः शरः श्वसनविक्रमः। गच्छेत्तद्वद्गमिष्यामि लङ्कां रावणपालिताम्।।5.1.40।।

யதா ராகவ நிர்முக்தஹ ஷரஹ ச்வஸன விக்ரமஹ |

கச்சேத் தத்வத் கமிஷ்யாமி லங்காம் ராவணன் பாலிதாம் ||

அப்படினு சொல்றார்.

இந்த ஸ்லோகம் ரொமப ஒரு விசேஷமான ஸ்லோகம். கடற்கரையில வானரா எல்லாம் இருக்கா. அந்த ஸ்வயம்பிரபா என்கிற ஒரு தபஸ்வி, யோகினி அவாளை தன் தபோபலத்தால் குஹைக்குள்ளேருந்து வெளியில கொண்டு வந்து விடறா. பார்த்தா வசந்தகாலமே வந்துடுத்து. 'இனிமே திரும்பிப்போனா, சுக்ரீவன் தண்டிப்பான். ஒரு மாசத்துக்குள்ள திரும்ப வரணும்'னு சொல்லி இருக்கான், அப்படின்னு விசன பட்டுண்டு, அங்கதன் தான், அந்த தெற்கு திக்குல வந்த வானராளுக்கெல்லாம் லீடர். அவன் 'நான் உயிரை

விடப்போறேன். நான் ஒண்ணும் திரும்பி போக போறதில்லை' அப்படின்னு சொல்லி, ப்ரயாயோபவேசம் பண்றான். படுத்துண்டு உயிரை விடலாம் அப்படின்னு முடிவே பண்ணிடறா.

அப்போ அங்க மலைமேலேருந்து சம்பாதிங்கற கழுகு இவாளை பாக்கறது. அது நெனச்சிக்கறது 'ஆஹா பகவான் எப்படியெல்லாம் சாப்பாடுக்கு வழி பண்றார் பாரு! நம்மால பறக்க முடியாம இறக்கையில்லாம இருக்கோம். இங்க கொஞ்சம் பேரை கூட்டிண்டு வந்து, அவா 'நாங்க உயிரைவிடப் போறோம்' ன்னு சொல்றா. ஒண்ணு மூணு மாசம் தாங்கும். ஒண்ணு ஆறு மாசம் தாங்கும். நமக்கு சாப்பாட்டுக்கு வழியாச்சு' அப்படின்னு நினைக்கறது ஸம்பாதி கழுகு.

அப்போ இந்த கழுகு வந்து நிக்கறதை பார்த்த உடனே அங்கதனுக்கு இன்னுமே ரொம்ப ஆயாசமாறது. 'என்னடா இது. நாம உயிரை விடப்போறோம்னு சொன்ன உடனே, அதுக்குள்ள சாப்பிடறத்துக்கு கழுகு வரது' அப்படின்னு சொல்லி அவன் பொலம்பலோட சேர்ந்து பொலம்பறான். "அன்னிக்கு ராமனுக்காக ஜடாயுங்கிற கழுகு உயிரவிட்டுது! இன்னிக்கு நாம வானரா எல்லாம் உயிரை விடப் போறோம். அப்படி ராம கார்யத்துக்காக என்ன வேணும்னாலும் பண்ணலாம். உயிரையும் விடலாம். ராமர் அவ்வளோ பெரியவர்!" அப்படி எல்லாம் சொல்லிண்டு வரான். இதை கேட்ட உடனே அந்த சம்பாதி "ஆஹா, என்னது ராமருக்காக ஜடாயு உயிரை விட்டானா ! யாரு ராமர்? எப்படி அவன் உயிர் பிரிந்தது? ஜடாயு என் தம்பியாச்சே! விஸ்தாரமா சொல்லுங்கோ" என்று கேட்கிறது.

அங்கதன் பதில் சொல்றான். ஆனால் அவனுக்கு நம்பிக்கை இல்லை. இந்த கழுகு நம்மை சாப்படறதுக்காக ஏதோ பேச்சு கொடுத்து பாக்கறது ன்னு நினைக்கிறான். இருந்தாலும் சொல்லி வைப்போமே, உயிரை விடப்போறோம். கழுகு நம்மை சாப்ட்டா சாப்பிட்டு போட்டுமே" னு சொல்லி பாதி நம்பிக்கையோட இவனும் சொல்றான். அப்படி இவா ரெண்டுபேர் ஒண்ணும் close friends கிடையாது. அப்படி இருந்தாலுமே ராமகதையை சொன்னா ரெண்டு பேருக்கும் க்ஷேமம் ஏற்படும் அப்படினு ஸ்வாமிகள் சொல்வார். அந்த ராமகதையை சொல்றான்.

"தசரத மஹாராஜாவோட பிள்ளை ராமர் காட்டுக்கு வந்தார். அவருடைய மனைவி ஸீதாதேவியை ராவணன் ஜடாயுவை வதம் பண்ணிவிட்டு

அபஹரித்து கொண்டு போய்ட்டான். நாங்கள்லாம் சீதையை தேடி வந்துருக்கோம்னு" சொன்னனோடனே "ஆஹா! அந்த ஜடாயு என் தம்பி" அப்படினு அது தன்னுடைய வ்ருத்தாந்தத்தை சொல்றது. அப்பறம் சம்பாதி "இங்கிருந்தே நான் உங்களுக்கு பாத்து சொல்றேன். எங்களுக்கு தீர்கமான பார்வையுண்டு" என்று சொல்லி "கடலுக்குள் நூறு யோஜனை தள்ளி இலங்கைனு ஒரு தீவு இருக்கு. அதுல சீதையிருக்கா" அப்படின்னு சொன்ன உடனே அதுக்கு இறக்கை முளைக்கறது, அப்படி இவாளுக்கும் வழிகிடைக்கிறது. சீதை எங்கேயிருக்காங்கற குறிப்பு கிடைக்கறது. அந்த சம்பாதிக்கும் இறக்கை முளைக்கறது. அப்படி ராம கதைய நம்பிக்கையிருந்தோ, நம்பிக்கையில்லாதவாளுக்கோ, நல்லவாளுக்கோ, கெட்டவாளுக்கோ, ராமகதையை சொன்னா க்ஷேமம்தான் ஏற்படும், என்று ஸ்வாமிகள் சொல்வார்.

நேத்தி சிவன் சாரோட ஆராதனைக்கு போயிருந்தேன். அங்க ஒரு ரெண்டு மணி நேரம் அவருடைய life லேருந்து அவரோட பழகின எல்லாரும் சொன்ன அனுபவங்கள்லாம் வெச்சு ஒரு Drama போட்டா. ரொம்ப நன்னா இருந்தது. அவசியம் பார்க்க வேண்டியது. அவா Youtube ல Share-பண்றாளான்னு பாக்கலாம். லக்ஷ்மிநாராயணன், சுப்புணி, சந்திரமௌலி ,சிவராமன், கௌரி, ரமணன் இவா எல்லாம் தான் characters. அவாளே direct ஆக நடிக்கவில்லை. அவா characterஆ மத்தவா நடிச்சா. ஸுந்தரகுமார் ஒரு character, நம்ம ஸ்வாமிகள் ஒரு character. ரொம்ப நன்னா பண்ணியிருந்தா. மஹாபெரியவா characterization ரொம்ப தத்தருபமா இருந்தது. சிவன் சார் கிட்ட பக்தி இருக்கறவாளுக்கு ரொம்ப பிடிக்கும்.

அதுல முதல் தடவை ஸுந்தரகுமார் வந்து சாரை நமஸ்காரம் பண்ணினபோது, "நீ என்ன பண்ணறே?" னு கேட்ட போது "ராமாயண பாகவத ப்ரவசனம் பண்ணிண்டிருக்கேன். நல்லபடியா நடக்கணும். நிறைய ப்ரவசனம் பண்ணனும். ஆசிர்வாதம் பண்ணுங்கோ"னு கேட்கறார். சார் சொன்னாராம் "ராமாயண பாகவதத்தை யார் சொன்னாலும் நன்னா தான் இருக்கும்" அப்படீன்னாராம். இது எனக்கு ஒரு messageன்னு நான் நெனச்சுண்டேன்.

அப்படி ராமாயணத்தைச் சொல்லி இவா ரெண்டு பேருக்கும் வழி கிடைக்கிறது. அந்த சம்பாதி இறக்கை முளைச்சு பறந்து போயிடறது. இப்போ வானரா எல்லாரும் உட்கார்ந்து "யாரால நூறு யோஜனை கடலைத் தாண்டமுடியும்?"

அப்படினு கவலைப்படும்போது, ஒவ்வொருத்தரும் என்னால பத்து யோஜனை முடியும். இருவது யோஜனை முடியும்ங்கறா. ஜாம்பவான் "முன்ன என்னால நூறு யோஜனை தாண்ட முடியும். ஆனா இப்போ வயசாயிடுத்து தொண்ணூறு தான் முடியும்" அப்படின்னு சொன்னபோது, அங்கதன் "என்னால நூறு யோஜனை தாண்ட முடியும். ஆனா திரும்பியும் நூறு யோஜனை தாண்டி இங்க வருவேனா தெரியலை" என்கிறான். அப்போ ஜாம்பவான் சொல்றார் "நீ வாலிபுத்ரன் ஆயிரம் யோஜனைக்கூட தாண்டுவாய். இருந்தாலும் நீதான் இந்த சேனைக்கு தலைமையில் இருக்க. அதனால உன்ன அனுப்பபடாது. ஒரு leaderஐ முன்ன அனுப்பிச்சிட்டு followers எல்லாம் பின்னாடி உட்கார்றதுங்கிறது சரியில்லை" என்கிறார்.

திரும்பவும் "என்ன பண்றது இப்போ" அப்படின்னு அங்கதன் கவலைப்படறான். அப்போ ஜாம்பவான் "இந்த காரியத்தை யார் பண்ணுவா எனக்கு தெரியும். அதோ அங்கே அமைதியாக உட்கார்ந்து இருக்காரே அந்த ஹனுமாரை போய் நாமெல்லாம் உத்சாகப் படுத்துவோம். அவருடைய பலம் அவருக்கு தெரியாது. நாம் சொன்னால் அவருக்கு ஞாபகம் வரும்" னு சொல்லி, எல்லாருமா போய் ஹனுமாரை ஸ்தோத்ரம் பண்றா. இந்த இடத்துல 'ஹனுமாரை வானரா எல்லாருமா ஸ்தோத்ரம் பண்றா, அவர் வானளவுக்கு வளர்ந்தார்' அப்படிங்கிறத சொல்லும்போது ஸ்வாமிகள் ஹநுமத் பஞ்சரத்னத்தை ஒரு தடவை சொல்லுவார். சொல்லிட்டு, "யாராவது ஏதாவது ஹனுமாரை பிராத்தனை பண்ணினோம் என்றால் நிறைய நிறைய ஸ்தோத்ரம் பண்ண பண்ண அவர் பெரிசா வளர்ந்து நிறைய அனுக்ரகம் பண்ணுவார். அதிகஸ்ய அதிகம் பலம். அதனால நூத்தியெட்டு ஆவர்த்தி ஹநுமத் பஞ்சரத்னம் ஜபம் பண்ணுங்கோ. அப்போ ஹனுமார் பெரிசா வளர்ந்து நிறைய அனுக்கிரஹம் பண்ணுவார்" அப்டின்னு சொல்லுவார் அந்தமாதிரி ஹநுமத் பஞ்சரத்னம் சொல்லி ஹனுமார ஸ்தோத்ரம் பண்ண பண்ண அவர் வளருகிறார்.

அவர் பெருமையை ஜாம்பவான் சொல்றார் "நீ வாயுகுமாரன்! உன்னுடைய கைகள்ல கருடனுடைய பக்ஷங்கள்ல எவ்வளவு பலம் இருக்கோ, அவ்வளவு பலம் உன் கைகளில் இருக்கு. உன்னால வாயு மாதிரி ஆகாசத்தில் போக முடியும். நீ தான் இந்த கார்யத்தை எங்களுக்காக பண்ணனும். எங்க எல்லரோட உயிரும் இப்போ உன் கிட்ட தான் இருக்கு. ஹே ஹனுமான் நீ இதை பண்ணு. நாங்க எல்லாரும் ஒத்தக்கால்ல நிண்ணுண்டு உனக்காக எல்லா தெய்வங்களையும் பிரார்த்தனை பண்றோம்" அப்படினு ஜாம்பவான் உத்சாக படுத்தறார். ஹனுமாரும் "ஆமாம்! என்னால முடியும். இப்போ எனக்கு

தெரியறது!" அப்படினு சொல்றார். "இந்த மஹேந்திர மலைல ஏறி நான் ஆகாசத்தில் பாய்கிறேன். இந்த பூமில நிண்ணுண்டு நான் வானத்துல பாய்ந்தால் பூகம்பமே வந்துவிடும். அதனால நான் மலைமேல ஏறிண்டு தாவுகிறேன்" அப்படினு அந்த மலைமேல ஏறிண்டு ஆகாசத்துல தாவ போகும்போது இந்த "யதா ராகவ நிர்முக்த:" ஸ்லோகத்தை சொல்றார்.

அந்த ஸுந்தரகாண்டத்தோட முதல் ஸ்லோகம் ततो रावणनीतायाः सीतायाः शत्रुकर्शनः। इयेष पदमन्वेष्टुं चारणाचरिते पथि।।

ததோ ராவணநீதாயா: ஸீதாயா: ஷத்ருகர்ஷந: |

இயேஷ பத்மந்வேஷ்டும் சாரணா சரிதே பதி || அப்படினு "ஹனுமார் ஸீதாதேவி இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க ஆகாச மார்க்கமாக செல்ல தயாராகி விடுகிறார்" அப்படினு அந்த first-ஸ்லோகத்தோட ஆரம்பிக்கறது.

இந்த நாப்பதாவது ஸ்லோகம் "யதா ராகவ நிர்முக்த: ஷர: - எப்படி ராமர் கையினால் விடப்பட்ட பாணம் நிக்காமல் போகுமோ, பராக்ரமத்தோட, வாயு வேகத்தோடபோகுமோ, எப்படி இலக்கை அடையுமோ, அந்த மாதரி நான் இப்போ ஆகாசத்துல போய் லங்கைல குதிப்பேன். அங்க சீதை எங்கயிருக்கான்னு கண்டுபிடிச்சிண்டு வருவேன். அங்க இல்லேன்னா மூவுலகத்திலயும் தேடி கண்டுபிடிச்சிண்டு வருவேன். ராவணனை கட்டி இழுத்துண்டு வருவேன். அப்படினு ஒரு ப்ரதிஞை பன்னிட்டு ஆகாசத்துல தாவறார்.

அப்படி அவர் சொன்ன அந்த ஸ்லோகம் यथा राघवनिर्मुक्तः शरः श्वसनविक्रमः।

गच्छेत्तद्वद्गमिष्यामि लङ्कां रावणपालिताम्।। அப்படினு சொல்றார்.

இதுல விசேஷம் என்னன்னா, ஹனுமார் தன்னால எதுவும் நடக்கறதுனே நினைக்கலை. அதனால தான் அவர் அவளோ அபாரமான காரியங்களையெல்லாம் பண்ணிட்டு வந்தார். ஒரு அம்பு தானா போக முடியுமோ?ஒருத்தர் ஏவி விட்டதானே போகமுடியும்? அந்தமாதிரி ராமரோட அம்பு மாதிரி நான் போவேன் அப்படினா என்ன அர்த்தம் "நிமித்தமாத்ரம் பவ சவ்யசாசின்" னு அப்படினு கிருஷ்ணர் அர்ஜுனன் கிட்ட சொன்ன மாதிரி "நீ வெறும் என் கையில் ஒரு கருவி தான். நான் தான் எல்லாத்தையும் நடத்துறேன். நீ இவ்வளவு தூரம் கவலையே படவேண்டியதில்லை. உன் காரியத்தை, கடமையை நீ பண்ணு" அப்படின்னு சொல்லறார். அந்த மாதிரி ஹனுமார் ராமர் கிட்ட அன்னிக்கு கிஷ்கிந்தா காண்டதோட ஆரம்பத்துல நமஸ்காரம் பண்ணி

ராமரை பாத்தபோதே தன்னை ஒப்படைச்சுண்டார். ராமதூதனாயிருந்து அபாரமான கார்யங்கள்லாம் பண்றார். "ந ராவண சஹஸ்ரம் மே யுத்தே பிரதிபலம் பவேத்" அப்படிங்கறார். ஆயிரம் ராவணர்கள் வந்தாலும் யுத்தத்தில் என் முன்னாடி நிக்க முடியாது. நான் ராமதாசன்" அப்படினு கர்ஜிக்கறார். அப்பேற்பட்ட பலம் அவருக்கு எங்கேர்ந்து வந்ததுன்னா? "எனக்கொண்ணும் பலம் இல்லை. ராமரோட பலத்தினால இதல்லாம் நான் பண்ணுவேன்" அப்படிங்கற அந்த எண்ணத்துனால வந்தது. "ராமர் கையில ஒரு பாணம் மாதிரி நான்" அப்படின்னு நினைக்கிறார்.

அப்படி சொல்லிட்டு ஆகாசத்துல கிளம்புகிறார். சொன்ன வார்த்தை "நிக்கமால் போவேங்கிறது" சும்மா ஒரு ஸ்டாண்டுக்காக சொல்லலை. வழில ஒரு தங்க மலை கடலுக்கு உள்ளேர்ந்து வர்றது மைனாகமலைனு. அந்த ஸமுத்ரராஜா மைனாக மலை கிட்ட சொல்றார். "இந்த ஹனுமார் ராம கார்யமா போறார். இவருக்கு நாம உதவி பண்ணனும். நீ வெளியில வா. உன்மேல உட்காந்துண்டு, ஆஹாரம் பண்ணிட்டு பழங்கள்லாம் கொடு. சாப்டுட்டு அவர் போட்டும்" அப்படின்னு அந்த சமுத்திரராஜா சொல்லறார்.

உடனே மைனாகமலை மேல வந்து அது ஹநுமார்க்கிட்ட சொல்லறது "ஹே ஹநுமான்! எனக்கும் நீ ரொம்ப வேண்டியவன். ஏன்னா உங்கப்பா வாயு பகவான், இந்திரன் மலைகளோட இறக்கைகளை வெட்டும்போது, என்னைக் கொண்டுவந்து இந்த கடல்ல தள்ளி என் இறக்கைகளை காப்பாத்தினார். அதனால அப்பாவுக்கு பண்ற நன்றியை பிள்ளைக்கு பண்ணலாம். அதனால என்மேல உட்கார்ந்து விஷ்ராந்தி பண்ணிட்டு போ. உனக்கு சாப்பிடறதுக்கு பழங்களும் கிழங்குகளும் தரேன்" அப்படினு சொல்றது. ஸ்வாமிகள் சொல்லுவார் Water water everywhere not a drop to drink அப்படினு கடலைப்பத்தி சொல்லுவா அப்பேற்பட்ட கடலுக்கு நடுவுல போயிண்டிருக்கும் போது, ராம கார்யம் பண்றதுனால ஹனுமாருக்கு சாப்பாடு கிடைக்கிறது. அப்படினா ஸுந்தரகாண்டத்தை படிக்கிறவாளுக்கு சாப்பாடு கவலையே கிடையாது. எப்படியாவது சாப்பாடு கிடைக்கும். எங்கிருந்தாவது சாப்பாடு கிடைக்கும் அப்படினு சொல்லுவார்.

அப்படி அந்த offer பண்ணும்போது அங்க ஹனுமார் சொல்றார் "நான் வழியில் நிற்காமல் லங்கைல போய் குதிச்சு சீதைய தேடுவேன்" னு என் நண்பர்களுக்கு வாக்கு குடுத்துட்டு கிளம்பிருக்கேன். அதனால என்னால இப்போ நிக்கமுடியாது. என்னோட அப்பாவோட நண்பர்னு சொல்ரேள். அதனால உங்கள பாத்ததே என்னக்கு ரொம்ப சந்தோஷம்" னு அவரை கட்டிண்டு

அவருக்கு வணக்கத்தை சொல்லிட்டு ஹனுமார் போயிண்டேயிருக்கார். அப்பறம் சுரசை எங்கிற நாகமாதாவை பாக்கறார். அப்பறம் ஸிம்ஹிகை எங்கிற நிழலைபிடிச்சு இழுக்கிறவளை வதம் பண்ணிட்டு, அப்பறம் போய் லங்கைல குதிக்கிறார்.

இந்த மைனாக மலை ராம காரியத்துக்கு யத்கிஞ்சித் பண்ண நினைச்சதுக்கே, அதுக்கு ஒரு பெரிய நன்மை ஏற்பட்டது. இந்திரன் அங்கே வரான். "ராம கார்யமா ஹனுமார் போயிண்டிருக்கார். அவருக்கு ஸஹாயம் பண்றேன்னு வந்தியோ இல்லியோ, அதுனால என்கிட்டேர்ந்து இனிமே நீ பயப்பட வேண்டாம். நான் உன் இறக்கைய வெட்டமாட்டேன். ஆனா பூமில வந்து எங்கயாவது உட்காராதே ஜனங்களாம் கஷ்டப்படுவா. அதனால இந்தக் கடலுக்குள்ள எங்க வேணும்னாலும் போயிக்கோ. கடலுக்கடியில எப்பப்பாத்தாலும் பயந்து ஒளிஞ்சிண்டு இருக்கணும்னு இல்லை. நிம்மதியா கடல்மேல் சஞ்சாரம் பண்ணிண்டிரு" அப்படினு ஒரு வரம் கொடுக்கிறார். இதோட விஷேஷம் என்னன்னா ஸ்வாமிகள் சொல்வார் "நாம் சிற்றின்ப கடல்ல மூழ்கியிருந்தாலும் ராம கார்யமா யத்கிஞ்சித் உபகாரம் பண்ணினாகூட பெரிய அபயம் கிடைக்கும்" அப்படினு சொல்லுவார். எப்படி ராம பாணம், வாயு வேகமா, எங்கும் நிற்காமல் போயி இலக்கை அடையுமோ, அப்படி நான் இங்கிருந்து கிளம்பி, ஆகாச மார்க்கமாய் போயி இலங்கையில் குதிப்பேன். அங்க ஸீதா தேவியை தேடிப் பார்த்து எங்க இருக்கான்னு தெரிஞ்சுண்டு வருவேன். அப்டீன்னு ஹனுமார். தன்னுடைய தோழர்களுக்கு வாக்கு கொடுத்துட்டு ஆகாசத்துல கிளம்பறார்.

ஸ்வாமிகள், ஏக ஸ்லோக ஸுந்தர காண்டம், ஒரு ஸ்லோகத்துல ஸுந்தர காண்டம் அப்படீன்னு ஒண்ணு சொல்வார். ராகவேந்திர ஸ்வாமிகள், திருவல்லிக்கேணியில கூட அவரோட பிருந்தாவனம் இருக்கே. அந்த, அந்த ராகவேந்திர ஸ்வாமிகள் பண்ணின ஒரு ஸ்லோகம் இருக்கு. ஏக ஸ்லோக ஸுந்தர காண்டம் அப்படீன்னு அதோட தாத்பரியமும், இதே மாதிரி, ராமரோட அனுக்ரஹத்துனாலதான், ஹனுமார், இவ்வளவு பெரிய கார்யங்களை எல்லாம் பண்ணி முடிச்சார், அப்டீங்கிறதுதான் அந்த ஸ்லோகத்தோட தாத்பர்யம்.

यस्य श्री हनुमान् अनुग्रह बलात् तीर्णांबुधिर्लीलया

लङ्कां प्राप्य निशाम्य रामदयितां भङ्क्त्वा वनं राक्षसान् |

अक्षादीन् विनिहत्य वीक्ष्य दशकम् दग्ध्वा पुरीं तां पुन:

तीर्णाब्धि: कपिभिर्युतो यमनमत् तं रामचन्द्रं भजे ||

யஸ்ய ஶ்ரீ ஹனுமான் அனுக்ரஹ பலாத் தீர்ணாம்புதிர் லீலயா

லங்காம் ப்ராப்ய நிசாம்ய ராம தயிதாம் பங்க்த்வா வனம் ராக்ஷஸான் |

அக்ஷாதீன் விநிஹத்ய வீக்ஷ்ய தசகம் தக்த்வா புரீம் தாம் புந:

தீர்ணாப்தி: கபிபிர்யுதோ யம் அனமத் தம் ராமச்சந்த்ரம் பஜே ||

அப்படீன்னு ஒரு ஸ்லோகம். எவருடைய அனுக்ரஹ பலத்தினால், ஶ்ரீ ஹனுமார், கடலை விளையாட்டாக கடந்து, இலங்கையை அடைந்து, ராமருடைய பிரிய மனைவியான ஸீதா தேவியை பார்த்து, அறுதல் சொல்லி, ராவணனுடைய அசோக வனத்தை அழித்து, அக்ஷன் முதலான ராக்ஷதர்களை வதம் செய்து, தசக்ரீவனான ராவணனைப் பார்த்து, அவனுக்கு நல்ல புத்தி சொல்லி, அவன் கேட்காமல், ஹனுமாருடைய வாலில் தீ வெச்ச போது, அந்த தீயினாலையே, இலங்கையை எரித்து விட்டு, மீண்டும் கடலை கடந்து, வானரர்களோடு வந்து, எந்த ராமரை வணங்கினாரோ, எவருடைய அனுக்ரஹ பலத்தினால், இங்கே இருந்து கிளம்பி, இவ்வளவு கார்யங்களையும் பராக்ரமத்தோட பண்ணி முடித்து, மீண்டும் வந்து வானரர்களோடு கூட ராமரை வணங்கி, ஸீதா தேவியோட சூடாமணியை கொடுத்து, அவர் மனசை சந்தோஷப் படுத்தினாரோ, அந்த ராமரை பஜிக்கிறேன். தம் ராமச்சந்திரே பஜேஹம்னு முடியறது, ரொம்ப அழகான ஒரு ஸ்லோகம்.

நேத்திக்கு தான் கேள்வி பட்டேன், இந்த ஸ்லோகத்தை ஸ்வாமிகள் ஒருத்தர்கிட்ட, இதை தினம் இருவத்தொரு ஆவர்த்தி சொல்லி, நாற்பதெட்டு நாட்களில் ஒரு ஆயிரத்தெட்டு ஆவர்த்தி பண்ணு, அப்படீன்னு சொல்லி இருக்கார். அந்த அளவுக்கு இந்த ஸ்லோகத்துக்கு ஸ்வாமிகள் முக்யத்வம் தந்துருக்கார்னு கேட்டதுனால, இதை உங்க கிட்ட இன்னிக்கு பகிர்ந்துண்டேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

<u>ஜகன்மாதா ஸீதாதேவியின் அளவற்ற கருணை</u>

ஸ்வாமிகள், வால்மீகி ராமாயண பிரவசனம் பண்ணும்போது, ஸீதாதேவி, அப்படீன்னு குறிப்பிட மாட்டார். எப்பவும், ஜகன்மாதா, அம்பாள், தாயார் அப்படீனுதான் குறிப்பிடுவார். அப்படி ராமர்கிட்ட இருந்த அளவு, ஸீதாதேவி கிட்டயும் அவருக்கு பக்தி. ராமர் எப்படி சத்தியத்தையும், தர்மத்தையும் கடைபிடிச்சு, தெய்வத் தன்மை அடைஞ்சு

“வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.”

அப்படீன்னு, தெய்வமாகி, விபீஷணன் போன்ற தன்னுடைய பக்தர்களுக்கு, அபயம் கொடுத்தாரோ, அதேமாதிரி, ஸீதாதேவியும், கருணையோட எல்லையில இருந்து, எல்லார் கிட்டயும் பரிவு காண்பிச்சு இருக்கா. அதனால தான் நாம இரண்டு பேரையும் சேர்த்து நமஸ்கரிக்க வேண்டும். சீதையினுடைய

பெருமை, காவியம் முழுக்க வர்றது, அதுக்கு சிகரம் வெச்சா போல, கடைசீல, ஒரு காட்சியில, சீதையினுடைய அளவற்ற கருணை வெளிப் படறது.

ராமர், ராவணனை வதம் பண்ணிடறார். லக்ஷ்மணனைக் கொண்டு, விபீஷணனை இலங்கைக்கு, ராஜாவாக பட்டாபிஷேகம் பண்ணி வைக்கறார். அப்புறம், விபீஷணன், ராஜா ஆனா பின்ன ராமரை வந்து நமஸ்காரம் பண்றான். அங்க ஹனுமார் இருக்கார். ராமர் ஹனுமார் கிட்ட "விபீஷண மஹாராஜா கிட்ட, உத்தரவு வாங்கிண்டு, லங்கா நகரத்துக்குள்ள போயி, அசோகவனத்தில், சீதை கிட்ட, என்னோட க்ஷேமத்தை, சொல்லி, இந்த பிரியமான செய்தியை, சொல்லிட்டு வா" அப்படீன்னு சொல்றார். ஹனுமாரும், அந்த மாதிரி விபீஷணன், கிட்ட சொல்லிண்டு லங்கைக்குள்ள போறார்.

போன வாட்டி, வந்த போது, மதில்சுவர் மேல ஏறி குதிச்சு, இடதுகாலை முன்னாடி வெச்சு, உள்ளே போனார். எதிரியுடைய கிருஹம் என்பதால். இப்போ, right royal ஆ போகும்போது, ராக்ஷஸர்கள், எல்லாம் கும்பிட்டு, உள்ள அனுப்பறா. நேரா, அசோகவனத்துக்குப் போறார். அங்க போய் ஸீதாதேவியை நமஸ்கரித்து, 'அம்மா, ஹனுமான் வந்திருக்கேன், ராமர் க்ஷேமமா இருக்கார். ராமர், ராவணாதி ராக்ஷஸர்களை எல்லாம், வதம் பண்ணிட்டார். இனிமே, நீங்க வருத்தத்தை விட்டு விடலாம். நீங்க ராவணனுடைய க்ருஹத்துல இல்லை. ராம பக்தனான, விபீஷணனுடைய, க்ருஹத்துலதான் இருக்கேள்' அப்படீன்னு, சொல்றார்.

இதை கேட்ட உடனே, சீதைக்கு சந்தோஷம். பேச்சே வரலை. 'என்னம்மா, ஒண்ணும் சொல்லலையே'ன்னு, கேட்கும்போது, 'எனக்கு, சந்தோஷத்துல பேச்சே வரலைப்பா. எப்பவுமே, நீ எனக்கு, இந்த மாதிரி பிரியமான, செய்தியை சொல்ற. உனக்கு, நான் என்ன கைம்மாறு பண்ணுவேன்? தங்கம் கொடுப்பேனா. ரத்னங்கள் கொடுப்பேனா, மூவுலகத்துடைய ஆட்சியை உனக்குக் கொடுத்தாலும், போறாது. நீ எனக்கு, அவ்வளோ சந்தோஷத்தைக் கொடுக்கற, வார்த்தைகளால் திருப்தி பண்ற', அப்படீன்னு சொன்ன போது, ஹனுமார், சொல்றார், 'எனக்கு, அதெல்லாம் வேண்டாம், எனக்கு, உங்க

ரெண்டு பேரையும், ராமரையும், சீதையையும் சேர்த்துப் பார்த்தாலே போறும்’, அப்படீன்னு சொல்றார். ஸீதா தேவி சாக்ஷாத் லக்ஷ்மிதேவி. லக்ஷ்மி தேவியே, நான் உனக்குக் கடன் பட்டிருக்கேன், அப்படீன்னா, ஹனுமார் எவ்வளவு பெரிய பணக்காரர்! அப்படி அந்த பக்திங்கிறது, எல்லாத்துக்கும் மேல. ஹனுமாரை, வாயார வாழ்த்தறா

अतिलक्षणसंपन्नं माधुर्यगुणभूषितम् ||

बुद्ध्या ह्यष्टाङ्गया युक्तं त्वमेवार्हसि भाषितुम् |

श्लाघनीयोऽनिलस्य त्वं सुतः परमधार्मिकः ||

ब्लं शौर्यं श्रुतं सत्त्वं विक्रमो दाक्ष्यमुत्तमम् |

तेजः क्षमा धृतिः स्थैर्यं विनीतत्वं न संशयः ||

அதிலக்ஷண ஸம்பன்னம் மாதுர்ய குண பூஷிதம் ||

புத்யா ஹ்யஷ்டாங்கயா யுக்தம் த்வமேவர்ஹஸி பாஷிதும் |

ஷ்லாகநீய: அனிலஸ்ய த்வம் புத்ர: பரமதார்மிக: |

பலம் ஷௌர்யம் ஷ்ருதம் ஸத்வம் விக்ரமோ தாக்ஷ்யம் உத்தமம் ||

தேஜ: க்ஷமா த்ருதி: ஸ்தைர்யம் வினீதத்வம் ந ஸம்ஷய: ||

இப்படி, எல்லா குணங்களும் உன்கிட்ட இருக்கு, ஹே ஹனுமான், அப்படீன்னு சொல்றா. மஹாபெரியவா,

बुद्धिर्बलं यशो धैर्यं निर्भयत्वमरोगिता । अजाड्यं वाक्पटुता च हनुमत्स्मरणाद्भवेत् ॥

புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயத்வம் அரோகதா |

அஜாட்யம் வாக்படுத்வம்ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத் ||

அப்படீங்கிற ஸ்லோகத்தை எடுத்துண்டு, உலகத்துல மனுஷா கிட்ட ஒரு குணம் இருந்தா, ஒரு குணம் இருக்காது. ஹனுமார் கிட்ட தான், இந்த எல்லா குணங்களும் சேர்ந்து இருக்கு. அதனால நாம ஹனுமாரை பிரார்த்தனை பண்ணினா, நமக்கும், எல்லா குணங்களும், ஆரோக்யமும், புத்தியும், பலமும்,

யஸசும் எல்லாமே கொடுப்பார், அப்படீன்னு சொல்ற மாதிரி, ஸீதாதேவி எல்லா குணங்களையும் பட்டியலிட்டு, இதெல்லாம், உன் கிட்ட தான் இருக்கு, அப்படீன்னு சொல்றா.

அப்புறம் ஹனுமாருக்கு, இந்த ராக்ஷசிகளை பார்த்த உடனே கடுங்கோபம் வர்றது. 'இதுகளெல்லாம் அஸத்துகள். உங்களை எவ்வளவு பாடு படுத்தினா, கடி, தின்னு, கொல்லு, அப்படீன்னு உங்களை, எவ்வளோ பயமுறுத்தினா. நான் இவாளை இப்போ சிக்ஷிக்கறேன், தண்டனை கொடுக்கறேன், காது, மூக்கு எல்லாம் பிச்சு, முட்டியால, எலும்பெல்லாம் உடைச்சு, பல்லை எல்லாம் தட்டி', அப்படீன்னு சொல்றார். இதை கேட்டே, அந்த ராக்ஷசிகள் எல்லாம், பயந்து நடுங்கி இருப்பா. அப்போ ஸீதாதேவி சொல்றா, "வேண்டாம்ப்பா. அவா அப்போ, ராவணனுடைய அடிமைகளா இருந்தா. அவன் சொன்னான் எங்கிறதுக்காக என்னை பயமுறுத்தினா. ஏதோ நான் பண்ண பாவம், எனக்கு அனுபவிக்கணும்னு இருக்கு, நான் அதை அனுபவிச்சேன், இனிமே அவா அப்படி பண்ண மாட்டா. நீ அவாளை மன்னிச்சுடு. அப்டீன்னு சொல்லிட்டு, அந்த புலிக்கிட்ட, கரடி சொன்னது, இல்லையா, அந்த வார்த்தைகளை, நினைச்சுக்கோ, அப்படீன்னு சொல்லி

पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम ||

कार्यं कारुण्यमार्येण न कश्चिन्नापराध्यति |

பாபானாம் வா ஷுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளங்கம |

கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி ||

அப்படீன்னு ஒரு ஸ்லோகம் சொல்றா, ஸீதா தேவி.

இது என்ன புலிக் கதை, கரடிக் கதை? இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம்? அப்படீன்னா,

ஒரு தடவை, காட்டுல ஒரு வேடனை, ஒரு புலி துரத்தறது. அந்த வேடன், பயந்துண்டு, ஒரு மரத்து மேல ஏறுகிறான். புலிக்கு மரம் ஏற வராதுன்னு, ஒரு ஐதீகம். மேல போனா அங்க ஒரு கரடி இருக்கு. கரடி நன்னா மரத்துல ஏறும்.

மரத்துலயே வசிக்கும். அந்த கரடியை பார்த்த உடனே, 'ஐயோ, அந்த கரடி, நம்மளைக் திங்கப் போறதுன்னு' இவன் பயந்துடறான். அப்போ அந்த கரடி சொல்றது, ‘நீ என்னோட வீட்டுக்கு வந்துருக்க. நீ என்னோட விருந்தாளி. நான் உன்னை காப்பாத்தறேன். உனக்கு ஒண்ணும் ஆபத்து இல்ல, இங்க. நீ பயப்படாதே’. அப்படீன்னு சொல்றது. அப்பாடின்னு, வேடன் கொஞ்ச நேரம், நிம்மதியா ஆசுவாசப் படுதிக்கறான்.

அப்புறம் அவனுக்குக் களைப்புல தூக்கம் வர்றது. கரடி சொல்றது, ‘நீ தூங்கு, இந்த புலி கிட்ட இருந்து, உன்னை protect பண்றேன்’, அப்படீன்னு சொல்றது. அவன் தூங்கறான். அவன் தூங்கும்போது, இந்த புலி, சொல்றது, ‘இந்த வேடன் நமக்கு பரம வைரி. நீ என்ன அவனைக், காப்பாத்தினாலும், அவன் அடுத்தது நம்ம மேலே அம்பை போடுவான். அதனால அவனைக் கீழ தள்ளி விடு. நான் சாப்புடறேன் அவனை, என் பசிக்கு ஆச்சு’, அப்படீன்னு சொல்றது. அப்போ, இந்த கரடி, ‘இல்ல நான் அந்த மாதிரி பண்ண மாட்டேன், நான் வாக்குக் கொடுத்திருக்கேன், இன்னிக்கு, அவன் என் வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கான், அவனை நான் காப்பாத்துவேன்’, அப்படீன்னு சொல்றது.

அப்புறம் அந்த வேடன் கொஞ்ச நேரத்துல எழுந்துக்கறான். இந்த கரடி சொல்றது, ‘எனக்கு கொஞ்சம் தூக்கம் வர்றது, நான் தூங்கறேன், நீ பாத்துக்கோ’, அப்படீன்னு சொல்லிட்டு கரடி தூங்கறது. அப்போ, புலி வேடன் கிட்ட சொல்றது, ‘இந்த கரடியை கீழ தள்ளி விடு. எனக்குப் பசி. நான் அதை தின்னுட்டுப் போயிடறேன், எனக்குப் பசி அடங்கிடுத்துன்னா, நான் உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன், நீ நிம்மதியா வீட்டுக்கு போகலாம்’, அப்படீன்னு சொன்ன உடனே, இந்த வேடன் சின்ன புத்திக்காரன். அவன் அந்த கரடியை கீழ தள்ளப் பாக்கறான். அந்த கரடி, முழிச்சுண்டு, ஒரு கிளையைப் பிடிச்சுண்டுடறது. இப்ப இவனுக்கு நடுக்கம். ‘ஐயையோ என்னை கொல்லாதே, மன்னிச்சுடு, மன்னிசுடு’ங்கறான். அப்போ கரடி சொல்றது, நீ, உன்னுடைய புத்தியை காமிக்கற. ஆனா, நான் அதுக்காக உன்னை, கைவிட மாட்டேன், எப்ப நான் உன்னைக் காப்பாத்தறேன்னு வாக்குக் கொடுத்தேனோ, நான் உன்னை காப்பாத்துவேன். நீ கவலைப் படாதே’, அப்படீன்னு சொல்றது.

அப்ப புலி கேட்கறது, 'உன்னை இவன் கீழத் தள்ளப் பார்த்தான், இவனை போயி நீ காப்பாத்தறயே?' அப்பதான் இந்த ஸ்லோகத்தை கரடி புலிக்கிட்ட சொல்றது

பாபானாம் வா ஷுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளங்கம |

கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி ||

பாபம் பண்ணவாளோ, நல்லவாளோ, வதம் பண்ணக் கூடிய அளவுக்குத் தப்பு பண்ணவாளோ, யாரா இருந்தாலும் மன்னிக்க வேண்டும். ஒரு தப்புக் கூடப் பண்ணாதவன்னு யாருமே கிடையாது, அபராதமே செய்யாதவன்னு, ஒருத்தனுமே கிடையாது. அதனால பெரியவா கருணையோட இருக்கணும், தப்பை மன்னிக்கணும், அப்டீன்னு சொல்றது.

ஸீதாதேவி, இந்த வார்த்தைகளைச் சொல்லி, அதனால இந்த ராக்ஷஸிகளை மன்னிச்சுடு, அப்படீன்னு சொல்றா

लोकहिंसाविहाराणां रक्षसां कामरूपिणम् ||

कुर्वतामपि पापानि नैव कार्यमशोभनम् |

லோக ஹிம்ஸா விஹாராணாம் ரக்ஷஸாம் காமரூபிணாம் |

குர்வதாமபி பாபானி நைவ கார்யம் அஷோபனம் ||

லோக ஹிம்சை பண்ணிண்டு, மேலும் மேலும் பாவம் பண்ணினாக் கூட, அவாளைக் கூட நாம மன்னிக்க வேண்டி இருக்கு, அதனால இவாளை விட்டுடு, அப்படீன்னு சொல்றா. அப்பேற்பட்ட அந்த அம்பாளுடைய, ஜகன்மாதா ஸீதாதேவியின் அளவற்ற கருணை நம்மையும் காப்பாத்தட்டும்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

லக்ஷ்மணனுடைய உண்மையான ப்ராத்ருபக்தி

ஆரண்யகாண்டத்துல அறுபத்து ஏழாவது சர்க்கத்தோட முதல் ஸ்லோகம்

पूर्वजोऽप्युक्तमात्रस्तु लक्ष्मणेन सुभाषितम् । सारग्राही महासारं प्रतिजग्राह राघवः।।

பூர்வோஜோபி உக்தமாத்ரஸ்து லக்ஷ்மணேன ஸுபாஷிதம் |

ஸாரக்ராஹி மாஹாஸாரம் பிரதிஜக்ராஹ ராகவ: ||

“பூர்வோஜுபி ” – அண்ணாவாக இருந்தாலும் “உக்தமாத்ரஸ்து” லக்ஷ்மணன் சொன்னவுடனே ராமர், அவன் சொன்ன வார்த்தைகளை ஏற்றுக் கொண்டார், ஏன்னா, அவர் ” ஸாரக்ராஹி” – சொல்றாவா யாருன்னு பார்க்காமல் சொல்லப்படும் விஷயம் ஸாரமுடையதாக இருந்தால் அதை க்ராஹிசுக்ககூடியர் ராமர். அதுனால ஸாரக்ராஹி. மேலும் லக்ஷ்மணன்

சொன்ன விஷயம் “மஹாஸாரம்”, ரொம்ப ஸாரமான விஷயத்தை அவன் சொன்னான். அதனால் உடனடியாக அவன் சொன்ன வார்த்தைகளை ராமர் ஏற்றுக் கொண்டார். “ஸுபாஷிதம்” லக்ஷ்மணர் ரொம்பஅழகா பேசினார். ” ஸாரக்ராஹி மாஹாஸாரம் பிரதிஜக்ராஹ ராகவ:” “பிரதிஜக்ராஹ” அப்படின்னா ஏற்றுக் கொண்டார்னு அர்த்தம். அப்படி என்ன லக்ஷ்மணன் சொன்னான்? என்ன ராமர் ஏற்றுக்கொண்டார்?

ராமர் மாயமானாக வந்த மாரீசன் பின்னாடி போறார். ஸீதாதேவி “எனக்கு அந்த மான் வேணும்”னு கேட்கிறாள். லக்ஷ்மணர் சொல்றார் “இது மாரீசனுடைய மாயை. இந்த மாதிரி மான் உலகத்துல கிடையாது, கந்தர்வக் கோட்டை மாதிரி இது மாயை, அதன் பின்னாடி போக வேண்டாம்” என்று லக்ஷ்மணன் சொல்கின்றார். சீதையோ “எனக்கு கட்டாயம் அந்த மான் வேண்டும் எனக்கு உயிருடனோ, உயிரில்லாமலோ வேண்டும் எனக்கு, நான் அதன் தோலை தடவிப் பார்த்து சந்தோஷப் படுவேன், அயோத்யைக்கு எடுத்து செல்லலாம், பரதனிடம் காண்பிக்கலாம், அம்மாவிடம் காண்பிக்கலாம்” என்று சொல்கிறாள். உடனே, ராமர் “இவள் ஒண்ணுமே என்கிட்ட கேட்பதில்லை, இப்பொழுது இத்தனை வருஷத்துக்கு அப்பறம் ஏதோ ஒண்ணு கேட்டாளே, ஆகையால், காட்டில் கிடைக்கும் அருமையான பொருளாகயிருந்தால் அதன் பின்னாடி போக வேண்டும். அதனாலென்னாகுமோ என்று யோசிக்காமல் ஒரு அரிய பொருள் கிடைத்தால் அதன் பின்னாடி போகவேண்டும் என்று சுக்ர நீதியில் கூறியுள்ளது” என்கிறார்.

ஒரு argument sake இந்த மாதிரி என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். லக்ஷ்மணன் நல்லெண்ணத்தில் சொல்கிறார். ராமர் சீதைக்காக போக வேண்டுமென்று முடிவு செய்து விட்டார். ராமர் “நான் அதை பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன். நீ இவளை பார்த்துக் கொள், உன்னையும் இந்த ஜடாயு பக்ஷியையும் நம்பி நான் சீதையை விட்டுட்டு போகிறேன், நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள், நான் போய் மானை பிடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்” என்று சொல்லிட்டு கிளம்பறார். ஸீதாதேவிக்கு அபிராமனான ராமன் தன் பக்கத்தில் இருக்கும்போது, இந்த மான் மீது ஆசை வரது. அந்த மாதிரி,

உலகத்தில் நாம் பகவானை பக்கத்தில் வைத்துக் கொண்டு, உலக விஷயங்களுக்கு ஆசைப்பட்டு, பகவானை பிரிந்து கஷ்டத்தை அடைகிறோம்.

ராமர் மாரிசன் பின் செல்கின்றார். அவன் அவரைத் தள்ளித் தள்ளி அழைத்துச் செல்கின்றன். ராமருக்கு மான் பக்கத்திலுள்ளது போல் தெரிகிறது, அம்பை எடுப்பதற்குள் ரொம்ப தூரத்தில் இருப்பது போல் தெரிகிறது. உடனே பின்னாடி ஓடறார். இப்படி அடுத்த promotion வரப் போகிறது, அடுத்த hike வரப்போகிறது, என்று நம்பி உலகத்தாருக்கு நாம் உழைப்பதைப் போல், அந்த கானல் நீர் போன்ற அந்த மானின் பின் ராமர் ஓடுகிறார். மிகத்தொலைவு தள்ளிக் கொண்டு போய்விட, அவருக்கு ஸந்தேஹம் வருகின்றது. இது மாயை தான் என்று தீர்மானம் பண்ணி அதன் மேல் அம்பை விடுகிறார். ஒரு பனைமரம் உயரத்திற்கு மேலே துள்ளி ஹா என்று கத்தியபடி கீழே விழுகிறான் மாரீசன். வீழ்ந்த உடனே ராக்ஷச உருவம் அடைகிறான். அப்பொழுது, மறந்து போகக் கூடாதோ! ராவணன் கூறிய வார்த்தைகள் அவனுக்கு ஞாபகம் வருகிறது "ஹா சீதே, ஹே லக்ஷ்மணா" என்று ராமர் குரலில் கத்தியபடி உயிரை விடுகிறான்.

அந்த சத்தம் இவர்களுக்கு கேட்கிறது. அதைக் கேட்டவுடனே சீதை "நீ இப்பவே ராமரை காப்பாத்த போகணும்" என்கிறாள். லக்ஷ்மணர் எவ்வளவோ சொல்கிறார், "ராமரை ஜயிக்ககூடிய ஒருத்தன், இதுவரை பிறக்கவில்லை. இனிமேலும் பிறக்கமாட்டான். என் அண்ணவாகிய ராமர் "என்னை காப்பாற்று" என்ற வார்த்தையை சொல்லவே மாட்டார். தேவர்களையே அவர் காப்பாற்றக் கூடியவர், அதனால் ராமருக்கு ஒன்றும் ஆபத்து கிடையாது. இங்கே நான் உங்களை தனியாக விட்டு சென்றால், உங்களுக்குத் தான் ஆபத்து, ஆகையால் என்னை பலவந்தம் பண்ணாதீர்கள்" என்று சொல்கிறார்.

சீதை தனது வயத்தில் அடித்துக் கொண்டு, மிகவும் கடுமையான வார்த்தைகளை சொல்லி, "நீ ஒரு துராத்மா, வேஷதாரி, நீ கெட்ட எண்ணத்துடன் என் பின் வந்துள்ளாய்" என்று வேண்டாத வார்த்தைகளை சொல்கிறாள். என்னமோ அவளுடைய போறாத வேளை, துக்கத்தினாலும், பயத்தினாலும் அப்படி வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வந்து விடுகிறது. அதைக் கேட்டவுடனே லக்ஷ்மணர் "என் காதில் இரும்பை காய்ச்சி ஊற்றுவது போலான கடுமையான வார்த்தைகளை சொல்கிறீர்கள்." என்கிறார். சீதையோ "நீ

போகலைன்னா நான் கோதாவரியில் வீழ்ந்து விடுவேன்” என்கிறாள், லக்ஷ்மணர் “சரி, நான் போறேன்! நான் என்ன செய்வேன்” என்று சொல்லி லக்ஷ்மணர் போயிடறார். அந்தப் பக்கம் லக்ஷமணர் போனவுடனே , ஒரு தர்மாத்மாவை வேஷதாரி என்று சொன்னதால், ஒரு வேஷதாரி சந்நியாசி போல் வேஷம் போட்டுண்டு வந்து விடுகிறான். மூன்றே நிமிஷத்தில் பண்ணின பாவத்திற்கு பலன். ராவணன் வந்துடறான். சீதையை அபஹரித்து கொண்டு போயிடறான். ஜடாயு ராவணனோடு யுத்தம் செய்து தன் உயிரையே அர்பணிக்கிறார். அவர் அடிபட்டு விழுந்து கிடக்கிறார். இராவணன் சீதையை தூக்கிண்டு போயிடறான்.

லக்ஷ்மணர் போய் ராமரை பார்த்தவுடன் ராமர், ” சீதையை விட்டுட்டு ஏன் இங்கே வந்தாய்? உன்னை நம்பியல்லவா நான் சீதையை விட்டுட்டு இங்கு வந்தேன்?அது மாரிசன் தான், மாயமான் தான்” என்று சொல்கிறார். அதுக்குள்ளவே ராமருக்கு கெட்ட சகுனங்கள் வர ஆரம்பித்து விடுகிறது! மிருகங்கள் பறவைகள் எல்லாம் அலறுகின்றன, ஏதோ கெடுதல் நடந்துள்ளது என்று அவருக்கு தெரிகிறது. வேகமாக திரும்ப நினைக்கிறார். ஆனால் அவரது கால் பாவ மாட்டேங்கிறது. லக்ஷ்மணனையும் பார்த்தவுடனே, “ஏன் வந்தாய்?” என்று கேட்கிறார். அப்பொழுது லக்ஷ்மணர் “சீதை என்னை தாங்க முடியாத சில வார்த்தைகள் கூறினாள். அதனால் தான் வந்துட்டேன்” என்கிறார். ராமர் கடும் கோபத்துடன் “நீ சீதையை பார்த்துக் கொள் என்று நான் உத்தரவிட்டுளேன், அதை மீறி நீ எப்படி சீதையை விட்டுவிட்டு வரலாம்? ஒரு பெண் கோபமாக பேசினாள் என்பதற்காக என் உத்தரவை நீ மீறினது சற்றும் எனக்கு பிடிக்கவில்லை” என்று திட்டுகிறார்.

அங்கு சீதையும் அனாவசியமா திட்டினாள், இங்கு ராமரும் திட்டுகிறார், இன்னொருத்தராக இருந்தால் என்ன செய்வார்? “போரும் உங்க கைங்கர்யம். நான் அயோத்திக்கு போறேன்” என்று போயிடுவார். ஆனால் லக்ஷ்மணர் மிகவும் பொறுமையாக இருக்கார். “நான் அப்பவே அது மாரீசன் என்று சொன்னேன், அதையும் கேட்கவில்லை. இருவரும் சேர்ந்து கஷ்டத்தில் மாட்டிக் கொண்டீர்கள், இப்பொழுது என்னைத் திட்டுகிறீர்களா?” என்று கேட்கத்

தோன்றும். ஆனால் லக்ஷ்மணருக்கு உண்மையான சஹோதர பாசம், அண்ணா மீதுள்ள அன்பினால், ஒண்ணும் பேசாமல் அமைதியாக கேட்டுக்கறார்.

அப்பறம் திரும்பி வந்து ஆஸ்ரமத்தில் பார்க்கிறா, சீதையை காணவில்லை. ராமர் புலம்பி அழுகிறார். ராமர் சீதைக்காக புலம்பி அழுவதை படித்தால், உலகத்திலேயே மிக அழகான காதல் காவியம் வால்மீகி ராமாயணம் தான் என்று தெரியும். இதுக்கு மேல ஒருத்தர் எழுதவே முடியாது, அவ்வளவு அழகா ஒவ்வொண்ணும் சொல்லி புலம்புகிறார். நடுவிலே "நான் உயிரையே விடுகிறேன்" என்கிறார். அப்பறம் அவர் "இல்லை நான் இங்கு உயிரை விட்டு மேலுலகத்துக்கு போனால், நம்ம அப்பா, தசரத மஹாராஜா, "நான் உன்னை பதினான்கு வருடம் காட்டில் இருக்கச் சொன்னேன், நீ இங்கே, எங்கு வந்தாய்?னு கேட்பார்" அப்படின்னு, அந்த அளவிற்கு, கடுமையான துக்கத்துக்கு நடுவிலும் தர்மத்தில் உறுதி. அப்படி புலம்புகிறார் "நீ திரும்ப போய், அங்கு பரதனிடம் சொல்லிவிடு, இனிமேல் நான் வரமாட்டேன் என்று, எனக்கு வாழ்க்கையில் இனி ஒன்றுமே கிடையாது" என்று பலது புலம்புகிறார்.

கூடக் கூட லக்ஷ்மணர் சமாதானம் சொல்லிண்டே வருகிறார். "கோதாவரியில் சென்று பார்ப்போம், தாமரைப்பூ கொண்டுவர போயிறிருப்பாள்" என்று அவர் கூறியுடன் "போய் பார்த்துக் கொண்டு வா" என்கிறார், லக்ஷ்மணர் திரும்பிவந்து அங்கே இல்லையென்றவுடன் "இல்லை, இல்லை, நானே வந்து பார்க்கிறேன் " என்று தானும் ஒரு தரம் போய் தேடிப் பார்க்கிறார், இல்லை தான்! "இந்த குஹையில் பார்க்கலாம், அவள் ஒளிந்து விளையாடுகிறாள்" என்று இப்படி ரெண்டு பேரும் தேடி தேடி ஆயாசம் அதிகரிக்கிறது, பசி தாஹம் அதிகரிக்கிறது, ராமருக்கு கோபம் வருகிறது. அந்த கோதாவரியிடம் "சீதையை பார்த்தாயா?" னு கேட்கிறார், பக்கத்திலுள்ள பிரஸ்ரவண மலையிடம் கேட்கிறார். அவைகளும் ராவணக்குக்கு பயந்து பதில் சொல்லவில்லை, ராமர் அந்த மலையைப்பார்த்து "சீதை எங்கே?" என்ற உடனே அது எதிரொலிக்கிறது. ராமர் "உன்னை பொடி ஆக்குகிறேன் பார். என்னுடைய பொறுமையை அனைவரும் சோதிக்கிறார்கள், தெய்வங்களே இந்த பொறுமை என்ற என் நல்ல குணத்தை, ஒரு கெட்ட குணமாக ஆக்கி விட்டார்கள். அதனால் நான்

என்னுடைய அஸ்திரங்களை உபயோகித்து, இந்த உலகங்களை அழிக்கப் போகிறேன்” என்று கடும் கோபத்தோட அஸ்திரங்களை எடுக்கிறார். அவரால் உலகை அழிக்க முடியும். அவரிடம் அவ்வளவு சக்தி இருக்கு, அவரிடம் ப்ரம்மாஸ்திரம் இருக்கு.

அப்பொழுது லக்ஷ்மணர் ராமரின் இரண்டு கால்களை பற்றி “அண்ணா அப்படி பண்ணாதேங்கோ. கஷ்டங்கிறது யாருக்குத் தான் வருவதில்லை? பூமிக்கே பூகம்பம் ஏற்படுகிறது, சூரியசந்திரர்களுக்கே கிரஹணம் பிடிக்கிறது, வசிஷ்டருக்கே புத்ரசோகம் ஏற்பட்டது, அப்படி கஷ்டம் என்பது எல்லோருக்கும் வருகிறது. ஒரு புயல் காற்றில் மரங்கள் விழும், மலை விழுமா?! தங்களை போல் உள்ளர்வர்கள், பெரியவர்கள் கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு சரியான காரியங்களை செய்யவேண்டும். தாங்கள் “சர்வ பூத ஹிதேரத:” “ஸர்வலோக சரண்ய:” உலகத்துக்கே புகலிடமானவர். எல்லோருடைய நன்மையையும் விரும்புபவர். யாரோ ஒருவன் தப்பு செய்துள்ளான். அவனை கண்டுபிடிச்சு தண்டிப்போம். உலகத்தையே அழிப்பேன் என்று கிளம்பலாமா? தயவு பண்ணுங்கோ. கொஞ்சம் பொறுமையாக இருங்கோ, நாம் எப்படியாது சீதையை தேடிக் கண்டுபிடிப்போம்” என்று கூறுகிறார்.

இந்த மஹாஸாரமான வார்த்தைகளை கேட்டு ராமர், அவர் அண்ணவாக இருந்தாலும், லஷ்மணன் தம்பியாக இருந்தாலும் “பூர்வோஜுபி உக்தமாத்ரஸ்து”, அவர் அந்த வார்த்தைகளை கூறியவுடனே ” லக்ஷ்மணேன ஸுபாஷிதம் “லக்ஷ்மணர் சொன்ன இந்த வார்த்தைகளை, அழகாக அவர் சொல்கிறார். இதில் என்னவென்றால், அண்ணாவும், மன்னியும் சேர்ந்து திட்டுகிறார்கள். அதுக்கே அவர் வெறுத்து அயோத்திக்கு போயிடலாம், இப்பொழுது ராமர் கோபித்துக் கொண்டு உலகத்தை அழிக்கின்றேன் என்று புறப்படுகிறார். அப்படி ஏதாவது அவர் செய்ய ஆரம்பித்தால் ரிஷிகள் சாபம் கொடுப்பார்கள். “என்னமோ பட்டுண்டு போட்டுமே, எவ்வளவு பேசினா” என்று நினைக்காமல், லக்ஷ்மணர், ராமரோட காலைப் பிடித்து, அவரை சமாதானம் செய்து, அவரை இந்த காரியத்தில் இருந்து தடுத்தான் பாருங்கோ, இது தான் உண்மையான அன்பு.

அப்படி இந்த வால்மீகி ராமாயணத்தை படித்தால் பரஸ்பரம் அன்பு, அண்ணா தம்பிக்குள்ள இருக்கற அன்பு, கௌசல்யா தேவிக்கும் தசரதருக்கும் இருந்த புத்திர வாத்சல்யம், ராமருக்கு இருந்த பித்ரு பக்தி.

ராமர் காட்டுக்கு கிளம்பும்போது கௌசல்யா தேவியும் தசரத மன்னரும் தேருக்கு பின்னாடி ஓடி வரா. சுமந்திரர் என்கிற தேரோட்டி கிட்ட "கொஞ்சம் மெதுவாகப் போ, மெதுவாகப் போ" என்கிறார். அப்படி வயசானவா அழுதுண்டு வரதைப் பார்த்து, ராமர் சுமந்திரர் கிட்ட "இப்படி அம்மா அப்பா அழறதை பார்க்க கூடாது. அது ஒரு பாபம். நீ சீக்கிரம் போ. அப்பறம் திரும்ப வந்து கேட்டால் "காதில் விழவில்லை"னு சொல்லிடு" என்கிறார். ஆபத்துல பொய் சொன்னா பாபம் இல்லை என்பது போல சொல்கிறார். இப்படி இவரோட பித்ரு பக்தி. அவாளோட புத்திர வாத்சல்யம். புத்திர வாத்சல்யத்துனால தசரதர் உயிரையே விட்டாரே!

அது மாதிரி ராமருக்கும் சீதைக்குமான பரஸ்பரம் உத்தமமான பிரேமை. அப்படியே இந்த ராமருக்கும் லக்ஷ்மணருக்கும், ராமருக்கும் பரதனுக்கும் இடையில் இருந்த அன்பு. ஸௌப்ராத்ருகம் என்று சம்ஸ்கிருதத்தில் ஒரு வார்த்தை. அண்ணா தம்பிக்குள்ளே இருக்கற அன்பு. வர வர இந்த காலத்தில் எல்லாருக்கும் ஒரு phone எல்லாருக்கும் ஒரு bank account. யாருக்கும் இன்னொருத்தரே வேண்டாம் என்கிற அளவுக்கு போயிண்டு இருக்கோம். அதுக்கு நடுவிலே, இந்த ராமாயணத்தை, ரொம்ப ideal ஆக இருக்கு, எல்லாம் தெரிஞ்ச கதை தானே என்று நினைக்காமல் ராமாயணத்தை நாம் படித்தோமானால், இந்த மாதிரி ஆதர்சங்களை அடிக்கடி நினைச்சு பார்த்தால், என்னிக்காவது ஒரு நாள், ஒரு occasion இல்லைனா ஒரு occasionல அந்த ஆதர்சத்தை நாமும் follow பண்ணுவோம்.

அதுக்கப்பறம் ராமர் லக்ஷ்மணன் கிட்ட "சரி, என்ன பண்ணலாம் சொல்லு" னு கேட்கறார். லக்ஷ்மணன் சொல்றான் "ஒரு மான் ஆகாசத்தை பார்த்துண்டு தெற்கு திக்குல போச்சு. யாரோ ஆகாசத்துல தெற்கு திக்குல சீதையை தூக்கிண்டு போயிருக்கலாம்." அவ்வளவு புத்திமான். அவன் கரெக்ட் ஆக guess பண்ணிடறான். "நாமும் தெற்கு திக்குல தேடுவோம்" னு போறா. அங்கே ஜடாயு விழுந்து கிடக்கறதை பார்க்கறா. ஜடாயு கிட்ட ராமர் என்ன ஆச்சுன்னு கேட்கறா. அது ஒரு ஒரு வார்த்தைகள் "ராவணன் னு ஒரு ராக்ஷசன் சீதையை

தூக்கிண்டு போயிருக்கான். உனக்கு திரும்ப கிடச்சுடுவா”னு சொல்லிட்டு ராமர் மடியிலேயே உயிரை விடுகிறது.

ராமர் “இந்த பக்ஷி என் அப்பா மாதிரி பாசம் வெச்சு எனக்காக உயிரையே குடுத்து இருக்கு. அதுனால நான் என் அப்பா போல நினைச்சு, இந்த பக்ஷிக்கு ஸம்ஸ்காரம் பண்ணுகிறேன்” என்று சொல்லி ராமர் சிதை மூட்டி, பிண்டம் வெச்சு, ரிஷிகள் சொன்ன மந்திரங்களை எல்லாம் ஜெபிச்சு, “ஏ கழுகே, ஏக பத்னி விரதம் காத்தவர்களும், பூமி தானம் செய்தவர்களும், யுத்தத்தில் உயிரை விட்டவர்களும் போகும் உலகங்களுக்கெல்லாம் மேலான உலகத்துக்கு நான் உன்னை அனுப்புகிறேன். நீ போ!” என்று சொல்கிறார். அதாவது வைகுண்டத்தோட சாவி ராமர் கையிலே தானே இருக்கு! அவர் தானே வைகுண்டவாசனான விஷ்ணு பகவான். அதனால அவர் ஜடாயுவை வைகுந்தத்துக்கு ஏத்தினார் என்று சொல்வார்கள். ஜடாயு மோக்ஷம் என்று சொல்வார்கள்.

இப்படி வால்மீகி ராமாயணம் படிச்சா நாமும் பித்ரு பக்தி, ஸௌப்ராத்ருகம், மத்தவாளை புரிஞ்சுக்கறது, விட்டுக் குடுத்தல், எல்லாம் நாமும் follow பண்ணுவோம் னு சொல்றேன். ஆனா நமக்கு யாரவது காரணமில்லாமல் அன்பு காண்பிச்சு இருந்தால், நாமும், தன்னலமாக இருக்கறதை விட மத்தவா கிட்ட அன்பு காண்பிச்சா அதிகம் சந்தோஷம் இருக்குனு புரிஞ்சுண்டு, அப்படி இருக்க முயற்சி பண்ணுவோம். எனக்கு எங்க அப்பா அம்மா, ஸ்வாமிகள் அப்படி அளவற்ற அன்பு காண்பிச்சா. அதுனால நான், மத்த தன்னலத்தை விட முடியலைன்னாலும், இப்படி பொங்கி பொங்கி ராமாயணத்தை சொல்லி, அதுனால சில பேர் சந்தோஷப் படறா. மஹாபெரியவா எல்லார் கிட்டேயும் அப்படி அன்போடு, கருணையோடு இருந்தா. அதுனால அப்படிப்பட்ட மகான்களை, அவாளுடைய கல்யாண குணங்களை நினைச்சு ஒரு sense of gratitude நாம வளர்த்துண்டா, நம்ம குணமும் நல்லதாக மாறும். தன்னலமா இருக்கறதை விட மத்தவா கிட்ட அன்பு காண்பிச்சு, அதுனால அதிகமாக சந்தோஷம் கிடைக்கும்னு நினைக்கிறேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

<u>ராமாயணம் காட்டும் இல்லற இலக்கணம்</u>

वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये । जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ।।

வாகர்தாவிவ ஸம்ப்ருக்தெள வாகர்த-ப்ரதி பத்தயே |

ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ-பரமேச்வரௌ ||

அப்படீன்னு ரகு வம்சத்தினுடைய முதல் ஸ்லோகம். மஹாகவி காளிதாசர் பண்ணினது. வாக்கு, அதனுடைய அர்த்தம், ஒரு சொல், அதனுடைய பொருள். பலாப்பழம், அப்படீன்னு சொன்னா, உடனே, நம்ம மனசுல, அந்த பொருள், ஞாபகம், வர்றது. அந்த பொருளையும், அந்த வார்த்தையையும் எப்படி பிரிக்க முடியாதோ, அப்படி பார்வதி, பரமேஸ்வரர்களையும், பிரிக்க முடியாது.

“பிதரௌ” அப்படீன்னு, ஸமஸ்க்ருதத்துல, ஒரே வார்த்தையில, உலகத்துக்கே அம்மையப்பனா இருக்கற, ஜகத: பிதரௌ – உலகத்துகெல்லாம், தாய் தந்தையா இருக்கக் கூடிய, அவாளை, எனக்கு, நல்ல வாக்கும், நல்ல, வார்த்தைகளும், அதற்கேத்த பொருளும், என்னுடைய கவிதையில அமையுமாறு, என்னுடைய காவியத்தை, பண்ண ஆரம்பிக்கும் போது, இந்த பார்வதி, பரமேஸ்வராளை, வணங்குகிறேன், அப்படீன்னு சொல்லி, காளிதாசர் ஆரம்பிக்கறார்.

இதே அர்த்தத்துல, அபிராம பட்டரும்,

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்

புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்

அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாஅரசும்

செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

அப்படீன்னு சொல்றார். அது மாதிரி, அம்பாளையும், பரமேஸ்வரனையும், நினைக்கறவாளுக்கு, இந்த உலகத்துல, நல்ல வாழ்க்கை, மேலுலகத்துல அழியாத அரசு, அதுகெல்லாம் மேல, தவநெறியில, போகக் கூடிய ஒரு பாக்யமும், அதோட முடிவுல, சிவலோகமும், சித்திக்கும், அப்டீன்னு சொல்றார். அது மாதிரி, மஹா பெரியவாளும், ஒரே தெய்வம்தான், அம்மையும் அப்பனுமா ஆகி, நமக்கு அனுக்ரஹம் பண்றது. அம்பாளோட சரணத்தை தியானம் பண்றது, நமக்கு சுலபம். மனசு தானா போயி அங்க நிக்கறது, அப்படீன்னு சொல்றா.

அப்படி அந்த அம்மையப்பனா இருக்கற ஈஸ்வரனும், அம்பாளும், அப்பப்ப, ஏதோ ஒரு, கோச்சுண்டா, அதனால, அம்பாள் பிரிஞ்சு வந்தா, தபஸ் பண்ணி பகவானை அடைஞ்சா, அப்படீன்னு சில க்ஷேத்ரங்கள் எல்லாம் நாம கேள்வி படறோம். காஞ்சிபுரத்துல, அம்பாள், கம்பாநதிக் கரையில, மணல் எடுத்து, ஒரு லிங்கம் பண்ணி, பூஜை பண்ணிண்டு இருக்கா. அப்போ, கம்பை நதியில வெள்ளம் பெருக்கெடுத்து ஓடறது. பூஜை பண்ணும்போது, வெள்ளம் வந்தா நாம என்ன பண்ணுவோம்? எழுந்து ஓடிப் போயிடுவோம். ஆனா, அம்பாள், அந்த லிங்கத்தை கட்டிண்டா. அப்போ, பகவான், காட்சி கொடுத்து, அந்த மா

மரத்தடியில, அம்பாளை கல்யாணம் பண்ணிண்டு இருக்கார். ஏக ஆம்ர நாதர். ஒரு மாமரத்தடியில இருப்பவர். அந்த மரத்தோட நாலு கிளைகளும், நாலு வேதங்கள். ஒவ்வொரு, கிளையில உண்டாகிற பழங்கள், ஒவ்வொரு ருசியா இருக்கும். இன்னிக்கும், அந்த மாமரத்தடியில, அந்த அம்பாளும், ஏகாம்பரேஸ்வரரும் கல்யாண காட்சி ஒரு சந்நிதி இருக்கு. அந்த சிற்பம், செதுக்கி வெச்சிருக்கா. கல்யாணத்தின் போது, எப்படி ஒரு பெண்ணோட முகத்துல, எப்படி ஒரு சந்தோஷமும், வெட்கமும் கலந்த ஒரு சிரிப்பு இருக்குமோ, அதை அவ்வளவு, தத்ரூபமா பண்ணி இருக்கா. அதை அடிக்கடி, தரிசனம் பண்ணணும். அந்த மாதிரி, சந்தோஷம், ஒரு பெண்ணுக்கு, ஒரு குழந்தைக்கு, தாயாகும் போது தான், நான் பார்த்திருக்கேன்.

அப்படி ஸ்வாமியும் அம்பாளும் பிரிஞ்சு மீண்டும் சேர்ந்தார்கள், அப்டீங்கிறது, எங்க மயிலாப்பூர்லேயும், அம்பாள் மயிலா இருந்து, பூஜை பண்ணிணா. அதாவது பரமேஸ்வரன் உபநிஷத் தத்துவத்தை சொல்லிண்டிருந்தாராம். அப்போ, அம்பாள், மயில் டான்ஸ் ஆடறதை, நாட்டியம் ஆடறதை பார்த்துண்டு, சொன்னதை கவனிச்சுக் கேட்கலையாம். அப்போ பகவான், நீ மயிலா போன்னு, சபிச்சுட்டார். இங்கே மயிலாபுரியில வந்து, சிவலிங்கத்துக்கு பூஜை பண்ணி, திரும்பவும், சுயரூபம் அடைஞ்சு, அம்பாள் பரமேஸ்வரனோட சேர்ந்தா, அப்படீன்னு, இங்க ஸ்தல புராணம்.

பகவானே, தன்னோட பக்தர்களை, தம்பதிகள், பிரிஞ்சு இருந்தா சேர்த்து வெச்சிருக்கார். பரமேஸ்வரனே தூது போயிருக்கார். “பரவைக்கு எத்தனை விசை தூது” ன்னு அதை அருணகிரி நாதர் பாடறார். ஸுந்தரமூர்த்தி நாயனார், அவர் பகவானோட அம்சம். சிவபெருமான், ஒரு தடவை, தன்னை, கண்ணாடியில பார்த்தபோது, உள்ளிருந்து வெளி வந்த, தன்னை அலங்காரம் பண்ணிண்டு ஸ்வாமி பார்த்தபோது வெளி வந்த, அந்த ஸ்வாமிதான், ஸுந்தரமூர்த்தி. அவர் பார்வதி தேவியோட ரெண்டு சேடிப் பெண்களை பார்த்து, ஆசைப்படறார். அப்ப பகவான், “நீ பூமியில போயி பிறந்து, அவாளை, கல்யாணம் பண்ணிண்டு, அனுபவிச்சுட்டு வா”ன்னு அனுப்பறார்.

பூமியில திருவாரூர்ல வந்து, ஸுந்தர மூர்த்தி பிறக்கறார். பகவான், அவரை, ஆட்கொள்கிறார். பரவை நாச்சியார்னு, திருவாரூர்ல, ஒரு பொண்ணு, பொறந்திருக்கா. அவளை கல்யாணம் பண்ணிக்கறார். அப்புறம், இங்க திருவொற்றியூர்ல வந்து, சங்கிலி நாச்சியார்னு இன்னோருத்தியை கல்யாணம் பண்ணிக்கறார். அப்புறம் திரும்பவும் திருவாரூர் போன போது, அந்த பரவை நாச்சியார், "உங்களை சேர்த்துக்க மாட்டேன்"னு, ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சொல்றா. அப்படி சொன்ன போது, ஸுந்தரமூர்த்திக்கு, சிவபெருமான், தம்பிரான் தோழர். அவர் தான் best friend. அதனால அவர் ஸ்வாமி கிட்ட, "நீங்க எனக்காக, பரவை நாச்சியார் கிட்ட சமாதானம் பேச தூது போகணும்", அப்டீங்கறார். சிவபெருமான், தூது போறார். பரவை நாச்சியார், இல்லேங்கறா. அப்படி ஸுந்தரமூர்த்திக்கு வந்து பகவான் சொன்ன போது, "திரும்பவும் போங்கோ"ங்கறார். திரும்பவும் போறார். இப்படி நடையா நடந்து, ஸுந்தரமூர்த்தியையும், பரவை நாச்சியாரையும் சிவபெருமான், சேர்த்து வைக்கறார்.

இப்படி, பிரிந்த தம்பதிகளை, சேர்த்து வைக்கறதுங்கற காரியம், பகவானே பண்ற கார்யம், அதை ஹனுமார் பண்றார். ஹனுமார் பிரம்மசாரி. அவருக்கு, ராமர் சீதையை, பிரிஞ்சு படற கஷ்டத்தை பார்த்தபோது, புரிஞ்சிருக்காது. ஆனா இங்க வந்து, ஸீதா தேவியை பார்த்த உடனே, அவர் "ஆஹா, ஆஹா, அப்படீன்னு தெய்வப் பெண்ணா இருக்காளே, இவள்"

'யதி ராமஹ சமுத்ராந்தாம் மேதிநீம் பரிவர்த்தயேத் |

அஸ்யா: க்ருதே ஜகச்சாபி யுக்தமித்யேவ மீ மதி: ||

ராமர் கடல் சூழ்ந்த இந்த உலகத்தை, புரட்டி போட்டார்னா கூட, இவளுக்காக பண்ணலாம், யுக்தம் தான் அது, அப்டீங்கறார்.

ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு ஸீதாம் வா ஜனகாத்மஜாம் |

த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயா: நாப்னுயாத் கலாம் ||

மூவுலகத்தினுடைய ராஜ்யமும், ஸீதாதேவியையும் ஈடு பார்த்தா சீதையினுடைய, பதினாறுல ஒரு பங்குக்கு மூவுலக ராஜ்யமும், ஈடாகாது. அப்படின்னு சொல்றார்.

“மமாபி வ்யதிதம் மன:” இவா ரெண்டு பெரும் பிரிஞ்சு இருக்காளேன்னு, இந்த ராக்ஷசிகளுக்கு, மத்தியில, இப்படி கஷ்டப் படறாளேன்னு, இவளை பார்த்து, என் மனமே, ரொம்ப துக்கப் படறது, ராமர் எப்படி இதை தாங்குவார். ராமருடைய உயிர், சீதை கிட்ட இருக்கு, சீதையினுடைய உயிர் ராமர் கிட்ட இருக்கு. அதனால தான் இவா ரெண்டு பேரும், இன்னும் உயிரோட இருக்கா, அப்படீன்னு வியக்கறார்.

அந்த இடத்துல ஸுந்தரகாண்டத்துல பதினைந்தாவது, சர்கத்துல, ரெண்டு ஸ்லோகம் வர்றது.

इयं सा यत्कृते रामश्चतुर्भिः परितप्यते । कारुण्येनानृशंस्येन शोकेन मदनेन च ।।

स्त्री प्रणष्टेति कारुण्यादाश्रितेत्यानृशंस्यतः । पत्नी नष्टेति शोकेन प्रियेति मदनेन च ।।

இயம் ஸா யத்க்ருதே ராம: சதுர்பி: பரிதப்யதே |

காருண்யேன ஆன்ருஷம்ஸ்யேன ஷோகேன மதனேன ச ||

ஸ்த்ரீ பிரணஷ்டேதி காருண்யாத் ஆஸ்ரிதேதி ஆன்ருஷம்ஸ்யத: |

பத்னி நஷ்டேதி, ஷோகனே ப்ரியேதி மதனேன ச ||

இந்த பெண்ணை குறித்து, ராமர் நாலு விதமா கவலைப் படறார். கருணையினாலயும், தயவினாலயும், சோகத்துனாலயும், காமத்துனாலயும் வருத்தப் படறார். “ஸ்த்ரீ பிரணஷ்டேதி காருண்யாத்” அப்படீன்னு, ஒரு பெண், இந்த மாதிரி, காணாம போயிட்டாளேன்னு கருணை. தன்னை நம்பி, வந்தவள், “ஆஸ்ரிதேதி ஆன்ருஷம்ஸ்யத: ” நம்மை நம்பி வந்தவள். அவளை நாம தொலைச்சுட்டோமே, அப்படீன்னு அவருக்கு ஒரு வருத்தம். “பத்னி நஷ்டேதி, ஷோகேன” தன்னுடைய பத்னி, பக்கத்துல இல்லாம இருக்காளே, அப்படீன்னு, அதனால ஒரு சோகம். “ப்ரியேதி மதனேன ச” தனக்கு, பிரியமான காதலி, அவள் இல்லாம இருக்கறது, அதனால ஒரு சோகம்.

இப்படி நாலு விதமான உணர்ச்சிகள், நாலு விதமான கணவன், மனைவிக்குள்ள, இருக்கற உறவு, இந்த ஒரு ஸ்லோகத்தை வெச்சுண்டு, திருமண வாழ்க்கைன்னா என்ன? அதுல, கணவன் எப்படி இருக்கணும்? மனைவி எப்படி இருக்கணும்? அப்டீங்கிறது எல்லாம், அவ்வளவு அழகா சொல்லி இருக்கார்! அதை ஹனுமார், வாயால சொல்றது இன்னும் அழகு. அவர் இவா ரெண்டு பேரையும், சேர்த்து வைக்கறார். அதுமாதிரி, உத்தம தம்பதிகளா இந்த ஸ்லோகத்துல இருக்கற மாதிரி, கணவன், மனைவி இருந்தா ஏதாவது ஒரு விதி வசமா அவா பிரிஞ்சா கூட, பகவானே அவாளை சேர்த்து வெச்சுடுவார். எப்படி ஹனுமார் சேர்த்து வெச்சாரோ, அப்படி.

ஒரு பொண்ணா அவளுடைய இயல்புகளை புரிஞ்சுண்டு, ஒரு ஆண் அவள்கிட்ட பொறுமையோடு அன்போடு நடந்துக்கணும். தன்னை நம்பி ஒரு பெண்ணை கொடுத்திருக்கா, அப்டீங்கிற போது, அவாளோட physical constrains, அவாளால எவ்ளோ முடியும், அப்டீங்கிறதை புரிஞ்சுக்கணும். அவாளோட அந்த limitations தெரியணும். அவாளுடைய பயமோ, அவாளுடைய வெட்கமோ, அவாளுக்கு டக்குன்னு, possessive ஆ இருக்கறதுனால மத்தவா மேல ஒரு வெறுப்பு வரும். தன் கணவன் மேல இருக்கற அன்புனால, தன் நாத்தனார், மாமியார், எல்லார் மேல கூட அவாளுக்கு விருப்பம் குறைச்சலா இருக்கும். ஒரு கோபம், கீபம், வரும். அதெல்லாம் கூட ஒரு கணவன் எங்கிறவன் புரிஞ்சுக்கணும். அதை அன்பினால் மாத்தணும்.

அப்புறம் தன்னை நம்பி வந்திருக்கா. அவளுடைய அப்பா, அம்மா, சகோதரர்கள், தோழிகள், எல்லாரையும் விட்டுட்டு, இந்த பெண், தன்னை நம்பி வந்திருக்கா, அப்டீங்கிறதை நினைச்சு, அவ கிட்ட பிரியத்தை காண்பிக்கணும். அவளை காப்பாத்தணும்.

அடுத்தது, பத்னிங்கிற ரோல். அந்த பத்னிங்கிற, roleலில், தனக்கு, தன்னை கரையேத்தக் கூடிய பிள்ளைகளை பெற்று, கொடுக்கறா. தன்னுடைய அப்பா, அம்மாவை கரையேத்தறதுக்கு, கூட நிக்கறா. அப்படீன்னு அந்த பத்னிங்கிற, roleக்கு தனி மதிப்பு. ஒரு பெரியவர், தன்னுடைய பத்னீ காலமானபோது,

என்னோட அக்னியை கூட்டிண்டு போயிட்டியே, அப்படீன்னு அழுதாராம். அப்படி பத்னி இருந்தாதான், அக்னி காரியமெல்லாம், பண்ணலாம். இவ்வளவு முக்யமான ஒரு role. அதனால, எந்த தொழிலா இருந்தாலும், அந்த பத்னியினுடைய துணை என்ன அப்படீன்னு புரிஞ்சுண்டு, அந்த role, அவ பண்றாங்கிறதை மதிக்கணும். அவா ஆத்தை பாத்துக்கலேன்னா, நாம நிம்மதியா வெளியில போயிட்டு வர முடியுமா? அதனால அதை கௌரவிக்கணும்.

கடைசியில, இவ தன்னோட காமத்தை பூர்த்தி பண்றா, அப்டீங்கிறது, அது ஒரு element. 25%. அது முக்யம்தான். அதை base பண்ணி ஒரு கல்யாணத்தை நாம நிறுத்தி வைக்க முடியாது. அதை புரிஞ்சுண்டு, அந்த மாதிரி எல்லாம், ஒரு கணவன், தன் மனைவியை, அன்பா நடத்தினாலொழிய கல்யாண வாழ்க்கைங்கறது கஷ்டமாக போயிடும். கல்யாணம்கிறது, ரொம்ப, hard work. அதுவும், நம் arranged marriage அர்த்தப் புஷ்டியானது, ஆயிரம் காலத்துப் பயிர்னு நாம நம்பறோம். அதுல கணவன், இவ்வளவு, எல்லாம் புரிஞ்சுண்டு, நடக்கணும்.

அதே மாதிரி, இந்த ஸ்லோகத்துல, ஒரு பெண்ணும் எப்படி நடந்துக்கணும்ங்கிறது இருக்கு. பெண்களுக்கு, அவாளுக்கும், தங்களுடைய limitation, தங்களோட characteristics என்று சொல்ற மாதிரி, தங்களோட விசேஷ குணாதசியங்கள், அச்சம், மடம், நாணம், பயிர்ப்புனா என்னன்னு தெரியணும். இந்த காலத்துல படிச்சு வேலைக்கு போயிட்டா, இதெல்லாம் இல்லாம இருக்கறதுதான், ரொம்ப உலகம் பாராட்டறது. ஆனா, இதெல்லாம் அவாளுக்கு இயல்பா இருக்கு. யாரும் திணிக்க ஒண்ணும் இல்லை.

நம்ம சாஸ்திரங்கள், ல, அச்சம், மடம், நாணம், பயிர்ப்புன்னு, சொல்றா. இதெல்லாம் சொன்னா, என்னை அடிக்க வருவா. ஆனா, ஒரு பெண், ஒரு பூனையை பார்த்தா பயப்படறா. ஆனா கணவன் கையை பிடிச்சுண்டு, ஆஸ்திரேலியாக்கு கூட போறா. என்ன தைரியம்! அந்த மாதிரி அவாளோட சில பயங்கள் எல்லாம், வந்து புரிஞ்சுக்கணும்.

அது மாதிரி, மடம், னா ஒரு, naivety. ஒரு வெகுளித் தன்மை. ஒரு expert doctorஆ இருந்தா கூட, தன்னோட குழந்தைக்கு, உடம்பு சரியில்லைன்னா, வேற doctor கிட்ட போவா. ஏன்னா, அவளுக்கு, அந்த தன் குழந்தைன்னு வரும்போது, ஒரு அசடு தட்டிடறது. அந்த மாதிரி, அவாளுக்கு, சில சமயம், decision making போது, அந்த மாதிரி, ஒரு பாசத்தினால ஏதாவது ஒரு தப்பு பண்ணக் கூடும். அப்படீங்கிறது, தனக்கு, அந்த limitation இருக்குங்கிறது, அவாளும் புரிஞ்சுக்கணும்

நாணம், அப்படீனா, ஒரு லஜ்ஜை. சிலது பண்ணலாம், சிலது பண்ணக் கூடாது.

அது மாதிரி, பயிர்ப்புன்னா,ஒரு வித வெறுப்பு. கணவனைத் தவிர, பர புருஷர்கள் கிட்டயோ, வேத்து மனுஷா கிட்ட, ஒரு விதமான, மனவிலக்கம்.

எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க

கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க னு

திருவெம்பாவைல சொன்ன மாதிரி. கணவன் கிட்ட தனிப்பட்ட அன்பு.

இதெல்லாம் இவாளோட, இயல்பு. இந்த இயல்பை அவா வெச்சுண்டு இருந்தா, கணவனுக்கு அவ கிட்ட ஆசை வரும்.

கணவனுக்கும், முதல்ல ஒரு தடவை, ஒரு பூனையை, பார்த்து பயந்துண்டு, தன்னை கட்டிண்டா, கணவனுக்கு அது பிடிக்கறது. அதை வெச்சுதான் காதலே வர்றது. ஆனா, அப்புறம் பின்னாடி, அதை வெறுத்தான்னா, எப்படி? அதனால ரெண்டு பேரும் தன்னோட இந்த இயல்புகளை புரிஞ்சுக்கணும்.

அடுத்தது கணவனை நம்பி, இருக்கறது, அப்டீங்கிறது என்னனா, பணத்தை நம்பி இருக்கக் கூடாது. கணவனுடைய குணத்தை நம்பி இருக்கணும். கணவனுடைய படிப்பு, அவனுடைய வீரம், அந்த மாதிரி அவனுடைய தனித் திறமைகளை புரிஞ்சுண்டு, அதை வளர்க்கணும். இது ஒரு மனைவியோட முக்யமான ஒரு கடமை.

அடுத்தது, பத்னிங்கிற role ஐ play பண்ணனும். குழந்தைகளை, பாத்துக்கணும். அவனோட அம்மா அப்பாவை பாத்துக்கணும்.

அதெல்லாம் போக கணவனுடைய காமத்தை பூர்த்தி பண்ணனும். அதுல பரஸ்பரம், ரெண்டு பேருக்கும் ஒரு சந்தோஷத்தை பகவான், வெச்சிருக்கார். அதனால அதையும் புரிஞ்சுக்கணும்.

இப்படி ஒரு, கணவனும் ,மனைவியும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுண்டு, ideal ஆ, ஒரு ஆதர்ச தம்பதிகளா இருந்தா, பகவான்அனுக்ரகம் கிடைக்கும். இந்த இல் வாழ்க்கையே ஒரு புண்யமமாக, எல்லா தர்மங்களுக்கும் மேலாக, "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" அப்படின்னு ஔவை பாட்டி சொன்னா மாதிரி. அந்த மாதிரி இல் வாழ்க்கை என்பதே தர்மம். இப்படி வாழ்ந்துண்டு, அவா ஒரு நாம ஜபம் பண்ணிண்டு இருந்தாலே அவா ரொம்ப சுலபமா, பகவானை அடைஞ்சுடுவா.

ஆனால், சில சமயம் இப்படி இருக்கும்போது கூட, ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்துண்டு பரஸ்பரம், அன்போட இருக்கும்போது கூட, விதி வசமா ஏதாவது ஒண்ணு வந்து அவாளோட அன்புக்கு சோதனையா வரும். அப்டீங்கிறதை தான் நம்முடைய, இந்த கதைகள் எல்லாம் காண்பிக்கறது. இந்த மாதிரி சீதையை பார்த்த போது, ஹனுமார் சொல்லுவார்.

तुल्यशीलवयोवृत्तां तुल्याभिजनलक्षणाम् ।
राघवोऽर्हति वैदेहीं तं चेयमसितेक्षणा ।।

துல்ய ஷீல வயோ வ்ருத்தாம் துல்யாபிஜன லக்ஷணாம் |

ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயம் அசிதேக்ஷணா ||

இவா ரெண்டு பேரும் சரியான வயசு, அதாவது பொருத்தமான வயசு. பொருத்தமான குணம், அவாளுடைய சீலம், ஒழுக்கம், ஒரே மாதிரி. வ்ருத்தமும் ஒரேமாதிரி. அவாளுடைய ஆசாரங்கள் எல்லாம் ஒரே மாதிரி இருக்கு. இவா ரெண்டு பேரும் ராஜகுமாரன், ராஜகுமாரி. இவாளுடைய அபிஜனங்களும், ஒரே மாதிரி. ஜனகர், மகள் இவள். தசரத குமாரர் அவர். "ராகவோர்ஹதி வைதேஹிம்" ராமனுக்கு இவள், ரொம்ப பொருத்தமான மனைவி. சீதைக்கு, ராமர்தான் பொருத்தமான கணவர். அப்படீன்னு, இங்க வந்து, அவா பிரிந்து இருக்கும்போது இதை எதுக்கு, சொல்லணும்னா, நமக்கு வைராக்கியம் வரதுக்ககாக தான். அப்பேற்பட்ட ராமரும் சீதையும் கூட பிரியும்படியான ஒரு

காலம் வரும். “காலோஹி துரதிக்ரமஹ” காலம்கிறது, ரொம்ப கடுமையானது. விதிங்கிறது, அவ்வளோ powerful, அப்டீங்கிறது, அவர், feel பண்ணி, இதை சொல்றார், ஹனுமார்.

ஆனா அந்த ஹனுமார், இவா ரெண்டு பேரையும் பார்த்தவுடனே அவாளுடைய பக்தர் ஆயிட்டார். சீதையை பார்த்த உடனே, அவருக்கு அவ கிட்ட பக்தி வந்துடறது. அப்புறம், அவள் இராவணன் கிட்ட behave பண்றதும், அடுத்தது, அவள் தன்கிட்ட பேசும்போதும், நடந்துண்ட விதமும், மேன்மேலும், ஹனுமாருருக்கு, ஸீதா தேவி மேல பக்தி ஏற்பட்டு, அந்த சீதையை கஷ்டப் படுத்தறா, அப்படீங்கிற கோபத்துனாலதான், இலங்கையை, எரிச்சார், ஹனுமார் “ய: சோகவஹ்நிம் ஜனகாத்மஜாயா: ஆதாய தேனைவ ததாஹா லங்காம்” அப்டீன்னு, சீதையினுடைய, கோப அக்னியை, கொண்டுதான், இலங்கையை, எரிச்சார், அவர், அப்படீன்னு ஸ்லோகம்.

அப்புறம், ராமர் கிட்ட திரும்பி வந்து, “இன்னிக்கே கிளம்புவோம்” என்கிறார். தன்னோட வானர சேனைகள் கிட்டயும் வந்து, “சீதையை, நாம காப்பாத்தணும், இப்பவே, சீதையை, நாம மீட்டுண்டு, கூட போயிடலாம்”, அப்படீங்கும்போது, அவாளும் “ஆஹா, அப்படி பண்ணுவோம்” அப்படீங்கிறா. ஆனா ஜாம்பவான், “ நாம ராமரை பார்த்து, அவர் சொல்றதை கேட்போம்” அப்படீன்னு சொன்ன உடனே, ராமரை பார்த்து, அன்னிக்கே, ராமரை கிளப்பி, கூட்டிண்டு வந்து, சீதையை, மீட்கும்படி ஹனுமார், பண்றார். ஸீதா தேவியோட செய்தியை, ராமர்கிட்ட சொல்லும்போது, அங்க ராமர் சந்நிதியில் ராமரை நமஸ்காரம், பண்றார். அப்புறம், தெற்கு திக்குல திரும்பி ஸீதா தேவியை ஒரு நமஸ்காரம் பண்றார். ராமருக்கு நமஸ்காரம் பண்ணிண்டு இருந்தவர்,

ஸீதாராம குணக்ராம புண்யாரண்ய விஹாரிணௌ |

வந்தே விஷுத்த விக்ஞானௌ கவீஷ்வரரௌ கபீஸ்வரௌ ||

அப்டீன்னு, இந்த வால்மீகியும், ஹனுமாரும் இந்த ஸீதா ராம குணத்துல, அப்படி மூழ்கறா. ராமர் எவ்ளோ, தூரம், சீதைக்காக, ஏங்கிண்டு இருக்கார்,

அப்படீங்கிறதை, ஹனுமார், முப்பத்து ஒண்ணாவது சர்கத்துல இருந்து, நாற்பதாவது சர்கம் வரைக்கும், அப்படி திரும்ப திரும்ப, சொல்றார். ராமர் கிட்டே "ஏதாவது, சாப்பிடுங்கோளேன்", அப்படீன்னு, சொன்னா, "வேண்டாம்பா, வேண்டாம்பா", அப்படீன்னு, சொல்லிடறார். "சாயங்காலம் நாலு மணி, அஞ்சு மணிக்கு ஏதோ சாப்பிடறார். ஆனா ஒண்ணுமே ரசிச்சு, சாப்பிடறது இல்ல" அப்படீன்னு, சீதைகிட்ட "உங்களை, நினைச்சு, அப்படி அவருக்கு, தூக்கமும் இல்ல, சாப்பாடும் இல்ல, சந்திரனை பார்த்தா, சீதையோட முகம் மாதிரி இருக்கு", அப்படீங்கறார். "எப்பவும் உங்களை நினைக்கிறார். எப்பயோ ஒரு தடவை தூங்கினாலும், கனவுல உங்களை பார்த்துட்டு, "சீதேதி மதுரம் வாணீம்" ஸீதா அப்படீன்னு, அந்த மதுரமான வார்த்தைகளை, சொல்லிண்டு, எழுந்துண்டுடறார்" என்கிறார் ஹனுமார்.

அப்படீன்னு ரெண்டு பேருடைய பரஸ்பர அன்பை புரிஞ்சுண்டு, சேர்த்து வெச்சவர் ஹனுமார். அது மாதிரி இப்பவும், தம்பதிகளுக்குள்ள ஏதாவது பேதம் ஏற்பட்டா, "அபராஜித பிங்காக்ஷ நமஸ்தே ராமபூஜித" அப்படீன்னு ஹனுமாரை வேண்டிண்டா உடனே அவர், அந்த பிணக்கை போக்கி சேர்த்து வைப்பார்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

ஹனுமத் பிரபாவம்

இன்னிக்கு மூல நக்ஷத்ரம், ஹனுமாருடைய பிரபாவத்தைப் பற்றி பேசுவோம். ஹனுமார், ஸீதா தேவியை பார்த்து, அவளுக்கு ஆறுதல் சொல்லி, ஸ்ரீ ராமருடைய அங்குலீயகத்தை (மோதிரம்) காண்பித்து, நம்பிக்கை ஏற்படுத்தி, “ஸ்ரீ ராமர் வந்துவிடுவார், தங்களின் கஷ்டம் தீர்ந்தது, தாங்கள் இனிமேல் அழவேண்டாம்” என்று கூறுகிறார். முதலில் பார்த்தவுடன், “ஏனம்மா அழுகிறாய்?” என்று கேட்டார், இப்போ கிளம்பும்போது “இனி நீங்கள் அழவேண்டாம், தங்களின் கஷ்டங்கள் தீர்ந்தது” என்று கூறிவிட்டு, ஸீதாவிடம் ஏதாவது அடையாளம் தரச் சொல்லி கேட்டு, அவள் சூடாமணி தர, அதனை பெற்றுக் கொண்டு கிளம்புகிறார்.

அது போல, பகவான் ஒருவர் தான், ஏன் அழுகிறாய் என்று கேட்டு, இனிமேல் அழவேண்டாம், உன் கஷ்டம் தீர்ந்தது என்று கூறுவார். அதனால், நம்முடைய கஷ்டத்தினை பகவான் ஒருவரிடம் தான் கூற வேண்டும், வருவோர்கள் போவோர்கள்ளிடம் கூறினால், ஒரு சிலர் சந்தோஷமும் படுவார்கள், பலர் அதனை பொருட்படுத்த மாட்டார்கள். அவாளால என்ன செய்ய முடியும்,

உலத்தில் உழலும் மனிதர்களினால் நம்முடைய கஷ்டத்தினை போக்க முடியாது. போக்கு கூடிய பகவானிடம்தான் நாம் கூறவேண்டும், என்று ஸ்வாமிகள் சொல்வார்.

அடுத்தது, அசோக வனத்தில் இருந்து வெளியே வந்தவுடன், யோசிக்கிறார். "சரி நாம் வந்தோம், ஸீதாதேவியை பார்த்தோம், அவள் எங்கு இருக்கிறாள் என்று தெரிந்துகொண்டோம், இந்த இராக்ஷஸ பதர்களுக்கு எல்லாம் என்ன ஒரு கர்வம், இவர்களுடைய கர்வத்தினை ஒழிப்பது போல, இவர்கள் பயப்படும் விதமாய் எதாவது செய்யவேண்டும். நாம் வந்த காரியத்திற்கு கெடுதல் இல்லாமல், அதிகப்படியாக காரியம் செய்தால், அதவாது, அதற்கு அனுகூலமான காரியங்கள் செய்தால் தவறு இல்லை" என்று முடிவு செய்துகொண்டு, இந்த இராவணனை பார்க்கவேண்டும், அவனுக்கு ஒரு தடவையாவது நல்ல புத்தி கூறவேண்டும், அதனை அவன் கேட்கிறானா என்று பார்ப்போம் என்று நினைத்து, அந்த இராவணனை பார்க்க, நம்முடைய பராக்கிரமத்தை காட்டவேண்டும், இந்த இராக்ஷஸகளிடம், சாம தான பேதம் எல்லாம் ஒன்றும் பலிக்கப் போவது இல்லை, இவர்கள் மிக பலசாலிகளாக இருக்கிறார்கள், இவர்களிடம் சமாதனம் பேசுவதோ, இவர்களுக்கு பரிசுகள் தானமோ குடுப்பதோ, அல்லது இவர்கள் ஒருவரை ஒருவர் பிரித்து விடுவதோ அதுபோன்றவை எல்லாம் இப்பொழுது நடக்காது, தண்டம் தான் அவர்களுக்கு புரியும், அதனால், இவரக்ளுடன் யுத்தம் செய்து, வானரர்களின் பராக்கிரமம் என்ன என்றும், இராமதாசன் என்றால், எவ்வளவு பெரிய வீரன் என்று இவர்களின் மனதில் ஒரு பயத்தினை உண்டாக்கபோகிறேன்" என்று சங்கல்பித்துக் கொண்டு, அசோக வனத்தினை த்வம்சம் செய்கிறார்.

அசோகவனத்தில் இருக்கும் மரங்களை அழித்து, அங்கு இருக்கும் மண்டபங்களை உடைத்து த்வம்சம் செய்தவுடன், இராக்ஷஸிகள் எழுந்து இவரை பார்க்கிறார்கள். இவ்வளவு பெரிய மலை போன்ற உருவத்தை பார்த்து பயந்து போய், உடனே சென்று இராவணனிடம் சொல்கிறார்கள், "யாரோ ஒரு பெரிய உருவமுடைய, சிவந்த முகமுடைய ஒரு குரங்கு அசோகவனத்தில் வந்திருக்கிறது. அது ஸீதாதேவியிடம் பேசியது என்று நினைக்கிறோம் நாங்கள், அனால் சரியாக தெரியவில்லை. அக்குரங்கு அசோகவனத்தினை

அழித்துவிட்டது, தங்களின் காவலில் இருக்கிற இலங்கையில் உள்ளே ஒருவன் வருவதாவது!, அப்படி வந்து ஸீதாதேவியை பார்த்து பேசுவதாவது! நீங்கள் உடன் அவனுக்கு தண்டனை குடுக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள்.

உடனே, இராவணனுக்கு கடும் கோபம் வருகிறது, "அவனின் கண்களில் இருந்து நெருப்பு பொறிகள் கிளம்பியது" என்கிறார் வால்மீகி. உடனே அவன் எண்பதாயிரம் கிங்கரர்களை அனுப்புகிறான். ஹனுமார் ஒரு தூணினை பெயர்த்து எடுத்து சுற்றுகிறார், அதனில் இருந்து நெருப்பு வருகிறது, அந்த எண்பதாயிரம் பேரையும் வதம் செய்து விடுகிறார்.

जयत्यतिबलो रामो लक्ष्मणश्च महाबलः । राजा जयति सुग्रीवो राघवेणाभिपालितः ।।

दासोऽहं कोसलेन्द्रस्य रामस्याक्लिष्टकर्मणः । हनुमाञ्शत्रुसैन्यानां निहन्ता मारुतात्मजः ।।

न रावणसहस्रं मे युद्धे प्रतिबलं भवेत् । शिलाभिस्तु प्रहरतः पादपैश्च सहस्रशः ।।

अर्दयित्वा पुरीं लङ्कामभिवाद्य च मैथिलीम् । समृद्धार्थो गमिष्यामि मिषतां सर्वरक्षसाम् ।।

ஜயத்யதிபலோ ராமோ லக்ஷ்மணஸ்ச மஹாபல: |

ராஜா ஜயதி சுக்ரீவோ ராகவேணபிபாலித: ||

தாஸோ(அ)ஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்ட கர்மண: |

ஹனுமான்ஸத்ருஸைன்யானாம் நிஹந்தா மாருதாத்மஜ: ||

ந ராவண ஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத் |

ஸிலாபிஸ்து ப்ரஹரத: பாதபைஸ்ச ஸஹஸ்ரஸ: ||

அர்தயித்வா புரீம் லங்காமபிவாத்ய ச மைதிலீம் |

ஸம்ருத்தார்தோ கமிஷ்யாமி மிஷதாம் ஸர்வராக்ஷஸாம் ||

என்று கர்ஜிக்கிறார், "நான் ராமதாசன், ஆயிரம் இராவணர்கள் வந்தாலும் என் முன் யுத்தத்தில் நிற்க முடியாது. சுக்ரீவன், வானரப்படையோடு வரப்போகிறான், உங்கள் எல்லாரையும் உதைக்க போகிறான்" என்று சொல்கிறார். இந்த நான்கு ஸ்லோகங்கள்

ஜயதி அதி பலோ ராம: லக்ஷ்மணஸ்ச மஹாபல:.....

என்கிற இந்த நான்கு ஸ்லோகங்களை, எந்த ஒரு புதிய காரியமாக இருந்தாலும், இதனை சொல்லிக் கொண்டு இருந்தால், அதில் வெற்றி ஏற்படும் என்று ஸ்வாமிகள் நிறைய பேரிடம் சொல்லி நான் நேரில் பார்த்திருக்கிறேன். அப்படி ஒரு ஜயப்ரதமான நான்கு ஸ்லோகங்கள்.

அதன் பிறகு, பிரகஸ்தனின் பிள்ளை ஜம்புமாலி என்று ஒருவன் வர, அவனையும் வதம் செய்துவிடுகிறார். அதன் பிறகு, ஏழு சேனாதிபதிகள், ஐந்து மந்திரி குமாரர்கள் , மேலும் பலர் வருகிறார்கள், அவர்கள் எல்லாவற்றையும் வதம் செய்துவிடுகிறார் ஹனுமார்.

அப்புறம், இந்த்ரஜித்தை அனுப்புகிறான் இராவணன், இந்த்ரஜித் ப்ரம்மாஸ்திரம் போடுகிறான், ஹனுமாரும் சரி, இராவணனை இனி பார்க்கவேண்டும், அதானால் அந்த அஸ்திரத்திற்கு கட்டுப்பட்டு, அந்த இராவணன் சபைக்கு சென்று, அவனக்கு, நல்ல வார்த்தையாக இரண்டு சொல்கிறார், பிறகு கடுமையாக எச்சரிக்கை (Warning) கொடுக்கிறார்.

அப்பொழுது இராவணனுக்கு கோபம் வருகிறது, “இந்த வாரனத்தை கொல்லுங்கள்” என்கிறான். அப்பொழுது விபீஷணர் எழுந்தது, “இராவணா தூதனாய் வந்தவனை கொல்லக்கூடாது, நீ அரச தர்மங்களை எல்லாம் படித்திருக்கிறாய், நீ அதனை செய்யாதே”, என்று கூறியவுடன், அதற்கு இராவணன் சொல்கிறான், “இவன் எனக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்திவிட்டான், இவனை கொல்லப் போகிறேன்” என்றவுடன், விபீஷணர் மீண்டும் எழுந்து, “நீ எவ்வளவு பெரிய வீரன், இவனை நீ கொன்று விட்டால், அதன்பிறகு, யார் மீண்டும் சென்று இவனை அனுப்பியவரிடம் சொல்வார், பிறகு நீ அவர்களை எப்படி யுத்தத்தில் சந்திக்க முடியும்? அதனால், நீ இவனை திருப்பி அனுப்பு, யார் இவனை அனுப்பினார்களோ, அந்த இராம லக்ஷமணர் வரும்பொழுது, உனது வீரத்தினை காட்டு. வந்த ஒரே ஒரு தூதனை கொல்வது பாபம்”, என்று அறிவுறுத்தியவுடன், இராவணனும் “சரி” என்கிறான்.

அதன் பிறகு விபீஷணர், “வேறு ஏதாவது தண்டனை குடு என்று, தூதர்களை கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி அனுப்பவுது போன்றவற்றை செய்வார்கள், கொல்ல மாட்டார்கள்” என்று கூறுகிறார். உடனே, இராவணன்,

"வானரர்களுக்கு வால் மிகவும் பிரியமான ஒரு அங்கம், அதனால் இவனுடைய வாலில் நெருப்பு வைத்து கொளுத்துங்கள்" என்று கூறுகிறான். வானரர்களுக்கு உள்ள பழக்கம் என்னவென்றால், ஒரு வானரம் அங்கஹீனம் ஆகிவிட்டது என்றால், அதாவது, கை கால் ஏதாவது அடிபட்டதென்றால், மற்ற வானரங்கள் அதனை விட்டுவிட்டு சென்று விடும், இதனை ஒரு documentry யில் கூட பார்த்தேன் அதுபோல, வாலில்லாமல் வந்தால், இவனுடைய பந்துக்களும் சிநேகிதர்களும் கேலி செய்வார்கள். அதனால், இவனுடைய வாலில் நெருப்பு வையுங்கள் என்று கூறுகிறான்.

உடனே இராக்ஷஸர்கள் ஹனுமாரின் வாலில், துணியை சுற்றுகிறார்கள், நெய்யை விடுகிறார்கள, அனால் எவ்வளவு சுற்றினாலும், நெய் விட்டாலும், அவருடைய வால் வளர்ந்து கொண்டே போகிறது, அந்த விளையாட்டில், இராக்ஷஸர்கள் தளர்ந்து போகிறார்கள். பின்னர், இராவணன் நெருப்பை வைக்க சொல்ல, அவர்களும் வைத்துவிடுகிறார்கள். அப்பொழுது, இந்த விஷயத்தை இராக்ஷஸிகள் சென்று ஸீதாதேவியிடம் சொல்கிறார்கள், சீதை ஒரு விளக்கை ஏற்றி, அக்னிபகவானிடம், இந்த ஹனுமனின் வாலில் உள்ள நெருப்பு அவரை சுடாமல் இருக்கட்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்.

यद्यस्ति पतिशुश्रूषा यद्यस्ति चरितं तपः।। यदि वास्त्वेकपत्नीत्वं शीतो भव हनूमतः।

யத்3யஸ்தி பதி ஸுஶ்ரூஷா யத்3யஸ்தி சரிதம் தப: ||

யதி3 வாஸ்த்யேகபத்னீத்வம் ஸீதோ ப4வ ஹனூமத: |

என்று வேண்டிகொள்கிறாள். அப்பொழுது ஹனுமாரின் வாலில், வைத்த நெருப்பு அவருக்கு குளிர்ச்சியாக இருக்கிறது,

"என்னடா இது, நெருப்பு வைத்தார்களே" என்று திரும்பி பார்க்கிறார் அவர், "ஆமாம், நெருப்பு இருக்கிறது அனால் எனக்கு சுடவில்லை!, இது அம்பாளின் அனுக்ரஹம்" என்று நினைத்து, என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார். "நான் என்ன செய்ய போகிறேன் என்றால், இந்த இலங்கையை எரிக்க போகிறேன், இந்த இராக்ஷஸர்கள் நினைத்து நினைத்து பார்க்கிறது போல ஒரு பயங்கரமான காரியம் செய்தால் தான், இவர்களுக்கு, ஶ்ரீ ராமரிடம் ஒரு

நடுக்கம் ஏற்படும்” என்று சொல்லிக் கொண்டு, பளிச்சென்று கிளம்பி, அவர்கள் கைகளை கால்களை கட்டிபோட்டு உள்ளார்கள், அவரும் விளையாட்டாகத்தான் கட்டுண்டு இருக்கிறார். அந்த கட்டுக்களை எல்லாம் உடைத்து எறிந்துவிட்டு, அப்படியே ஆகாசத்தில் தாவி மிகப்பெரிய உருவம் எடுத்துக்கொண்டு, வாலில் உள்ள நெருப்பினால் இலங்கையில் உள்ள எல்லா க்ரஹங்களுக்கும் நெருப்பு வைக்கிறார். அப்படி எல்லா க்ரஹங்களுக்கும் நெருப்பு வைத்துகொண்டு வரும்பொழுது, விபீஷணருடைய க்ரஹத்திற்கு மட்டும் நெருப்பு வைக்கவில்லை..

वर्जयित्वा महातेजा विभीषणगृहं प्रति।

क्रममाणः क्रमेणैव ददाह हरिपुंगवः।।

வர்ஜயித்வா மஹாதேஜா விபீ4ஷண க்3ருஹம் ப்ரதி |

க்ரமமாண; க்ரமேணைவ த3தா3ஹ ஹரிபுங்க3வ: ||

எல்லா வீட்டையும் எரித்தார் வரிசையாக, விபீஷணரின் வீட்டினை மட்டும் எரிக்காமல் விட்டார் என்று ஒரு ஸ்லோகம், இந்த இடத்தில ஸ்வாமிகள் சொல்வார், தப்புகள் செய்யும் போது ஜனங்கள், பாபம் செய்யும்போது, “எல்லாரும் இந்த காலத்தில் அப்படித் தான் இருக்கிறார்கள், நாம் மட்டும் என்ன, பரவாயில்லை” என்று சொல்கிறார்கள், ஆனா கஷ்டம் வரும்போது மட்டும் “ஐயோ! எனக்கு ஏன் இந்த கஷ்டம் வருகிறது?” என்றும் சொல்கிறார்கள். நாம் தப்பு செய்யாமல் இருந்தால், ஹனுமார் விபீஷண க்ருஹத்தை நெருப்பிலிருந்து காத்த மாதிரி, பகவான் நம்மை மட்டும் காப்பாத்துவார்.

அப்புறம், இலங்கையே பற்றி எரிகிறது, அப்பொழுது, அந்த இராக்ஷஸர்கள் எல்லாம். இவரை கட்டி இழுத்து வரும்பொழுது . இராக்ஷஸிகள் எல்லாம் மிக சந்தோஷப்பட்டு கும்மாளம் அடித்தார்கள், இராக்ஷஸர்கள் எல்லாம் அவரை போட்டு அடித்து, திருடன், ஒற்றன், சாரன் அப்படி என்று எல்லாம் கூறி அடித்துக் கொண்டு இருந்தார்கள். அனால், அப்பொழுது ஹனுமார் ஸ்ரீராமருக்காக அதனை எல்லாம் பொறுத்துக் கொண்டார். அனால் இப்பொழுது, வீடெல்லாம் எரியும்பொழுது, “ஐயையோ என் வீடு எரிகிறதே,

சொத்தெல்லாம் போயிற்றே” என்று அழுகிறார்கள் அவர்கள் எல்லாம். அப்பொழுது அந்த ராக்ஷசர்கள் சொல்வதாக சில ஸ்லோகங்கள் வருகிறது

वज्री महेन्द्रस्त्रिदशेश्वरो वा साक्षाद्यमो वा वरुणोऽनिलो वा ।

रुद्रोऽग्निरर्को धनदश्च सोमो न वानरोऽयं स्वयमेव कालः।।

किं ब्रह्मणः सर्वपितामहस्य सर्वस्य धातुश्चतुराननस्य।

इहागतो वानररूपधारी रक्षोपसंहारकरः प्रकोपः।।

किं वैष्णवं वा कपिरूपमेत्य रक्षोविनाशाय परं सुतेजः।

अनन्तमव्यक्तमचिन्त्यमेकं स्वमायया सांप्रतमागतं वा।।

வஜ்ரீ மஹேந்த்3ரஸ்த்ரிதஸேஸ்வரோ வா

ஸாக்ஷாத்யமோ வா வருணோ (அ)னிலோ வா |

ருத்3ரோ(அ)க்3னிரர்கோ த4னத3ஸ்ச சோமோ

ந வானரோ(அ)யம் ஸ்வயமேவ கால: ||

கிம் ப்3ரஹ்மண: ஸர்வபிதாமஹஸ்ய

ஸர்வஸ்ய தா4துஸ்சதுராननஸ்ய |

இஹாக3தோ வானரரூபதா4ரீ

ரக்ஷோபஸம்ஹாரகர: ப்ரகோப: ||

கிம் வைஷ்ணவம் வா கபிரூபமேத்ய

ரக்ஷோ வினாஸாய பரம் சுதேஜ: |

அனந்தமவ்யக்தமசிந்த்யமேகம்

ஸ்வமாயயா ஸாம்ப்ரதமாக3தம் வா ||

என்று சொல்லி – வந்திருக்கிற இவர், வஜ்ராயுதம் வைத்துக் கொண்டுள்ள இந்திரனா, சாக்ஷாத் பரமேஸ்வரனா, இல்லை, எமனா, வருணனா, அக்னியா , காலனா, குபேரனா, இல்லை இது வானரமே தானா, இல்லை, இது பிரம்மாவா, இராக்ஷஸர்கள் மேலுள்ள கோபத்தினால் முன்பு ஸ்ருஷ்டி செய்தவர், இப்பொழுது சம்ஹாரம் செய்ய வந்துவிட்டாரா, இல்லை, இது விஷ்ணு

பகவானா, தன்னுடைய மாயையினால், இது போல நம்மை எல்லாம் தண்டிக்கிறாரா, அப்படி என்று இந்த இராக்ஷஸர்கள் எல்லாம் புலம்புகிறார்கள்.

இந்த இடத்தில் ஸ்வாமிகள் சொல்வார், ஹனுமார், எல்லா தெய்வங்களுடைய ஸ்வரூபம் என்பதனை, காவியத்தில் நேராக சொல்லாமல், இந்த மாதிரி சொல்லி இருக்கிறது என்று சொல்வார். ஹனுமாரை ஸ்ரீ ருத்ராம்சம் என்று சொல்வார்கள், இந்த இடத்திலேயே கூட, "ருத்ரேண திரிபுரம் யதா:" ஸ்ரீ ருத்ரபகவான் எப்படி திரிபுரத்தினை எரித்தாரோ, அது போல இலங்கையை ஹனுமார் எரித்தார் என்று வால்மீகி சொல்கிறார். அது போல, எல்லா தெய்வங்களுடைய அம்சம் தான் ஹனுமார், அவரை பிரார்த்தனை செய்தால் நம்முடைய வினைகள் என்ற இலங்கையை எரித்து நமக்கு எல்லா க்ஷேமங்களையும் குடுப்பார்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

சம்பாதி கழுகுக்கு
நிஷாகர மகரிஷி செய்த அனுக்ரஹம்

सर्वथा क्रियतां यत्न स्सीतामधिगमिष्यथ ।पक्षलाभो ममायं वस्सिद्धिप्रत्ययकारकः।।

ஸர்வதா க்ரியதாம் யத்ன: ஸீதாம் அதிகமிஷ்யத |

பக்ஷலாபோ மமாயம் வ: சித்தி ப்ரத்யய காரக: ||

அப்டீன்னு சம்பாதி கழுகு வானரா கிட்ட சொல்றது. "எனக்கு, நிஷாகர மஹரிஷியினுடைய அனுக்ரஹத்துனால, இறக்கைகள் திரும்பவும் வந்துடுத்து, இளமையில் எனக்கு, எவ்வளவு, சக்தியும் வீரியமும், இருந்ததோ, அதெல்லாம், எனக்கு, இப்போ, திரும்ப கிடைச்சிருக்கு. இதுவே உங்களுடைய காரியமும் நடக்கும். நீங்கள் ஸீதா தேவி எங்க இருக்கான்னு தெரிந்து கொள்வீர்கள்., அப்டீங்கிறதுக்கு ஒரு அடையாளம். அதனால முயற்சி பண்ணுங்கோ. கட்டாயம் சீதையை காண்பீர்கள்", அப்டீன்னு அந்த சம்பாதி கழுகு, சொல்லிட்டு ஆகாசத்துல கிளம்பி போறது.

இந்த நிஷாகர மஹரிஷிங்கிறது, யாரு, அது என்ன வ்ருத்தாந்தம்னு, கேட்டா,

இந்த சம்பாதி கழுகு, மலை மேல உட்கார்ந்துண்டு இருக்கு. வானரா எல்லாம் பேசிண்டு இருக்கா. அவாள்ளாம், “நாம சீதையை இன்னும் எங்கேன்னு கண்டுபிடிக்கல, சுக்ரீவன் இன்னும் ஒரு மாசத்துக்குள்ள, திரும்பி வரணும், வந்து, ஸீதா தேவியை, பார்த்தாச்சா, இல்லையான்னு சொல்லணும், அப்படீன்னு கெடு வெச்சிருக்கான். இப்போ. ஒரு மாசத்துக்கு மேல ஆயிடுத்து. மூணு நாலு மாசம் ஆயிடுத்து. இப்போ, நாம திரும்பி போனோம்னா, கடுமையா தண்டிப்பான்” அப்டீன்னு பயந்துண்டு, அங்கதன், “நான் பிராயோபவேசம் பண்ணப் போறேன்” அப்டீன்னு சொல்லி, அந்த கடற்கரையில, வடக்கு நோக்கி உட்கார்ந்துடறான், அப்ப, ஜாம்பவான், ஹனுமான், எல்லாம், சொல்றா, “இல்ல, நீ திரும்ப வா, சுக்ரீவன் ஒண்ணும் சொல்ல மாட்டான், நீ கவலைப் படாதே”, அப்டீன்னு, சொன்னாலும் அங்கதனுக்கு நம்பிக்கை இல்லை. “என்னை ராமர் தான், யுவராஜாவா பட்டாபிஷேகம் பண்ணி வெச்சார். சுக்ரீவன் ஒண்ணும் பண்ணல” என்கிறான். என்ன இருந்தாலும் அவனுக்கு, அந்த ராம பக்தி இருக்கு.

அப்படி பேசிண்டு இருக்கா. நான் உயிரை விடப் போறேன். அப்படீன்னு சொல்றான். அப்போ “என்ன இருந்தாலும், ராமர் ஒரு மஹாபுருஷர், அவருக்காக, நாம எல்லாரும் முயற்சி,பண்றோம், ஜடாயு கழுகு, உயிரையே கொடுத்துது”, அப்படீன்னு, சொன்ன போது, இந்த சம்பாதி கழுகு, கேட்டுண்டு இருக்கு. “ஆஹா! ஜடாயுவா, உங்களுக்கு எப்படி ஜடாயுவைத் தெரியும், ஜடாயு, உயிரை விட்டுடுத்தா, என்னாச்சு, எனக்கு விவரம் சொல்லுங்களேன்”, அப்படீன்னு, கேட்கறது.

அங்கதன் சொல்றான், “தசரத மஹாராஜாவோட குமாரர், ராமர். தன் மனைவி, சீதையோடும், தம்பி லக்ஷ்மணரோடவும், அப்பாக்கு கொடுத்த வாக்கை காப்பாத்தறத்துக்காக, காட்டுக்கு வந்தார். வந்த இடத்துல, அவருடைய மனைவி, ஸீதாதேவியை இராவணன் என்ற ஒரு ராக்ஷசன் தூக்கிண்டு போயிட்டான். அவன் கொண்டு போகும்போது, ஜடாயு அவனை, தடுத்து, அவனோடு கடுமையா யுத்தம், பண்ணித்து.

இந்த ஜடாயு ராவணனோட பண்ண யுத்தம், ரெண்டு சர்க்கம், ரொம்ப நன்னா இருக்கும், அந்த வர்ணனை. அந்த ராவணனோட தேரை உடைச்சு, தேரோட்டியை வதம் பண்ணி, ராவணனை தவிக்க விடறார், அந்த ஜடாயு. அத்தனை வயசு, தசரதருக்கு, சமமான வயசு, அறுபதினாயிரம் வயசு, ஜடாயுவுக்கு. ஆனாலும்,அந்த ராமருக்காக, சீதை மேல இருக்கிற அன்பினால, அவர் சொல்லிப் பார்க்கறார். ராவணன்கிட்ட, “நீ பண்றது, தப்பு. மடியில நெருப்பை கட்டிண்டு போக முடியாது. நம்மால ஜரிக்க முடியாத உணவை சாப்பிட முடியாது. நீ, இந்த கார்யத்துனால, உன்னுடைய குலத்துக்கே, ஆபத்தை வரவழைச்சுக்கற. பண்ணாதே”ன்னு சொல்றார். அவன், “நீ வழியை விடு. இல்லேன்னா, உன்னை கொன்னுடுவேன்”னு, சொல்றான். “நான் உயிரோடு இருக்கும் போது, நீ சீதையை தூக்கிண்டு போக முடியாது, என்னோட யுத்தம் பண்ணு”, அப்டீன்னு சொல்லி, ராவணனை ஜடாயு, யுத்தத்துக்குக் கூப்பிடறார். ஸீதாதேவி கூட சொல்றா, “அவன் கையில ஆயுதம் வெச்சுண்டு இருக்கான், நீங்க ரொம்ப வயசானவாளா இருக்கேள், போயி ராம லக்ஷ்மணாள்கிட்ட சொல்லுங்கோ” அப்டீன்னு சொல்றா சீதை. ஆனா ஜடாயு சொல்றார், “என் கண் முன்னாடி, அவன் உன்னை தூக்கிண்டு போறதை, பார்க்க மாட்டேன், அதனால யுத்தம் பண்றேன்” அப்டீன்னு, அவர், அந்த ராவணனோட யுத்தம் பண்றார். இராவணன், தன்னோட வில்லையும் அம்பையும் கொண்டு, ஜடாயுவை சுத்தி, ஒரு கூண்டாட்டம் பண்ணிடறான். ஆனா, ஜடாயு, அதை தகர்த்துண்டு வந்து, திரும்பவும் யுத்தம் பண்றார். இந்த இராவணனோட பத்துக் கைகளை, தன்னோட அலகாலக் குத்தித் தூக்கிப் போடறார். பிச்சு எடுத்துடறார். ஆனா, திரும்பவும், அவனுக்குக் கைகள் முளைக்கறது. அவனுக்கு அந்த மாதிரி வரங்கள் இருக்கறதுனால, இப்படி மேலும், மேலும், யுத்தம் பண்ணும்போது, இவர், வயசானவர், தளர்ந்து, போயிடறார். இவருடைய இறக்கைகளை வெட்டிப் போட்டுட்டு, இராவணன் போயிடறான். சீதை “ஆ, எனக்காக, நீங்க இந்த யுத்தத்துல, உயிரை கொடுத்தேளே” புலம்பி அழறா. அவன் அவளை தூக்கிண்டு போயிடறான்.

இதெல்லாம், அங்கதன், சம்பாதி கிட்ட சொல்றான். அப்ப சம்பாதி, சொல்றது, "இந்த மாதிரி, என்னுடைய தம்பியை, இந்த ராக்ஷசன் வதம் பண்ணினான்னு கேட்டுக் கூட, என்னால பழி வாங்க ஒண்ணும் பண்ண முடியலை. எனக்கு இறக்கைகளே இல்லை. நான் என்ன பண்ணுவேன், என்னை இந்த கடற்கரைக்கு, தூக்கிண்டு போங்கோ, நான் என் தம்பிக்கு, தர்ப்பணம், பண்றேன்" அப்டீன்னு சொல்றார். சரீன்னு, இவாள்ளாம், அந்த பட்சியை, கொண்டு வரா. அந்த கடல் ஜலத்தைக் கொண்டு,சம்பாதி, ஜடாயுவுக்காக, தர்ப்பணம் பண்றார். அப்புறம் "எனக்கு, பக்ஷங்கள் இல்லை. ஆனா என் வாக்கை கொண்டு, நான், உங்களுக்கு ஸஹாயம் பண்றேன்", அப்டீன்னு சொல்லிட்டு, அது, இப்படி சுத்திப் பாக்கறது. இந்த கடலுக்குள்ள, நூறு யோஜனை, போனா, இலங்கைன்னு, ஒரு தீவு இருக்கு, அந்த இலங்கையில ,ஸீதாதேவி இருக்கா, எங்களுகெல்லாம், தீர்க்கமான பார்வை உண்டு, அதனால, அந்த இராவணன் ஸீதாதேவியை, இலங்கையில சிறை வெச்சிருக்கான், நீங்க போனா, அங்க அவளைப் பார்த்துடலாம்", அப்டீன்னு சம்பாதி சொல்றார்.

அப்ப, ஜாம்பவான், ரொம்ப புத்திமான். வயசானவர் அனுபவஸ்தர் ங்கிறதுனால அவர் கேட்கறார். "நாங்க தேடி வந்த சீதையைதான், நீ இலங்கையில பார்க்கறேன்னு, எப்படி சொல்றே"னு கேட்கறார். அப்போ "நான் என்னோட வ்ருத்தாந்தத்தை முழுக்க சொல்றேன் கேளுங்கோ", அப்டீன்னு சொல்லி,

"நானும் ஜடாயுவும், ரொம்ப பலசாலிகளா இருந்தோம். எங்க ரெண்டு பேருக்குள்ள, யார் ரொம்ப பலசாலி, அப்டீன்னு, ஒரு வாட்டி ஒரு போட்டி வந்தது". போட்டி என்றாலே, அதுல கஷ்டங்கள் இருக்கு, அப்டீங்கிறதுக்கு இது ஒரு கதை. "நாங்க ரெண்டு பேரும்,மேரு மலையில இருந்து, ரிஷிகள் முன்னாடி, ஒரு பந்தயம் வெச்சுண்டு, "சூரியன் உதிக்கும் போது ஆரம்பிச்சு, சூரியன் மறையற வரைக்கும், யார் ஆகாசத்துல ரொம்ப நேரம், ரொம்ப உயரத்துல பறக்கறாளோ, அவா தான் ரொம்ப பலசாலி", அப்டீன்னு போட்டி வெச்சுண்டு,

நாங்க ரெண்டு பேரும் பறக்க ஆரம்பிச்சோம். கார்த்தால, சூரியன், உதயத்தும்போது கிளம்பினோம்.

ஆகாசத்துல உயர, உயர போகப் போக, பூமியில மலைகள் எல்லாம், சின்ன சக்கரம் மாதிரி தெரிஞ்சுது. சத்தம் எல்லாம் குறைஞ்சு போயிடுத்து. உயரப் போயிண்டே இருக்கும்போது, வெயில் ஜாஸ்தியாகும் போது, ஜடாயு துவண்டு மயங்கி கீழ விழ ஆரம்பிச்சுட்டான். அவனுக்கு ஏதாவது ஆயிடப் போறதேன்னு, நான் என்னுடைய இறக்கைகளால, சூரிய ஒளி, அவன் மேல படாத மாதிரி, நான் அவனை, மறைச்சு, அந்த சூரிய ஒளியில இருந்து, அவனை காப்பாத்தினேன். அவன் ஜனஸ்தானத்துக் கிட்ட, எங்கயோ, விழுந்துட்டான்னு, நினைக்கிறேன். அந்த சூரிய வெப்பதுனால, என்னோட இறக்கைகள் எரிஞ்சு போயிடுது. நான் இங்க இந்த மகேந்திர மலை பக்கத்துல,விழுந்தேன். ரொம்ப துக்கப் பட்டுண்டு, இறக்கைகள், இல்லாம, என்ன பண்றதுன்னு நினைக்கும் போது,

நிஷாகர மஹரிஷின்னு ஒருத்தர், எங்களுக்குத் தெரியும். அந்த மஹரிஷி, எல்லா உயிர்களிடத்தும், அன்பு உடையவர். ஸர்வபூத ஹிதே ரத: அவர் கார்த்தால, ஸ்நானம் பண்ண போனா, எல்லா பிராணிகளும், எல்லா பக்ஷிகளும், அவரோட போகும். “உங்க கார்யத்தை பாருங்கோ” , அப்டீன்னு சொன்ன பின்ன, நாங்கல்லாம், எங்க கார்யத்தைப் பாப்போம். அப்படி அவர், எல்லா உயிர்களிடத்தும், அன்பபோடு இருந்ததுனால, அவர்கிட்ட, எல்லாருமே பிரியமா இருந்தோம். அந்த நிஷாகர மகரிஷியை நான் பார்த்தேன். அவர் என்னை பார்த்த உடனே, “நீ சம்பாதி தானே, நீயும், ஜடாயுவுமா, என்னை பார்க்க வருவேளே, என்ன ஆச்சு, உனக்கு? ஏதாவது, வியாதியா? யுத்தத்துல, உன்னோட, இறக்கைகள் போயிடுத்தா? என்னாச்சு, ஏன் இறக்கைகள், பொசுங்கிடுத்து?” ன்னு, கேட்டார். இந்த மாதிரி, நாங்கள் முட்டாள் தனமா பந்தயம் வெச்சுண்டு, என்னுடைய இறக்கைகளை, இழந்துட்டேன், அப்படீன்னு சொன்ன போது, அந்த நிஷாகர மஹரிஷி, சொன்னார். “நான் இப்போ, உனக்கு, இறக்கைகளை கொடுப்பேன், ஆனா, உன்னால ஒரு பெரிய கார்யம் நடக்கப் போறது. நீ இந்த மகேந்திர மலையிலேயே, இருந்துண்டு, இரு. இங்க,

ரொம்ப நாளைக்கு அப்புறம், வானரா கொஞ்சம் பேர் வருவா. அவா ஸீதாதேவி அப்டீன்னு ஒரு பெண்ணை தேடிண்டு வருவா. சாக்ஷாத் விஷ்ணு பகவான், பூமியில, ராமர்னு, அவதாரம், பண்ணப் போறார். அவரோட, மனைவி, ஸீதாதேவியை, வானரர்கள், தேடிண்டு, வருவா. அவாளுக்கு, நீ சீதை எங்கேயிருக்கான்னு, பார்த்து, சொன்னேயானா, உனக்கு, உன்னோட இறக்கைகள், முளைக்கும்". அப்படீன்னு, சொன்னார்.

நான், அதனால ரொம்ப நாளா, காத்துண்டு இருக்கேன், அப்பப்போ, என்னடா இதுன்னு, வாழ்க்கையே வெறுத்து, உயிரை விடலாம்னு, நினைப்பேன். இருந்தாலும், அவர், சொன்ன, வார்த்தைகளை, பற்றுகோடா வெச்சுண்டு, உயிரை விடாம, இருந்துண்டு இருக்கேன், நான். என்னுடைய பிள்ளை, சுபார்ஷ்வன், அப்டீன்னு, ஒரு கழுகு. அவன்தான், எனக்கு, சாப்பாடு போட்டு, என்னை காப்பாத்திண்டு இருக்கான். நான், ஒருநாள், ஆகாசத்துல ஒரு பத்து தலை ராக்ஷசன் ஒரு பெண்ணை தூக்கிண்டு போறதை பார்த்தேன். அவ "ராமா ராமா"னு கத்திண்டு இருந்தா.

அன்னிக்கு சாப்பாட்டுக்கு காத்துண்டு இருக்கும் போது, என் பையன், சாப்பாடு கொண்டு வர தாமதம் ஆயிடுத்து. கந்தர்வர்களுக்கு, காமம் ஜாஸ்தி. பாம்புகளுக்கு, கோபம் ஜாஸ்தி. எங்களுக்குப் பசி ஜாஸ்தி. அதனால ரொம்ப நேரம் பசியாயிட்டு, இவன் தாமதமாக வந்த உடனே, "என்னடா இப்படி லேட் பண்ணிணே" னு கேட்டேன். அவன் சொன்னான், "இன்னிக்கு நான் சாப்பாடு எடுத்துண்டு, வந்துண்டு இருந்தேன்பா, அப்ப, ஒரு பத்து தலை ராக்ஷசன்,ஒரு பெண்ணை தூக்கிண்டு, போனான். நான் போயி அவனை தடுத்தேன், அப்போ அவன், எனக்கு தயவு பண்ணு, வழி விட்டுடுன்னு, கேட்டான். அப்படி, கேட்கும்போது, என்ன பண்றதுன்னு நான் வழிவிட்டுட்டேன். அப்ப ரிஷிகள் எல்லாம் என்கிட்டே வந்து இவன் யார் தெரியுமா, தசகண்டனான ராவணன். அவனை போயி நீ எதிர்த்தியே, நல்ல காலம். நீ உயிரோட மிஞ்சின., அப்டீன்னு சொன்னா. அப்போ அந்த பெண், நான் பார்த்தவளைதான், அவனும் பார்த்துருக்கான். அவள் பேர் சீதை., அப்டீன்னு, இராவணன் ஸீதா தேவியை

தூக்கிண்டு போயிண்டு இருக்கான், அப்டீன்னு ரிஷிகளெல்லாம் சொன்னா. அந்த பெண் தான் சீதை. ராமா ராமான்னு கத்தினா. அந்த பெண்ணைத் தான் இப்ப நான் அங்க பார்க்கறேன், இலங்கையில பாக்கறேன்"னு அவர் சொல்றார். அப்படி சொல்லும் போது அவருக்கு இறக்கைகள் முளைச்சுடறது.

அந்த நிஷாகர மஹரிஷி, சொல்றார். "அந்த ஸீதா தேவியை இராவணன், இலங்கையில சிறை வெச்சிருப்பான். அவ, இராவணன் கொடுக்கிற எதையும் ஏறிட்டும் பார்க்க மாட்டா. அவளோட உயிர் தரிச்சு இருக்கணும்கிறதுக்காக, இந்திரன், அமிர்த மயமான உணவை, அவளுக்கு சமர்ப்பிப்பான். அவ, அதுல இருந்து, இரண்டு வாய் எடுத்து, ராமனுக்கும், லக்ஷ்மணனுக்குமா எடுத்து வெச்சு, நைவேத்யம், பண்ணிட்டு,பாக்கியை, கொஞ்சம் சாப்பிடுவா.அந்த ராமனையும் லக்ஷ்மணனையும், ஸீதா தேவியையும் நானும் தரிசனம் பண்ண ஆசைப் படறேன்"னு, அப்டீன்னு, அந்த நிஷாகர மஹரிஷி, சொல்றார். "ஆனா, எனக்கு, ரொம்ப வயசாயிடுத்து, உடம்பு தளர்ந்து போயிடுத்து, இன்னும், அவ்ளோ காலம் காத்துண்டு இருக்க முடியாது. நீ இங்க இருந்து, வானரர்களுக்கு உதவி பண்ணினேயானால் மூவுலகங்களுக்கும் அது க்ஷேமமா முடியும்". அப்டீன்னு நிஷாகர மஹரிஷி சொல்றார்.

சம்பாதி சீதை எங்கே இருக்கானு சொல்றார். அதே மாதிரி, அவா, போயி சீதையை கண்டு பிடிக்கறா. அதைக்கொண்டு ராமர் ராவணனை வதம் பண்றார், இதுதான் உலகத்துக்கு க்ஷேமமான அந்த கார்யம்.

ஸ்வாமிகள், என்னுடைய குருநாதர், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள், "என்னால, வேற ஒண்ணும், பண்ண முடியலை. என் வாக்கால, ஏதாவது முடிஞ்ச உபகாரம் பண்றேன்னு, அந்த சம்பாதி கழுகு சொல்றது". ஸ்வாமிகளுக்கும் உடம்பு ரொம்ப முடியாம ஸ்ரமமா இருந்தது. "அதனால நான் வேற ஏதும் ராம கார்யம் பண்ண முடியல, அதனால என் வாக்கால, ராமனுடைய கதையை, சொல்லிண்டு இருக்கேன், ஒரு உத்சவத்துல போயி சுவாமியை போயி தூக்கறதோ, அதெல்லாம் என்னால முடியலை. என்னால முடிஞ்சுது, என் வாக்கால, ராமனுடைய கதையை, படிக்கறேன், சொல்றேன்", அப்டீன்னு சொல்வார். அது மாதிரி இந்த உலகத்துல யாருமே வந்து, ஏதாவது,

உடல் குறைபாடோ, ஏதாவது குறைகள் இருந்தாலும், அவா வந்த இந்த உலகத்துல useless, waste அப்டீன்னு ஸ்வாமிகள் சொல்ல மாட்டார். எல்லாருக்குமே ஒரு purpose இருக்கு. எதையுமே, அவர் ஒரு பொருளை கூட இதெல்லாம் தூக்கி போட்டு, useless வேண்டாம்னு அப்டீன்னு சொல்லவே மாட்டார். அப்படி இந்த உலகத்துல எல்லாருக்கும் பகவான், ஒரு காரணமா, அவாளை படைச்சிருக்கார்.

ஆனா நிறைய பேருக்கு, ஐயோ, பிரம்மா, என்னை ஏன் தான் படைச்சாரோ, அப்டீன்னு, துக்கம். நாராயணீயத்துல பட்டத்ரி சொல்றார் "பகவானோட பஜனம் பண்ணாத வரைக்கும் தான் அப்படி இருக்கும். பகவானுடைய பஜனம் பண்ணத் தெரிஞ்சுண்டுட்டான்னா, அவா வாழ்க்கையில் அந்த பஜன இன்பத்தை அனுபவிப்பா. உலகத்துல மூணு விதமான இன்பங்கள். உலக இன்பங்கள், பஜனத்துனால கிடைக்கக் கூடிய இன்பம், அப்புறம் மோக்ஷானந்தம், அப்டீங்கிறது, அந்த மோக்ஷானந்தம்ங்கிறது, ஒரு நிர்குணமான ஒரு ஆனந்தம். இந்த சிற்றின்பம்ங்கிறது, கொஞ்ச நாள் புலன்களை கொண்டு அனுபவிக்கிறது ஒரு சிற்றின்பம். அது அனுபவிச்சு தீரப் போறது இல்லை. இந்த பஜனம் பண்ணி, பகவானோட கதைகளை பேசறதோ, நாமத்தை ஜபிக்கறதோ, அது, நிறைய, மகான்கள் அதை வந்து, அந்த நிர்குனமான மோக்ஷானந்தத்ததுக்கும் மேலானதாக சொல்றா. இந்த உலகத்துல, நாம கடைசி நாள் வரைக்கும், நாம இங்க இருக்கிற வரைக்கும், இந்த பஜனம் பண்ணனும். அப்டீன்னு மஹாபெரியவா, கூட ஸ்வாமிகள், இந்த கருத்தை சொன்ன போது, பெரியவா, பாகவதத்துல, இது அடிக்கடி வரும், இந்த பகவத் பஜனம்கிறது, மோக்ஷதுக்கும் மேலான ஆனந்தம், அப்டீன்னு.

சுகர் கூட, அவர் பிறவியிலேயே ஞானி, அவர். இருந்தாலும், வந்து பொறந்துருக்கோம், ஏதோ, ப்ராரப்தம், என்ன பண்ணலாம்னு யோசிச்சாராம். ஸாதுக்களோட, சங்கம் இருந்தா, இந்த காலத்தை கழிச்சுடலாம். ஸாதுக்கள், சங்கம் எப்படி கிடைக்கும்? நம்ம பகவானை பேசுவோம். அப்ப ஸாதுக்கள், நம்மகிட்ட வருவா, அப்டீன்னு கங்கை கரைக்கு, போனார். அங்க ரிஷிகள் எல்லாம் இருந்தா. பரீக்ஷித் வந்தான். அவனுக்கு பாகவதத்தை உபதேசம் பண்ணினார். அப்டீன்னு சொல்வா.

அந்த மாதிரி, இந்த பகவத் பஜனம்ங்கிறது, மோக்ஷானந்தந்தத்திற்கும், மேல அப்டீன்னு ஸ்வாமிகள் சொன்ன போது, மஹா பெரியவா, ஆமா, எவ்வளோ பெரிய ஞானியா இருந்தாலும், கிருஷ்ணாய நமஹ, கமலநாதாய நமஹ, வாசுதேவாய நமஹ, அப்டீன்னு அந்த புஷ்பத்தை எடுத்து அர்ச்சனை பண்ணும் போது, அதற்கும் மேலான சந்தோஷத்தை, அனுபவிக்கறா, இல்லையா! அப்டீன்னு கேட்டாராம். அப்படி மகான்கள், அந்த கருத்தை, approve பண்ணியிருக்கா.

அப்படி அந்த நிஷாகர மஹரிஷி, அப்படீங்கிற வார்த்தை, நிஷாகரஹ, அப்படீன்னு சந்திரன்னு அர்த்தம், அதனால அந்த, நிஷாகர மஹரிஷின்னு படிக்கும் போது, ஸ்வாமிகள் சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள், அப்டீன்னு மஹாபெரியவாளை நினைப்பா. அப்படி "மஹாபெரியவா, அனுக்ரஹத்துனால, எனக்கு, எவ்வளோ கஷ்டம் இருந்தாலும், பகவானை பேசறதுக்கு, ஒரு வழி கொடுத்துருக்கார். அதை கொண்டு நான், எல்லா கஷ்டத்தையும் தாண்டிடுவேன்", அப்படீன்னு, தன்னை அவ்வளோ எளிமையா ஸ்வாமிகள், நினைச்சுப்பார். தன்னை "ஒரு பெரிய உபன்யாசகர், என்னை மாதிரி ராமாயணம் சொல்ல ஆளில்லை" அப்டீனெல்லாம், நினைச்சுக்கவே மாட்டார். "இது ஒரு பாக்கியம், கிடைச்சுதே, இந்த உடம்பெலாம் இருக்கும் போது, பகவானை பேசறோம்", அப்டீன்னு சந்தோஷமா பேசி, அதுக்கு, ஸ்வாமிகள், மஹாபெரியவா பண்ணிண அனுக்ரஹம் அப்படீன்னு, இந்தக் காட்சி வரும்போது, நிஷாகர மஹரிஷிங்கிறது, சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள்,னு, சொல்லி, மஹாபெரியவாளோட அனுக்ரஹம், அப்டீன்னு நினைப்பார்.

அதனால இந்த உலகத்துல நாம யாருமே குறையே பட வேண்டாம். எல்லாருக்கும் ஏதாவது, குறைகள் இருக்கு, மனசுலையோ, உடம்புலையோ. நம்ம எல்லாரையும், ஒரு காரணமா பகவான் படைச்சிருக்கார். அதை உணருவதற்கு நாம பகவத் பஜனம் பண்ணிணா போறும். பகவான் புரிய வைப்பார்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

<u>பூயோ விநயம் ஆஸ்தாய பவ நித்யம் ஜிதேந்த்ரிய:</u>



இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகம், அயோத்யா காண்டத்துல, மூணாவது சர்க்கத்துல, தசரத மஹாராஜா, ராமர் கிட்ட சொல்றது

कामतस्त्वं प्रकृत्यैव विनीतो गुणवानसि।।
गुणवत्यपि तु स्नेहात्पुत्र वक्ष्यामि ते हितम्।
भूयो विनयमास्थाय भव नित्यं जितेन्द्रियः।।

காமத: த்வம் ப்ரக்ருத்யைவ வினீத: குணவானஸி |

குணவத்யபிது ஸ்னேஹாத் புத்ர வக்ஷ்யாமி தே ஹிதம் ||

பூயோ விநயம் ஆஸ்தாய பவ நித்யம் ஜிதேந்த்ரிய: |

ஹே, ராமா, காமத: த்வம் ப்ரக்ருத்யைவ – நீ இயல்பிலேயே ரொம்ப வினீத: – humble ஆ பணிவோட இருக்கே. குணவானஸி – எல்லா குணங்களும் உன்கிட்ட இருக்கு. குணவத்யபிது ஸ்னேஹாத் புத்ர வக்ஷ்யாமி தேஹிதம் – உன்கிட்ட எல்லா குணங்களும் இருந்தாலும், எனக்கு உன் மேல இருக்கிற ஸ்நேகத்துனால, உனக்கு ஹிதமான ஒரு விஷயத்தை சொல்றேன். கேட்டுக்கோ, அப்டீங்கறார். நீ இதுக்கு மேல, பதவி வந்த பின், இன்னும்

விநயமா இரு, பூயோ விநயம் ஆஸ்தாய பவ நித்யம் ஜிதேந்த்ரிய: அப்டீன்னு சொல்றார்.

அந்த context என்னன்னா, ராமனுக்கு பட்டாபிஷேகம் பண்ணனும், அப்டீன்னு ராமருடைய குணங்களை எல்லாம், தசரதர் நினைச்சு பார்த்து, இப்பேற்பட்ட, எல்லாரும் விரும்பக்கூடிய என்னுடைய, ராமனை, ராஜாவா, பட்டாபிஷேகம், பண்ணினா, நான் உயிரோட இருக்கும்போதே அவனை ராஜாவா பார்த்தா, இன்னும் எவ்வளவு எனக்கு, சந்தோஷமா இருக்கும், அப்டீன்னு, நினைக்கறார். அவர், சபையை கூட்டி, எல்லா சிற்றசர்களை எல்லாம் வர சொல்லி, "என் பிள்ளை ராமனை ராஜாவா ஆக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்கு ரொம்ப உடம்பு, தளர்ந்துடுத்து, நான் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு நினைக்கறேன், retire ஆகப் போறேன். இந்த எண்ணம், எனக்கு ரெஸ்ட் வேணும்னு அப்டீன்னு, ஒரு motive எனக்கு இருக்கு. எனக்கு சுயநலமான ஒரு motive இருக்கறதுனால, நான் இப்படி முடிவு பண்ணி இருக்கேன். இது கரெக்ட் ஆ தப்பான்னு நீங்க சொல்லுங்கோ" அப்டீன்னு சபையில கேட்கறார். எல்லாரும் சேர்ந்து, அந்த மண்டபமே பிளக்கும்படியா, கரகோஷம் பண்ணி, சந்தோஷப்பட்டு "ஆஹாஹா, அவசியம் பண்ணுங்கோ, ராமரை ராஜாவா, ஆக்குங்கோ. நாங்க எல்லாம் காத்துண்டு இருக்கோம்" அப்டீன்னு, சொல்றா.

உடனே, தசரதருக்கு தெரியும். இவா எல்லாருக்கும், ராமனை ரொம்ப பிடிக்கும்னு, இருந்தாலும், அப்பாக்கு பிள்ளையோட, குணத்தை மத்தவா சொல்லி கேட்டா, அது தனி சந்தோஷம். அதனால, "என்ன, என்னோட ஆட்சியில ஏதாவது, குறையா? ராமனை ராஜாவா ஆக்கட்டுமான்னு கேட்ட உடனே, நீங்க எல்லாம் இவ்வளவு சந்தோஷப்பட்டு, இவ்வளவு என்னை அவசரப் படுத்தறேளே", அப்டீன்னு கேட்கறார். அது வந்து, ராமனை பத்தி இவா புகழ்ந்து பேசட்டுமே, கேட்போமே, அப்டீங்கறதுக்காக சொல்றார்.

உடனே அந்த ஜனங்கள் எல்லாம், "மஹாராஜாவே, உங்ககிட்ட ஒரு தோஷமும் இல்லை. இந்த இக்ஷ்வாகு குலத்துலயே ரொம்ப உத்தமமமான ஒரு பிள்ளையை பெற்றெடுத்து, எங்களுக்கு காண்பிச்சுட்டேள். அது ஒண்ணு தான் தோஷம். இப்பேற்பட்ட ராமனை ராஜாவா அடையணும்னு இந்த பூமியே காத்துண்டு

இருக்கு. நாங்க எல்லாரும் காத்துண்டு இருக்கோம்", அப்டீன்னு சொல்லி. கேளுங்கோ னு சொல்லி ராமனுடைய குணங்கள் எல்லாத்தையும் அவா பட்டியல் போடறா. "அவன் போனா ஒரு யுத்தத்துல ஜெயிச்சுட்டு தான் வருவான். வந்தபோது, எங்களை எல்லாம், யானையில இருந்து இறங்கி நலம் விசாரிப்பான். குழந்தைகள் சௌக்யமா, சிஷ்யர்கள் எல்லாம் சௌக்யமா, ஆத்துல, இருக்கிறவா எல்லாம் சௌக்யமா, அப்டீன்னு அந்த orderல கூட ஒரு அழகு. அந்த மாதிரி ஒரு தெளிவு. அவன் பண்ற எல்லா கார்யங்களும் அழகா இருக்கு. நாங்க எல்லாம் கூச்சப் படுவோம்னு, அவனே முதல்ல வந்து எங்கக்கிட்ட பேசுவான். மதுரமான வார்த்தைகளை பேசுவான். எங்களோட கஷ்டத்துலேயும் சந்தோஷத்துலேயும் சொந்த அப்பா மாதிரி பங்கு எடுத்துப்பான். எல்லா கலைகளையும் சிறந்தவனா இருக்கான். அவனுடைய protection ல நாங்க இருந்தோம்னா, எங்களுக்கு எல்லாம் பயமே கிடையாது" அப்படி இன்னும் நிறைய அவனை ரொம்ப ஸ்தோத்திரம் பண்ணி, "நீங்க எங்களுக்கு பண்ற பெரிய உபகாரமா இருக்கும், அந்த ராமரை, பட்டாபிஷேகம் பண்ணுங்கோ" அப்டீன்னு ஜனங்கள் எல்லாம் சொல்றா.

உடனே இந்த தசரத மகா ராஜா, சுமந்திரர்னு ஒரு தேரோட்டி மந்திரி, அவரை கூப்பிட்டு, "நீ போயி ராமரை அழைச்சுண்டு வா, அப்டீங்கறார். அந்த ராமன் அங்கே இருந்து வரான், இவர் இங்கே இருந்து, ராமர், தேர்ல இருந்து இறங்கறதுக்குள்ள, தசரதர், அவர் அறுபதாயிரம் வருஷம், வயசு, அவருக்கு. அவர் இங்கே இருந்து படி இறங்கி ஓடிப் போறார். அவனை பார்த்த உடனே அவனை கட்டி அணைச்சு, பக்கத்துல அமர்த்தி வெச்சுண்டு, "ஹே ராமா, உனக்கு, பட்டாபிஷேகம் பண்ணனும்னு முடிவு பண்ணி இருக்கேன்", அப்டீன்னு சொல்லி, அந்த இடத்துல இந்த வார்த்தைகளை சொல்றார். "இயல்பிலேயே ரொம்ப நல்ல குணங்களும், ரொம்ப பணிவும் இருக்கு உன்கிட்ட. ஆனால் அப்பாங்கிற அளவுல உனக்கு நான் நன்மையை விரும்புவதால், ஒரு வார்த்தையை நான் சொல்றேன், இன்னும் பணிவா இருந்து, இன்னும் ஜனங்களோட அன்பை சம்பாதிசுக்கோ", அப்டீன்னு சொல்றார்.

இந்த, வார்த்தையை கேட்கும்போது, எனக்கு, Paul Brunton பால் ப்ருண்டன் அப்டீங்கற ஒருத்தர் India ல வந்து, யாராவது யோகிகள் இருக்காளா, யாராவது

ஞானிகள் இருக்காளா அப்டீன்னு சொல்லி, சுத்தி அலையறார். அவர், கடைசீல கிளம்பறதுக்கு, டிக்கெட் வாங்கிடறார், இங்க சென்னைக்கு வந்துட்டு, கிளம்பும்போது, வெங்கட்ரமணி ன்னு ஒருத்தர் அவர் கிட்ட, "எங்களுடைய ஆசாரியார், ஒருத்தர் இருக்கார். காஞ்சி சங்கராசாரியார்னு பேரு, அவர் foreigners ஐ பார்க்க மாட்டார், நீங்க வேண்ணா அவரை பார்க்கலாம், ஆனா audience கொடுப்பாரான்னு தெரியலை, வேணும்னா வாங்கோ", அப்டீன்னு சொல்லி கூட்டிண்டு போறார். சரீன்னு சொல்லி இவரும் போறார். மஹாபெரியவாளை போய் பாக்கறார். பெரியவா first time ஒரு foreigner க்கு audience கொடுத்து அவர் கிட்ட பேசறா. Paul Brunton "உலகமெல்லாம் பிசாசு தான் பிடிச்சிருக்கு", அப்போ, அந்த ரெண்டாவது world war முடிஞ்சு கோரமான ஒரு காலம். அப்படி வருத்தமா பேசறார். பெரியவா, "அதெல்லாம் போகட்டும், நீ உன் மனசை சமாதானப் படுத்திக்கோ, உன்னுடைய ஆத்ம சாந்தியை நீ தேடு", அப்டீன்னு சொன்ன உடனே "நீங்கதான் எனக்கு குருவா இருக்கணும், பார்த்ததுலயே உங்களைத் தான் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உங்களையே நான் குருவா ஏத்துக்கறேன்", அப்டீன்ன, உடனே பெரியவா சொல்றா, "நான் மடாதிபதியா இருக்கேன், ஊர் ஊரா போயிண்டு இருப்பேன். உனக்கு நேரம் செலவு பண்றதுக்கு, என்னால முடியும்னு தெரியலை. அதனால நான் ஒருத்தரை சொல்றேன். திருவண்ணாமலைன்னு ஒரு க்ஷேத்ரம் இருக்கு. அங்க ரமண பகவான்னு ஒருத்தர் இருக்கார். மஹரிஷின்னு சொல்லுவா. அவரை நீ போயி பாரு. அவர் உனக்கு குருவா இருப்பார்" அப்டீன்னு சொல்லி சொல்றார். இவர் சரின்னு கேட்டுக்கறார்.

அன்னிக்கு ராத்திரி இவர் தூங்கும் போது, பெரியவா இவர் கனவுல வந்து, தசரதர் ராமருக்கு சொன்ன இதே வார்தைகளை சொல்றார், Be humble and you shall find what you seek அப்டீன்னு ஒரு வார்த்தை சொல்றார். "நீ பணிவா இரு. நீ எதைத் தேடறியோ, அந்த பகவான் உனக்கு கிடைப்பார், ஞானம் கிடைக்கும்"அப்டீங்கற அர்த்தத்துல சொல்றார். அவர் அதை வந்து A search in secret India என்கிற புஸ்தகத்துல எழுதி இருக்கார். "மஹாபெரியவா வந்து ஒரு ஒளி உருவமா வந்து எனக்கு காட்சி கொடுத்தார். எனக்கு வந்து அது கனவு கிடையாது. நேரா நான் அவரை பார்த்தேன். அவர் எனக்கு இந்த மாதிரி

சொன்னார். அதனால எனக்கு அவர்கிட்ட ரொம்ப பக்தி ஏற்பட்டது, அவர் சொன்னதுனால ரமணரை போயி பார்த்தேன்"

ரமணரை பார்த்த உடனே, அவர் நிறைய கேள்விகள் எல்லாம் எழுதிண்டு போறார். அதெல்லாம் ஒண்ணுமே கேட்கலை. ரமணரோட பார்வையிலேயே இவருக்கு, தெளிவு ஏற்படறது. அதற்கு அப்புறம்தான், அவர் நிறைய புஸ்தகங்கள் எழுதி, அப்புறம் forigners எல்லாம் வந்து, ரமணாஸ்ரமம் போயி, அவரை தரிசனம் பண்ணிண்டு இருந்தா. சில பேர் அங்கேயே தங்கி, தரிசனம் பண்ணிண்டு இருந்தா. Chadwick னு ஒருத்தர். அங்கேயே தங்கினார். அந்த மாதிரி ஒண்ணு நடந்தது.

இதை பார்த்துட்டு, ஒரு, நாற்பது வருஷம் கழிச்சு, கிருஷ்ணமூர்த்தி ன்னு, ஒருத்தர், இந்த புஸ்தகத்தை படிச்சுட்டு, பெரியவாகிட்ட, "அன்னிக்கு ராத்திரி உங்களை தர்சனம் பண்ணினேன்னு அவர் எழுதி இருக்கார். உங்களை நேரே பார்த்தேன்னு எழுதி இருக்கார். அந்த மாதிரி எனக்கும் அனுக்ரஹம் பண்ணனும்", அப்டீன்னு உடனே, பெரியவா வந்து, "அவன் என்னையே நினைச்சுண்டு தூங்கி இருக்கான். கனவுல, என்னை பார்த்தான், அதனால நீயும், படுத்துக்கும் போது, ராம, ராம, ராமான்னு சொல்லிண்டு தூங்கு. உனக்கும் நல்ல சொப்பனமா வரும்", அப்டீன்னு பெரியவா, சொல்றா. அது அவரோட humility யை காண்பிக்கறது.

பெரியவளுக்கு அந்த மாதிரி கனவுல தரிசனம் கொடுக்க முடியும். இருந்தாலும் humility, ஏதோ அவனோட நம்பிக்கை. அப்டீங்கிற மாதிரி சொல்றா பெரியவா. அப்படி அந்த humility ல என்ன ஒரு advantage அப்டீனா, பெரிய பெரிய கஷ்டங்களை, எல்லாம் தாங்கிண்டு போகலாம்.

ராமர் தசரதர் சொன்ன இந்த வார்த்தையை கேட்டுட்டு, அவர் "சரிப்பான்"னு சொல்லி, அவர், நமஸ்காரம் பண்ணிட்டு கிளம்பறார். அதனாலதான், அடுத்த நாள் காலம்பர அவரே, கூப்பிட்டு "உனக்கு ராஜ்ஜியம் இல்லே, நீ காட்டுக்கு போ"ன்னு, சொன்னபோது, "ஹா, நான், எவ்வளோ பெரியவன், எனக்கு, எவ்வளோ பேர் supportக்கு இருக்கா. என்ன பண்றேன், பார்" அப்படீன்னு சொல்லலை. சரிப்பா, அப்படீன்னு, "அப்பா வார்த்தையை கேட்கறதுதான்,

எனக்கு, தர்மம்” அப்படீன்னு காட்டுக்கு கிளம்பறார். காட்டுக்குப் போனா, மேலும் மேலும், கஷ்டம். காட்டுல போயி வசிக்கறது, ராஜ்யத்தை, இழந்து, அப்பா, அம்மா அன்பான அப்பாவை, பிரிஞ்சு போயி, காட்டுல இருக்கறது, கஷ்டம். அங்க சீதை காணாம போயிடறா. ஒரு friend ன்னு, அவளுக்கு, கிடைச்ச ஜடாயுன்னு, ஒரு பக்ஷி, கொல்லப் படறது. இப்படி மேலும் மேலும், கஷ்டம் வரும்போது, அதை ராமர், எப்படி தாங்கி மீண்டு வந்தார்னா, அந்த humility தான். நான் ரொம்ப பெரியவன், அப்படீன்னு, நினைச்சாதான், அந்த ego க்கு அடி விழும். அப்படி, இல்லாம humble, ஆயிட்டா, நாம, எல்லா, கஷ்டங்களையும், தாங்க முடியும்.

ராமருக்கு சின்ன வயசுலேர்ந்தே ரிஷிகள் அனுக்ரகம் இருந்த மாதிரி, நமக்கும் நல்ல ஒரு ஸத்குரு, கிடைச்சுட்டார்னா, நம்மளோட ego, ரொம்ப குறைச்சுடும். அந்த ego வை, போக்கறதுதான், ஸத்குரு, பண்ற பெரிய அனுக்ரஹம். நாம ஏதோ ஏதோ பத்தி கர்வப் பட்டுண்டு இருப்போம். ஏதோ, படிச்சிட்டோ, ஏதோ, கேட்டுட்டோ, அதெல்லாம் விட பெரிய விஷயங்கள், இருக்கு, வாழ்கையில,there is a higher purpose அப்டீங்கிறதை, ஒரு realized soul ஆ இருக்கிறவா, நமக்கு சொல்லும் போது, நமக்கு, இந்த நம்முடைய, achievements எல்லாம் பத்தி, நமக்கு ரொம்ப ஒரு கர்வம் வராது. கொஞ்சம் கொஞ்சமா அது போயிடும். அப்புறம்தான், சந்தோஷம்னா, என்னங்கிறது, வாழ்க்கையில, கொஞ்சம் புரியும். அந்த humilityங்கிறது, அந்த spritual path ல ஒரு அத்யாவசிய குணம், அப்படீன்னு, இந்த ஸ்லோகத்தை படிச்ச உடனே தோன்றது.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவன் கதா:

இன்னிக்கு ஸ்லோகம் யுத்த காண்டத்தில பட்டாபிஷேக சர்க்கத்துல வர ஒரு ஸ்லோகம்

ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவன் கதா: |

ராமபூதம் ஜகத் அபூத் ராமே ராஜ்யம் பிரஷாஸதி ||

ராம பட்டாபிஷேகம் முடிஞ்ச பின்ன, ராம ராஜ்யத்தை பத்தி ஒரு பத்து ஸ்லோகங்கள். இந்த ராமாயணத்தை படிக்கறதுனாலயும் சொல்றதுனாலேயும், கேட்கரதுனாலேயும் என்ன புண்யம் அப்படினு பத்து ஸ்லோகங்கள்.

அந்த ராம ராஜ்யம் எப்படியிருந்தது? அங்க திருடர்களே கிடையாது, அப்படினு ராமராஜ்யத்தோட வர்ணனை. எல்லாம் க்ஷேமமாக இருருந்தா, தர்மபரர்களா இருந்தா, எல்லாரும் பேராசைப் படமால் தன்னுடைய தொழிலையே பண்ணிண்டு இருந்தா, எல்லாரும் சந்தோஷமா இருந்தா, பிறர் பொருளுக்கு ஆசைப்படலை. புஷ்பங்களும், பழங்களும் நன்னா கிடைச்சுது. ஸஸ்யங்களும் தானியங்களும் ஸமிருத்தியாக கிடைச்சுது, ஒவ்வொவொருத்தரும் மாடுகளும், யானைகளும் வெச்சிண்டு சௌக்யமாயிருந்தா அப்படினு வரும். ஆரம்பத்துல தசரதர் ராஜ்யத்தை வர்ணிக்கும்போதே, அந்தமாதிரி செழிப்பான அமராவதிக்கு நிகரான அயோத்யா பட்டணம், கோஷல தேசம்னு வரும். அதுல ராம ராஜ்யத்துக்கும் தசரத ராஜ்யத்துக்கும் என்ன வித்யாசம்னா? ராம ராஜ்யத்துல ஜனங்களெல்லாம்

ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவன் கதா: |

ராமபூதம் ஜகத் அபூத் ராமே ராஜ்யம் பிரஷாஸதி ||

ஜனங்களெல்லாம் ராமா ராமான்னு ராமருடைய கதைகளையே பேசிண்டு உலகம் ராம மயமாக ஆனந்த மயமாக ஆகிவிட்டது அப்படின்னு ஒரு ஸ்லோகம் இருக்கு. இதுதான் ராம ராஜ்யத்துக்கும் தசரத ராஜ்யத்துக்கும் உள்ள வித்யாசம், தசரத ராஜ்யத்துல ராம கதையை பேச முடியாது. ஏன்னா ராமர் அப்போ பிறக்கவே இல்லயே. அப்படி ராம ராஜ்யத்துல இந்த ராமருடைய கதைய எல்லாரும் பேசிண்டு இருந்தா, அதனால ரொம்ப சந்தோஷமா இருந்தா, ராம மயமா ஆனந்த மயமா இருந்தா. ஸ்வாமிகள் இந்த இடத்துல சொல்வார் “நாமளும் ராமருடைய கதையை பேசிண்டு இருந்தா, இன்னிக்கும் என்னைக்கும் சந்தோஷமா இருக்கலாம். நமக்கு ராமர் தான் ராஜா”

ராமர் திரும்ப வந்தவுடன் பரதன் ராஜ்ஜியத்தை ராமரிடம் ஒப்படைச்சு “நீ இதை ஏத்துக்கோ, ஏதோ எங்கம்மா ஆசைப்பட்டு நீ இதை கொடுத்த. இனிமே இந்த பாரத்தை என்னாலே சுமக்க முடியாது, உன்னைத் தான் ராஜாவா ஆக்கணும்னு தசரதர் வளர்த்தார், நீ ராஜாவா இல்லைனா எங்களுக்கு எல்லாம் ரொம்ப நஷ்டம். ஒரு காளைமாடு இழுக்குற சுமைய ஒரு கன்னுகுட்டி இழுக்க முடியுமா,

ஒரு கழுகு பறக்கற மாதிரி ஒரு காக்கை பறக்க முடியுமா, தயவு செய்து நீ ராஜாவாயிருக்கணும்,

“யாவதாவர்த்ததே சக்ரம் யாவதீவ வசுந்தரா |

தாவத் த்வம் இஹ ஸர்வஸ்ய ஸ்வாமித்வம் அனுவர்தயா ||

“எதுவரைக்கும் காலச்சக்கரம் இருக்கோ, உலகம் இருக்கோ, அதுவரைக்கும் நீயே எங்களுக்கு ராஜாவாயிருக்கணும்” அப்படினு பரதன் கேட்ட உடனே, “ததேதி பிரதிஜக்ராஹ” “அப்படியே ஆகட்டும்” என்று சொல்லி ராமர் அவன் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டார் அப்டினு வரது. அப்படி ராமர் ஏற்று கொண்டதால், காலசக்கரம் இருக்கறவரைக்கும், நமக்கெல்லாம் ராமாயணம் படிக்கறவர்களுக்கும், ராம பக்தர்களுக்கும் ராமர் தான் ராஜா. “நாடாளும் நாயகா, வயலூரா” அப்படினு அருணகிரிநாதர் முருப்பெருமானை சொல்றமாதிரி, பக்தர்களுக்கு அவர்தான் ஸ்வாமி.

ராம ராம ராமானு ராமர் கதையே பேசிண்டு சந்தோஷமாயிருந்தா அப்படீங்கறது, நாம வந்து…அது ஒரு மனப்பழக்கம் னு தான் சொல்லணும். பக்தியிருந்தால் தான் திரும்ப திரும்ப ராமாயணத்தை கேட்டு, அதுல சந்தோஷப் படமுடியும். இது நான் ஸ்வாமிகள்கிட்ட பாத்துருக்கேன்.

இந்த வால்மீகி ராமாயணத்தை எடுத்துண்டாலே

முதல் சர்கத்தில் நாரதர் வந்து வால்மீகி பகவானை பார்க்கறார், வால்மீகி சில கேள்விகள் கேக்கறார், இந்த உலகத்துல, இந்த காலத்துல, ஒரு பதினாறு குணங்கள் சொல்றார். படிப்பு இருக்கணும், அழகு இருக்கணும், புத்தி இருக்கணும், வீரம் இருக்கணும் இப்படி எல்லா குணங்களும் நிறைஞ்சவனா யாராவது இருக்காளா, அப்படினு கேட்ட போது, நாரதர், “ஆமாம்! அப்படி ஒருத்தர் இருக்கார், அவர் பெயர் ராமர், அவருடைய சரித்ரத்தை சொல்றேன்”, என்று நூறு ஸ்லோகத்துல சங்க்ஷேப ராமாயணம்னு பேரு, நாரதா பகவான் அந்த ராமாயணத்தை வால்மீகி முனிவருக்கு உபதேசிக்கிறார். அப்படியொரு தடவை ராமாயணம் வருது. அதனால, கடைசி chapter-லதான் climax-இருக்கு thrilling-ஆ இருக்கும் அப்படினு ஒண்ணும் கிடையாது, வால்மீகி ராமாயணத்தோட கதை என்னனு முழுக்க நமக்கு முதல்லயே தெரியும்.

அடுத்தது பிரம்மா வந்து "நீ ராமாயணத்தை எழுது"னு சொன்னவுடனே, வால்மீகி முனிவர் உக்காந்து தன்னுடைய மனசுல அந்த ராம கதையை த்யானம் பன்றார். மனதில் வரித்துக் கொண்டார்னு வரும் போது, ஒரு பெரிய ஸர்கம் எல்லா நிகழ்ச்சிகளும் வரும். முழு ராமாயணத்தோட எல்லா காட்சிகளும் வரும், இதை எல்லாத்தையும் அவர் காவியத்துல எழுதினார், ஏழுகாண்டங்களும், இருபத்துநாலாயிரம் ஸ்லோகங்களும் கொண்ட ராமகாவியத்தை "ஸீதாயாஸ் சரிதம் மஹத்" அப்படினு அதுக்கு ஒரு இன்னொரு பெயர். ராமாயணம்னா, ராமன் போன பாதை அப்படினு அர்த்தம், ராமாயணம்னு ஒரு பேரு சீதையுடைய உத்தமமான சரிதம், பெருமையான சரித்திரம் அப்டின்னு ஒரு பேரு. அந்த காவ்யத்தை எழுதிமுடித்தார். அப்பறம் அவர் அதை லவகுசர்களுக்கு சொல்லிவைச்சார். அதை அவா ராமரோட சபையிலியே அதை சொல்றா, அஷ்வமேத மஹாமண்டபத்தில அதை சொல்றா, அங்கேயிருந்து ஆரம்பிச்சது ராமாயணம்.

ஸுந்தரகாண்டத்துல ராமாயணம் திரும்ப திரும்ப வரும். ஸீதாதேவி கிட்ட ஹனுமார் தான் ராமரைப் பார்த்ததிலிருந்து ஆரம்பிச்சு, கிஷ்கிந்தா காண்டம் முழுக்க repeat பண்றார். அப்பறம் அவர் திரும்ப வந்து அன்ன ஆச்சுன்னு வானரர்கள் எல்லாம் கேட்ட போது "நான் நீங்க பார்க்க ஆகாசத்தில் கிளம்பினேன்." அப்படின்னு ஆரம்பிச்சு ஸுந்தரரகாண்டம் முதல் சர்கத்துலேர்ந்து அந்த அம்பத்தி ஏழாவது சர்கம் வரைக்கும் உள்ளதை ஒரு இருநூறு ஸ்லோகங்களில் அம்பத்தி எட்டாவது சர்கத்துல repeat பண்றார்.

அப்பறம் ராமர் கிட்ட வந்து சீதை எப்படி இருக்கா, என்ன சொன்னா, அதையெல்லாம் சொல்றார்.

யுத்த காண்டத்தில் ராமர் ராவண வதம் செய்துவிட்டு புஷ்பக விமானத்தில் அயோத்தி திரும்ப வரும்போது, நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் சீதைக்கு reverse order ல சொல்றார். "இங்கே தான் ராவணனை வதம் பண்ணினேன். இங்கே தான் கும்பகர்ணனை வதம் பண்ணினேன். இங்கே தான் லக்ஷ்மணன் இந்திரஜித்தை வதம் செய்தான். இதோ கடல் மேல் பாலம் கட்டி இருக்கேன் பார். இதோ ஹனுமாருக்காக இந்த மைனாக மலை வந்தது" அப்படின்னு reverse order ல கிஷ்கிந்தை, பஞ்சவடி, சித்ரகூடம் வரைக்கும் சொல்றார்.

அப்பறம் பரத்வாஜர் ஆஸ்ரமத்தை பார்த்த உடனே “நாம் போய் அவரை நமஸ்காரம் பண்ணுவோம்” என்கிறார். பரத்வாஜர் ராமரைப் பார்த்தவுடன் “ஹே ராமா! ஒரு குற்றம் செய்யாத நீ நாட்டை இழந்து இங்கே வந்திருந்த போது நான் வருத்தப் பட்டேன். அப்பறம் உனக்கு நடந்ததை எல்லாம் நான் இங்கே என்னுடைய ஞான திருஷ்டியினால் பார்த்துண்டே இருக்கேன்” என்று சொல்லி அவர் ஒரு வாட்டி ராமாயணம் முழுக்க சொல்றார். “இன்னிக்கு நீ வெற்றி வீரனாக விஜயராகவனாக நண்பர்களோடு வந்திருப்பது எனக்கு ரொம்ப சந்தோஷம். இன்னிக்கு நீ இங்கே தங்கி என்னுடைய விருந்து உபசாரத்தை ஏத்துண்டு, நாளைக்கு அயோத்திக்கு போ” னு சொல்றார். ராமரும் சரி என்று ஏத்துண்டு ஹனுமாரிடம் “நீ போய் பரதனிடம் நாங்கள் நாளைக்கு வரோம் என்று தகவல் சொல்லிவிடு. அவன் உயிரைப் பிடிச்சுண்டு இருக்கான்” என்கிறார்.

ஹனுமார் அங்கே போய் பரதனிடம் ராமர் வரார்னு சொன்னவுடன் சந்தோஷத்தில் மூர்ச்சை ஆகிவிடுகிறான். அப்பறம் தெளிந்து ஹனுமாரிடம் “நடந்த விஷயங்களைச் சொல்லுங்கள்” என்று கேட்க, ஹனுமார் விஸ்தாரமாக பரதனுக்கு எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்றார். இப்படி வால்மீகி ராமாயணதுக்குள்ளேயே திரும்ப திரும்ப ராம கதை வந்துண்டே இருக்கும். அதைச் தவிர சுருக்கமாக பல தடவை. ஸ்வயம்ப்ரபா, ஸுரசை கிட்ட ஹனுமார் சொல்றார். ராமரே ராவணனோடு யுத்தம் பண்ணும் போது, எதுக்காக நான் வாலியை வதம் பண்ணினேனோ, எதுக்காக வாணர்களை கொண்டு ஸீதா தேவி இருக்கும் இடத்தை கண்டுபிடித்தேனோ, அப்படி எல்லாத்தையும் சொல்லி, அந்த கோபத்தை இப்போ காண்பிக்கிறேன் என்று சொன்னவுடன் அவருக்கு வீரம் வந்துடும். அப்படி ராமருக்கே உத்சாகத்தை குடுக்க கூடிய ஒரு கதை ராமாயணம்.

அப்படி ராமாயணத்தை திரும்ப திரும்ப சொல்றதுல ஸ்வாமிகளுக்கு ரொம்ப திருப்தி. திரும்ப திரும்ப கேட்பார். திரும்ப திரும்ப சொல்வார். அதுல சந்தோஷப் படுவார். அவ்வளவு சாரமான விஷயம். அப்படி திரும்ப திரும்ப கேட்கக்கூடிய ஒரு பக்தியை ராமர் தான் நமக்கு குடுக்கணும். ஸத்குரு தான் குடுக்கணும்.

ஸ்ரீமத்பாகவத்தோட முடிவில் பன்னிரெண்டாவது ஸ்கந்தத்துல பன்னிரெண்டாவது அத்யாயத்தில் இரண்டு ஸ்லோகங்கள் வரது.

ததேவ சத்யம் ததுஹைவ மங்களம்

ததேவ புண்யம் பகவத்குணோதயம் |

ததேவ ரம்யம் ருசிரம் நவம் நவம்

ததேவ சச்வன் மனஸோ மஹோத்சவம் |

ததேவ ஷோகார்ணவ ஷோஷணம் ந்ருணாம்

யதுத்தமஸ்லோக யஷோனகீயதே |

யதுத்தமஸ்லோக யஷோனகீயதே – பகவானுடைய புகழை பாடக்கூடிய அந்த கதைகள் அந்த கீதங்கள், ததேவ சத்யம் – அது தான் சத்யம். உலகத்தில் மத்த பேச்செல்லாம் வீண் தான். சத்யம் கிடையாது. ததுஹைவ மங்களம் – அது தான் பரம மங்களமானவை. ததேவ புண்யம் – அதுவே புண்யம். புன்யஷ்ரவணகீர்த்தன: என்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் வருவது போல, பகவானுடைய கதைளை கீர்த்தனம் பண்ணினாலோ ச்ரவணம் பண்ணினாலோ நமக்கு புண்யம் கிடைக்கும். பகவத்குணோதயம் – பகவானுடைய குணங்களை சொல்லும் அவை தான் உத்தமான ஸுக்திகள். ததேவ ரம்யம் – அது தான் ரொம்ப ரம்யமாக இருக்கு. வேட்கவே இனிமையாக இருக்கு. ருசிரம் – ரொம்ப ருசியாக இருக்கு. melodious and sweet. நவம் நவம் – ஒவ்வொரு நாளும் புதுமையாக இருக்கு. நாம வாழ்க்கையில் யோசிச்சு பார்த்தால், எல்லாமே பண்ணினதையே தான் பண்ணிண்டு இருக்கோம். monotonous தான். ஆனா அதை ருசிச்சு ருசிச்சு பண்ணிண்டு இருக்கோம். ஆனால் பகவானோட கதைகளை திரும்ப திரும்ப கேட்டாலும் புதுசு புதுசா மனசுல அர்த்தங்கள் தோணும், ஸ்புரிக்கும். அதுனால அது தான் நவம் நவம்.

ததேவ சச்வன் மனஸோ மஹோத்சவம் – அது மனசுக்கு ஒரு மகோத்சவம் மாதிரி இருக்கு என்கிறார் சுகர். மலையாளத்துல ஆன்சன் நம்பூத்ரி னு ஒரு பெரியவர் இருந்தார். அவா எல்லாம் ஒரு team. அவா ஆயிரம் ஆவர்த்தி பாகவதம் பாராயணம் பண்ணின பின்ன தான் வெளியில பிரவசனத்துக்கு வருவா. அவாளோட பாகவத ப்ரவசன முறை எப்படின்னா, கார்த்தால ஆறு மணியிலேர்ந்து சாயங்காலம் ஆறு மணி வரைக்கும் படிப்பா. தம்பி அம்பது ஸ்லோகம் படிச்சா, அண்ணா அதுக்கு அர்த்தம் சொல்வார். அப்பறம் turn

மாத்திண்டு அண்ணா ஒரு அம்பது ஸ்லோகம் படிச்சா தம்பி அதோட jist அர்த்தம் சொல்வார். இப்படி முழு பாகவதத்தையும் text படிச்சு, அதோட அர்த்தத்தை ஏழு நாட்களில் சொல்லுவா. இது ஸ்வாமிகளுக்கு ரொம்ப பிடிக்கும். ஒவ்வொரு வருஷமும் சென்னையில் ஒரு வாரம் பண்ணுவா. முப்பத்தஞ்சு வருஷம் ஸ்வாமிகள் ஏழு நாளும் போய் கேட்பார். அந்த ஆஞ்சன் நம்பூத்ரிக்கு நம்ம ஸ்வாமிகள் கிட்ட ரொம்ப பக்தி. உத்தவர்னு சொல்லி ஸ்வாமிகளை பார்த்தாலே வந்து கட்டிப்பார். இப்படி பகவானுடைய கதைகளில் ரமிக்கறது ஸ்வாமிகள் பண்ணி காண்பிச்சு இருக்கார். அந்த approachனால் தான் ஸ்வாமிகள் ராமாயணத்தையும் பக்தி பிரதானமாக சொல்லுவார். ததேவ ஷோகார்ணவ ஷோஷணம் ந்ருணாம் – நாம் வாழ்க்கையில் பல கவலைகளை படறோம். பகவானோட பரம மங்களமான கதைகளைக் கேட்டால் கவலைகள் என்ற கடலை அது வற்ற அடித்துவிடும். யதுத்தமஸ்லோக யஷோனகீயதே – அதுனால நாம் அதைத்தான் கேட்டுண்டே இருக்கணும். அதைத்தான் பாடணும்.

உலக விஷயங்களைப் பற்றி வருத்தப் படறது, worry பண்றது ரெண்டு காரணத்துனால தேவை இல்லை. ஒண்ணு "சிதைங்கிறது மரித்த உடம்பை தான் எரிக்கறது. சிந்தைங்கறது சிந்தா னா சமஸ்க்ருதத்துல worry பண்றதுனு அர்த்தம். அது உயிரோடவே மனுஷனை எரிக்கறது னு ஒரு ஸ்லோகம் இருக்கு. இன்னும் ஒண்ணு "சிந்த்யமான: சமஸ்தானாம் க்லேஷானாம் ஹானிதோ ஹி ய: | சமுத்ஸ்ருஜ்ய அகிலம் சிந்த்யம் ஸோச்யுத: கிம் ந சிந்த்யதே || அப்படின்னு ஒரு ஸ்லோகம். விஷ்ணு சஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஆதிசங்கரர் இதை quote பண்ணி இருக்கார். சிந்த்யமான: சமஸ்தானாம் க்லேஷானாம் – உனக்கு என்னென்ன கவலைகள் இருக்கோ, அதுக்கு நீ என்னென்ன யோசனைகள் பண்றயோ, அதுக்கெல்லாம் முடிவு பகவான் கிட்ட தான் இருக்கு. அதுனால இந்த கவலை படறதை விட்டுட்டு பகவானை சிந்தனை பண்ணினேன். அவர் உன் கஷ்டத்தை போக்கிடுவார். நீ குருட்டு யோசனை பண்ணி என்ன ஆகப் போகிறது? "சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை"னு ஔவைப் பாட்டி சொன்ன மாதிரி இந்த ஸ்லோகம் இருக்கு. அதுனால இந்த ராமாயணத்தை மேலும் மேலும் படிப்போம். பாடுவோம். கேட்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

वामेभूमिसुता पुरस्तु हनुमान्
पश्चात् सुमित्रासुत: ॥
शत्रुघ्नो भरतश्च पार्श्व दलयो:
वाय्वादि कोणेषुच ॥
सुग्रीवश्च बिभीषणश्च युवराट्
तारासुतो जांबवान् ॥
मध्ये नीलसरोज कोमलरुचिं
रामं भजे श्यामलम् ॥



श्री राम चन्द्राश्रित सदगुरूणां
पादारविन्दं भजतां नराणाम् ।
आरोग्यं ऐश्वर्यं अनन्त कीर्ति:
अन्ते च विष्णो: पदमस्ति सत्यम् ॥